tered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

சு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 15 திங்கட்கிழமை (01.10.2012) பக்கங்கள் 24 ஓசை - 001

விஷானி நகை மாளிகை


மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு



இல. 187, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)





















## மூன்றாவது ஆண்டில் தினமுரசு

ணக்கம்

மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது தினமுரசு ளிதழ். வாசகர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் விளம் தாரர்களுக்கும் தினமுரசு குடும்பத்தின் நன்றியையும் வாழ்த் க்களையும் பகிர்ந்துகொள்கிறோம்.

எமக்குத் தொழில் கவிதை என்ற பாரதி தொடர்ந்து நாட்டி த உழைத்தல் இமைப்பொழுதும் சோராதிருத்தல் என்கி ன். எமக்குத் தொழில் பத்திரிகைத்துறை என்று சொல்ல வண்டுமானால், நாம் உண்மையான தரவுகளை தகுந்த தாரங்களுடன் சொந்த விருப்ப உணர்ச்சி ஆவேசங்களைக் லக்காமல் மக்களுக்குத் தரும் தொழில்முறைப் பத்திரிகையா களாக இருக்கவேண்டும். அப்படித்தான் நமது தமிழ்ப் பத்தி கைத்துறை இருக்கிறதா என்பதை இத்துறைசார்ந்த ஒவ் வாருவரும் கேட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மக்களுக்கான பத்திரிகைக் கலாசாரத்திலிருந்து பிறழ்ந்து ரசியல் சார்ந்த உணர்ச்சிமைய ஊடகக் கலாசாரத்தையே து பத்திரிகைகள் பெரும்போக்காகக் கொண்டுள்ளமை க்குத் தெரியும். அதனால்தான் வன்னியிலும் குடாநாட்டி ம் மீள்குடியேறியிருக்கும் மக்களின் இருப்பிடங்களை இந்த ழைக்காலத்துக்குள் ஒழுங்குபடுத்திட உதவவேண்டும் என்ற வசரத் தேவையை விட, நில ஆக்கிரமிப்பு எதிர்ப்புக் கோஷங் ளோடு மக்கள்சார்ந்த அக்கறையை முடித்துவிடுவதாக இந் பெரும்பான்மைப் பத்திரிகை எழுத்துக்கள் இருக்கின்றன.

செய்தி சார்ந்த விடயங்களாக இருந்தாலும், அறிவியல் சார் விடயங்களாக இருந்தாலும் அல்லது கலைத்துவம் சார்ந்த கிழ்வூட்டும் விடயங்களாக இருந்தாலும் ஊடகங்களால் கட் மைக்கப்படுகின்ற அனைத்து வடிவங்களுமே மனிதனு டைய சிந்தனைத் தளத்தை ஆக்கிரமிப்பதை நோக்கமாகக் காண்டவைதான்.

இந்த ஆக்கிரமிப்பு, மக்களது தேவைகளை மையப்படுத்தி வர்களை வாழவைப்பதற்கு உதவுவதாக இல்லாமல், சொந்த சியல் லாபங்களைப் பெற்றுக்கொள்வதோடு முடிந்து விடு துதான் நமது இன்றைய சூழலின் சோகம்.

தினமுரசு நாளிதழ் இன்னும் விற்பனையில் சாதனைகள் டைக்காதிருக்கலாம். மக்கள் இதைத் தலையில் தூக்கிவைத் கொண்டாடினார்கள் என்று மிகைப்படுத்திச் சொல்ல முடி திருக்கலாம். நாம் எவ்வளவோ நினைத்து அதையெல்லாம் முமையாகச் செய்ய முடியாமல் போயிருக்கலாம்.

ஆனாலும், தினமுரசு தன்னால் முடிந்தவரை யதார்த்த லைமைகளையும் நடைமுறைச்சாத்தியமான விஷயங்க ளையும் மக்களிடம் கொண்டுபோக முயன்றிருக்கிறது. விற் னைக்காக உணர்ச்சிகர பரபரப்புகளை எழுதவில்லை. மக் டமுள்ள அதிருப்திகளையும் கோபத்தையும் விற்றுக் காசா க முயலவில்லை. எது நடக்குமோ எது சாத்தியமோ எது க்களது வாழ்வுக்குத் தேவையோ அதன்பால் நின்றே னமுரசு செய்திகளைத் தருவதில் உறுதியாயிருந்திருக்கிறது.

இன்னமும் நாம் செய்யவேண்டியது எவ்வளவோ இருக்கி து என்ற பிரமிப்பும் கூடவே வந்திருக்கிறது. அந்த வகையில் ர்க்கையில், தினமுரசின் வளர்ச்சியும் விளைச்சலும் நம் மன க்கு நிறைவுதருவதாகவே இருக்கிறது. வயிற்றில் பசியோடு யலில் சாய்ந்து கிடக்கும் கதிர் பார்த்துச் சிரிக்கும் விவசாயி ன் நிறைவு. அந்த நிறைவோடும் பசியோடும் தொடரும் நம் யணம். பயணத்தில் இணையும் உங்களனைவருக்கும் னமுரசு குடும்பத்தின் வாழ்த்துக்கள். - ஆசிரியர்

# தினமுரசுக்கு வாழ்த்து



(யாழ்ப்பாணம்)

தினமுரசு நாளிதழ் இரண்டாவது அகவையைப் பூர்த்தி செய்து மூன்றாவது அகவையில் காலடி வைப்பதையிட்டு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்வடைகின்றேன் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தினமுரசு தினப்பதிப்பு இன்று தனது மூன்றாவது ஆண்டில் கால்பதிப்பதை முன்னிட்டு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மெய்ப்பொருள் - சமத்துவம் - சகோதரத்துவம் என்ற மகுட வாக்கியத்துடன் வீறுநடைபோடும் தினமுரசு தன் பணியை மக்களுக்குச் சரியாகச் செய்து வருகின்றது. மக்களுக்கொரு சரியான வழி காட்டியாக

23 ஆம் பக்கம் பார்க்க

# விரிந்த தமிழகத்திற்கு விடுதலைப் புலிகள் முயற்சி

தமிழகத்தையும் ஈழத்தையும் இணைத்து விரிந்த தமிழகம் அமைக்கும் திட்டம் விடுதலைப் புலிகளுக்கு இருப்பதாகவும், அதற்கான முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தமிழக கியூ பிரிவு பொலிஸ் உயரதிகாரியான எஸ்.பி.சம்பத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில், விடுதலைப் புலிகள் மீதான தடை நீடிப்புக்கு சரியான காரணங்கள் உள்ளனவா? இல்லையா? என்பது தொடர்பில் புதுடில்லி உயர் நீதிமன்ற நீதிபதி வி.கே.ஜெய் தலைமையில் நடைபெற்றுவரும் தீர்ப்பாயம் விசாரணையில் ஆஜராகி தகவல் வழங்குகையிலேயே அவர் மேறகண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், விடுதலைப் புலிகள் மீதான தடை நீடிப்புக்கு ஆதரவளிக்கும் வகையிலான ஆவணங்களும் அவரால் இதன்போது நீதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்த ஆவணங்கள் இரு பெரிய தொகுப்புகளாக சீல் வைக்கப்பட்ட உறைகளில் அடைக்கப்பட்ட நிலையில் சமர்ப்பிக்கப்பட்டன என்று இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

அதில் விடுதலைப் புலிகளும், அதன் ஆதரவு அமைப்புகளும் மேற்கொண்ட சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்கின் ஆவணங்கள் அடங்குவதாக பொலிஸ் அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

## நல்லிணக்க முயற்சிகளை சீர் குலைக்கும் இந்தியா

### அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

யுத்தத்தின் பின்னரான நல்லிணக்க முயற்சிகளைச் சீர்குலைப்பதற்கு இந்திய ஊடகங்கள் முயன்று வருவதாகவும், இதன் ஒருகட்டமாகவே, நலலிணக்க முனைப்புகளுக்கு எதிரான பிரசாரங்களை, அவ் ஊடகங்கள் மேற்கொண்டு வருவதாகவும் அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கை விவகாரம் தொடர்பாக, இந்து உள்ளிட்ட இந்தியாவின் முக்கிய ஊடகங்களில் அண்மையில் கருத்துக்கள் வெளிவந்த நிலையிலேயே அரசாங்கம் மேற்கண்ட குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது. தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில்

23 ஆம் பக்கம் பார்க்க

## அரசு - கூட்டமைப்பு பேச்சு மத்தியஸ்தம் வகிக்காது இந்தியா

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும், அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளுக்கு இந்தியா மத்தியஸ்தம் வகிக்காது என அறிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் மீளவும் பேச்சுவார்த்தைகளை ஆரம் பிப்பதற்கான களத்தை அமைத்துக் கொடுக்கும் முனைப்புக்களில் இந்தியா ஈடுபடும் எனத் தெரிவிக்கப்படுகிறது. தேசிய இனப்பிரச்சினைக்கு காத்திரமான தீர்வுத்திட்டமொன்று எட்டப்பட வேண்டுமென்பதே இந்தியாவின் நோக்கமாக அமைந்துள்ளது எனக் குறிப்பிடப்படுகிறது. எதிர்வரும் 10 ஆம் திகதி தமிழ்த் தேசியக்

23 ஆம் பக்கம் பார்க்க

# ஷப்றா நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யமுடிவு?

ஷப்றா நிதி நிறுவனத்தில் 1993 ஆம் ஆண்டு வரை தமது பணத்தை வைப்பிலிட்ட மக்கள் அந்நிறுவ னத்திற்கெதிராக வழக்குத் தொடர நடவடிக்கைகளை எடுத்து வருவதாக இணையத்தளத் தகவல்கள் தெரிவித்தன.

இந்நிதி நிறுவனத்தில் தமது உழைப்பை வைப்பிலிட்டுப் பின்னர் ஏமாற்றப்பட்ட நிலையில் 1990 களில் யுத்தம் காரணமாகப் புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்று குடியேறிய மக்களே இப்போது திரும்பிவந்து வழக்குத் தொடரும் அலுவல்களில் ஈடுபட்டு வருவதாகத் தெரியவருகிறது.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள பிரபல சட்டத்தரணிகளுடன் இவர்கள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

சர்வதேச மனித உரிமை நிறுவனங்களின் அறிக்கைகளில் இந்நிறுவனத்தில் ஓய்வூதியர்கள் வைப்பிலிட்டிருந்த ஏறத்தாழ 60 மில்லியன் ரூபாய்கள் சூறையாடப்பட்டதாகவும், இதைவிட திருமணமாகாத தமது பெண் பிள்ளைகள் பெயரிலும், குழந்தைகள் பெயரிலும் பல ஏழைப்

23 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா வளாக முதல்வராக பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் முதல்வராக க.க.அருள்வேல் இன்று பதவியேற்கிறார்.

யாழ்.பல்கலைக்கழக கணக்கியல் துறைத் தலைவராகவும், வணிகமாணி கற்கைநெறியின் இணைப்பாளராகவும் பணிபுரிந்த இவர் இன்று காலை வவுனியா வளாகத்தின் முதல்வராக பதவிப் பிரமாணம் செய்கின்றார்.

நிர்வாக ரீதியிலான ஆளுமை மிக்க ஒருவர் இவ்வாறு வவுனியா வளாகத்திற்கு முதல்வராக வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வித்தியாலயத்துக்கு அடிக்கல் நாட்டல்

(யாழ்ப்பாணம்)

மகிந்தோதய விஞ்ஞான கூட வேலைகளை ஆரம்பிக்கும் திட்டத்தின் கீழ் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தின் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று காலை 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டி வைக்கவுள்ளார்.


நளினின் MEGA OFFER

தினமுரசின் வளர்ச்சி முன்னகர வாழ்த்துக்கள்

Lap Top வாங்கி
* 7.2 Huawie Dongle
* Kaspersky 2012 Intenet Security
* Mouse HeadPhone
என்பவற்றுடன் HP நிறுவனத்தின் Offeer இனையும்
பெற்றுச் செல்லுங்கள்







Assemble PC வாங்கி
* 7.2 Huawie Dongle
* Kaspersky 2012 Intenet Security
* Mouse HeadPhone

* i3, i5, i7 (3 Years Warranty)
* ATOM (1Year Warranty)
* Flash, Dongle, Micro SD
மேலும் அனைத்து கணினி உதிரிப்பாகங்களும் குறைந்த விலையில்

◈ DELL, Hp Authorized Business Partner
◈ ஏராளமான Lap Top தெரிவுகள்

மேலதிக விபரங்களுக்கு WWW facebook/nalinjt.

(C/1870)

NALIN IT 194/2, Parameswara Junction, Jaffna.
T.P: 077 7667975, 222 1121 / 1166


## தமிழ்-பௌத்த அறநெறிப் பாடசாலை யாழில் நேற்று அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்-பௌத்த தர்ம அறநெறிப் பாடசாலை நேற்று யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

நேற்று மாலை யாழ்.நாக விகாரை யாத்திரிக விடுதியில் அங்குரார்ப்பண நிகழ்வு இடம் பெற்றது.

யாழ்.நாக விகாராதிபதி தலைமையில் இடம்பெற்ற விழாவில் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க, யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், பௌத்த குருமார்கள், இராணுவ உயரதிகாரிகள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



பௌத்த மதம் தனியே சிங்களவர்களுக்கு சொந்தமானதல்ல. தமிழர்களும் அதன் தர்மத்தை உணர்ந்து, கற்றறிந்து எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக வாழ வேண்டும். இப்பாடசாலை மூலம் சமுதாயத்தில் பிரச்சினைகள், ஏற்படாது மொழிப்பிரச்சினை ஏற்படாது, சிறுபான்மை, பெரும்பான்மையினம் என்று எல்லாம் பிரிவினைகள் ஏற்படாது. இதன் மூலம் எதிர்காலச் சந்ததியினர் ஒற்றுமையாக வாழலாம் என்று யாழ். கட்டளைத் தளபதி தெரிவித்தார்.

அங்குரார்ப்பண நிகழ்வில், தமிழ்மாணவர்கள், யாழ்.தளபதி, அரச அதிபர் ஆகியோர் மாணவர்களின் பெயர்களை பாடசாலையின் பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்து அறநெறிப் புத்தகங்களையும் வழங்கி ஆரம்பித்து வைத்தனர்.

மகரகம பகுதியில் அண்மையில் தமிழ் பௌத்த அறநெறிப் பாடசாலை ஒன்று ஆரம்பித்து இந்து சமய அறநெறிகள் கற்பிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

## சிறுவர் தின விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் ஐங்கரன் முன்பள்ளி சிறுவர் தின விழா இன்று பிற்பகல் 2.00 மணிக்கு ஐங்கரன் முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஐ.டி.எம் நிறுவன பிரதம முகாமையாளர் து.திரியம்பகன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் செல்வி.பி.தர்சினி, தென்மராட்சிக் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.பாக்கிராஜா, கௌரவ விருந்தினர்களாக கச்சாய் உபஅலுவலகப் பொறுப்பதிகாரி திருமதி பு.நடராஜா, அல்லாரை அ.த.க. பாடசாலை அதிபர் திருமதி க.யோகநாதன், அல்லாரை கிராம அலுவலர் சி.சுதாகர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்விழாவில், மாணவர்களின் கலைநிகழ்வுகளும், மாணவர் கௌரவிப்பும் சிறுவர் தின விழாவினை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (11)


புதியன தாங்கி புலரும் பொழுதினில் கைகளில் தவளும் 'தினமுரசே' நீ வாழி....!!

ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா

◈ 2 வருடத்தில் நிரந்தக் குடியுரிமை பெற சட்டரீதியான அருகதை
◈ குழந்தைகளின் கல்விக்கான ஆலோசனை
◈ வேலைவாய்ப்பிற்கான ஆலோசனை
◈ கணவன் அல்லது மனைவி 54 வயதிற்குட்பட்டவர்கள்

ஆஸ்திரேலியா விசா ஆலோசனைத்துறையில் தனித்துவமான பல வித வெற்றிகளைச் சந்தித்த நிறுவனம் நாங்கள் மட்டுமே.

நியுசிலாந்து குடும்ப விசா

◈ கணவன் அல்லது மனைவி பட்டதாரி அல்லது டிப்புளோமாதாரிகள்
◈ ஆங்கிலமொழி மூலம் பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்தால் IELTS தேவையில்லை அன்றேல் 5.5 புள்ளிகள் ACADAMIC அவசியம்.
◈ 10 இலட்சம் வங்கி அனுசரனை போதுமானது.

நியுசிலாந்து STUDENT VISA

◈ 24 வயதிற்குட்பட்ட இளைஞர் யுவதிகள்
◈ IELTS 5.5 புள்ளிகள் அவசியம்.
◈ வேறு ஒருவரின் வங்கி வைப்பை அனுசரனையாகக் காட்டக்கூடிய வாய்ப்பு
◈ 2 வருடங்களில் PR பெறலாம்.
◈ சர்வதேச தரத்திலான கல்வி

சைப்பிரஸ் ஐரோப்பிய நாடு

◈ மாதாந்தம் பகுதிநேர தொழில் வாய்ப்பின் மூலம் 100000.00 வரை சம்பாதிக்கலாம்.
◈ வங்கி அனுசரனை எதுவும் தேவையில்லை.

மலேசியா STUDENT VISA

◈ IELTS புள்ளிகள் தேவையில்லை.
◈ வங்கி அனுசரனை எதுவும் தேவையில்லை.
◈ பகுதி நேரத்தொழில் வாய்ப்பிற்கான ஆலோசனை

புதன்கிழமைகளில் திறக்கப்படமாட்டாது.



திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்,
(PV 82703),
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.
0212219016

வியாபார விசாரணைகள் தொலைபேசி மூலம் இடம்பெறா.

திசைகாட்டியின் மற்றுமொரு சமூக நோக்கோடு கூடிய கைங்கரியம் தற்போது எமது பிரதேசத்தில்

❐ வர்த்தகர்கள் சிலர் பொருளாதார நெருக்குதல்களைச் சந்தித்து தலைமறைவாகி வருவதுடன் அவருடன் தொடர்பைக் கொண்ட ஏனைய வணிகர்கள் அவலத்திற்குள்ளாகின்றனர்.
❐ பல சிறு வணிகர்கள் காசோலை மோசடி, இன்னும் கொடுக்கல் வாங்கல்களிற்காக நீதிமன்றங்களில் காணப்படுகின்றமை.
❐ எம் பிரதேசத்தில் அளவு கடந்து காணப்படும் வங்கிகள் நிதி நிறுவனங்கள் போட்டா போட்டிக்கு அள்ளி வழங்கும் கடன்களால் ஏற்படும் அளவு கடந்த கடன் சுமையும்
❐ பல பெரிய சிறிய உற்பத்தி நிறுவனங்கள் தமது முகவர்களாக எம்மவர்களை ஆசை காட்டி உள்ளீர்த்து அவர்களுக்கு அளவு கடந்த இருப்பை வழங்கி எம் வணிகர்களை அவல நிலைக்கு உள்ளாக்குதல்.

இவை எல்லாம் தவறான நிதி முகாமையால் ஏற்படும் பிரச்சினைகளாகும்
இதனால் காலத்தின் தேவை உணர்ந்து உங்கள்

திசைகாட்டி தனது இணை நிறுவனமாக

வணிக வழிகாட்டி

என்கின்ற முன் மாதிரியான வணிக ஆலோசனை நிறுவனம் ஒன்றை 20.09.2012 இல் திசைகாட்டியின் கூரையின் கீழ் ஆரம்பித்துள்ளது.

இங்கே வர்த்தகர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கு இத்துறையின் விற்பன்னர்களால் வியாபார கணக்குப் பதிவு, நட்டங்களிலிருந்து பாதுகாப்பு, வருமானவரி தொடர்பான ஆலோசனை, வியாபார மேம்படுத்தலில் ஆலோசனை, கடன் பெறக்கூடிய வழிமுறைகள் பற்றிப் பிரஸ்தாபிப்பு, வியாபார பதிவு செய்தலில் வழிகாட்டல், கடன்களிலிருந்து மீள வழிவகுத்தல், முறையற்ற கொடுக்கல் வாங்கல்களில் சட்டரீதியான ஆலோசனை.

இவை எல்லாவற்றையும் எழுத்து மூலம் குறைந்த கட்டணத்தில் வழங்கப்படும்

புதன்கிழமைகளில் விடுமுறையாகும்

தொடர்புகளுக்கு :- வணிக வழிகாட்டி

முன்மாதிரியான வணிக ஆலோசனை நிறுவனம்,
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

இது திசைகாட்டி பிறைவேற் லிமிட் இன் இணை நிறுவனமாகும்.

(C/1871)

# படையினரால் 1,778 வீடுகள் குடாநாட்டில் நிர்மாணம்

## தளபதி ஹத்துருசிங்க தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தில் பாதிக்கப்பட்டோருக்காக யாழ்.மாவட்டத்தில் 1,778 வீடுகள் படையினரால் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அச்சுவேலிப் பகுதியில் பாதுகாப்பு படைத் தலைமைய கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

யாழ். மக்களுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் இடையில் நல்ல ஒற்றுமை நிலவுகின்றது. அத்துடன், யாழ்.மாவட்டத்தில் பல்வேறுப்பட்ட அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. யுத்தம் முடிவிற்கு வந்த பின்னர் யாழில் நிலைகொண்டிருந்த பாதுகாப்பு படையினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு படையினர் குறைவாக இருந்தாலும், தமது பாதுகாப்பு நடவடிக்கைகளில் கவனமாக செயற்பட்டு வருகின்றார்கள்.

கூடுதலான அரசியல்வாதிகளும், அரசியல் கட்சிகளும் கொழும்பில்தான் இருக்கின்றார்கள். யாராவது யாழ். மாவட்ட மக்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தார்களா? ஆனாலும், படையினர் குறைவாக இருந்தாலும் தமது நடவடிக்கைகளையும், பொது மக்களுக்கு உதவும் பங்களிப்பினையும் திருப்தியாக செய்து வருகின்றார்கள்.

யாழ்.மாவட்டத்தில் வறுமைப்பட்ட மக்களுக்கு பாதுகாப்புப் படையினரால் ஆயிரத்து 776 வீடுகள் யுத்த காலத்தின் பின்னரான 3 வருட காலத்தில் நிர்மாணித்துக் கொடுக்கபட்டுள்ளன. அத்துடன், நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்ட இரு வீடுகளுடன் ஆயிரத்து 778 வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

எவ்வளவு படையினர் இருக்கின்றார்கள் என்பது முக்கியமல்ல. அவர்களுடைய சக்தியும், பலமும்தான் முக்கியம். அவர்கள் எவ்வாறான சேவைகளை மக்களுக்கு வழங்குகின்றார்கள் என்பது தான் முக்கியம். பாதுகாப்புப் படையினரின் சேவைகளைப் பெறுபவர்கள் நல்ல மக்களாகவும், ஆடம்பரமான வாழ்க்கை வாழ வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு.

அத்துடன், தமிழ், சிங்களம், முஸ்லிம் என்ற இன பேதமின்றி ஒற்றுமையாக வாழ வேண்டும். அவ்வாறு வாழ்ந்தால், கல்வி மற்றும் தொழில்நுட்ப ரீதியாக வளர்ச்சி அடைந்து வரும் இலங்கை இன்னும் பல முன்னேற்றத்தினை அடைய முடியும். அதற்கு மக்களின் ஒற்றுமையும், சமாதானமும் முக்கியம் என்றார்.

# புலமைப் பரிசில் பரீட்சையில் வாதரவத்தை மாணவன் சாதனை



கடந்த பன்னிரண்டு வருடங்களுக்குப் பின்னர் புத்தூர் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவர் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பாடசாலைக்குப் பெருமையைத் தேடிக் கொடுத்துள்ளார்.

நடந்து முடிந்து தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் மேற்படி பாடசாலையில் கல்வி பயின்று வரும் கேசவரூபன் மதுமிலன் என்ற மாணவனே 171 புள்ளிகளைப் பெற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் பல வருடங்களுக்குப் பின்னர் பாடசாலைக்கும், அக்கிராமத்துக்கும் பெருமை தேடிக் கொடுத்துள்ளார்.

இவ்வாறு பெருமை தேடிக் கொடுத்த மாணவனையும், அம்மாணவனை வழிப்படுத்தி சித்தியடைய வைத்த ஆசிரியர் இளங்கோவையும், கல்லூரிச் சமூகத்தவர்களும் வாதரவத்தைக் கிராம மக்களும் வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

இதே வேளை இப்பாடசாலையைச் சேர்ந்த மேலும் நான்கு மாணவர்கள் 100 இற்கு மேற்பட்ட புள்ளிகளையும், பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் நிலையத்துக்கு கள்ளக் "கரண்ட்"

(கனகராயன்குளம்)

கனகராயன் குளம் பொலிஸ நிலையத்துக்குச் சட்டவிரோதமாக மின்சாரம் பெறப்பட்டு வருகிறது.

இதனால் அப்பகுதியில் அடிக்கடி மின்ஒழுக்கு ஏற்பட்டு வருகிறது. நேற்று முன்தினம் இப்பகுதியில் நடமாடிய மாடு ஒன்று மின் ஒழுக்கில் சிக்கி உயிரிழந்துள்ளது.

குறிப்பாக இப்பொலிஸ் நிலையத்தின் பெயர்ப்பலகைக்கு இணைக்கப் பட்டிருக்கும் மின் சாரக் கம்பியில் இருந்து மின் ஒழுக்கு ஏற்பட்ட வண்ணமிருக்கின்றது.

அதற்கு அண்மையில் பேருந்து தரிப்பிடம் இருப்பதால் ஆபத்து அதிகமுள்ளது. இது குறித்து பல தடவை முறைப்பாடு செய்தும் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (12)

# நிரந்தரக் காவலாளியை நியமிக்குமாறு கோரிக்கை

(வடமராட்சி)

நாகர் கோவில் அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு நிரந்தர காவலாளி ஒருவரை நியமிக்காமையால் பெரும் அசௌகரியங்களை பாடசாலை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பாடசாலைக்கென காவலாளியின்மையால் இவ்வருட இரண்டாம் தவணை விடுறைக்கு முன்னர் பாடசாலையின் அலுவலகத்திலுள்ள அலுமாரி ஒன்றை உடைத்து பெறுமதியான பொருட்கள் திருடிச் செல்லப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட போதும் எவரும் கைது செய்யப்படவில்லை. எனவே பாடசாலையின் விடுமுறைக் காலத்தை கருத்தில் கொண்டு அதிபரின் அனுமதியுடன் பாடசாலைச் சமூகத்தினால் தற்காலிகமான காவலாளி ஒருவர் நியமிக்கப்பட்டு பாடசாலை வளங்கள் பாதுகாக்கப்பட்டு வந்தது.

தற்போது பாடசாலை சமூகத்தினால் தற்காலிகமான காவலாளி நியமிக்கப்பட்டுள்ளபோதிலும் பாடசாலை வளங்களுக்கு பாதுகாப்பு இல்லாமையால் ஒரு நிரந்தரக்காவலாளியை நியமித்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பாடசாலை சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது. அத்துடன் உலர் உணவுத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உலர் உணவுகளை சமைப்பதற்கான தொழிலாளர் ஊதியம் இதுவரை வழங்கப்படவில்லையென்றும் ஏற்கனவே இவர்களுக்குரிய ஊதியமும் வழங்கவேண்டுமென பாடசாலைச்சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது. (116)

# ஆசிரியர் இடமாற்றம்; பாதித்தால் முறையிடலாம்

(நெல்லியடி)

வ்வுனியா வடக்கு கல்வி வலயத்துக்கான ஆசிரியர் இடமாற்றச்சபை அண்மையில் கூடியது.

அடுத்த ஆண்டுக்கான இடமாற்றங்கள் தொடர்பாக ஆராய்ந்து முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களுக்கான இந்த இடமாற்றங்கள் தொடர்பான முடிவுகளால் யாராவது பாதிப்புக்குள்ளாக நேர்ந்தால் தமது மேன்முறையீடுகளைச் சமர்ப்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (12)

# புனரமைக்கப்படாத காரைநகர் வெளிச்ச வீடு

(யாழ்.நிருபர்)

காரைநகர் - கோவளத்தில் அமைந்துள்ள வெளிச்சவீடு நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாது பழுதடைந்து காணப்படுகிறது. படகோட்டிகளுக்கும், மீனவர்க்ளுக்கும் கரையைக் காட்டும் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்துவந்த இவ்வெளிச்ச வீடு கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக புனரமைக்கப்படாத நிலையில் உள்ளது.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் 1905 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இவ்வெளிச்சவீடு வடபகுதியில் உள்ள மிகப்பெரிய வெளிச்ச வீடாகும்.

கசூரினா சுற்றுலா மையத்துக்கு வருகைதரும் உல்லாசப்பயணிகள் இந்த வெளிச்ச வீட்டையும் சென்று பார்வையிட்டு வருகின்றனர். (10)



ஆவரங்கால் ஞானதோயா முன்பள்ளிக்கு அண்மையில் விஜயம் செய்த யூ.ஆர்.பிரண்ட் பௌண்டேசன் நிறுவனத் தலைவர் க.செவ்வேள் அங்குள்ள மாணவர்களின் கற்றல் தொடர்பாக ஆசிரியர்களிடம் கேட்டறிந்தார். இதன் பின்னர் அவர் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைப்பதனைக் காணலாம்.

# அரச முகாமைத்துவ உதவியாளர் சங்க 12 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலக மத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்க 12 ஆவது வருடாந்த பொதுக்கூட்டமும் பிரதிநிதிகள் சபைக்கூட்டமும் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

சங்கத்தலைவர் தா.தர்மரட்ணம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராசா, வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் செல்வி ஆர்.எஸ்.துரைராசா, வடமாகாண சமூகசேவைத்திணைக்கள பணிப்பாளர் திருமதி ந.இன்பராஜ், வடமாகாண பிரதித்தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன், யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார், வடமாகாண காணி நிர்வாகத் திணைக்கள கணக்காளர் ந.இராசநாயகம், வடமராட்சி சுருக்கெழுத்தாளர் கழகத்தலைவர் எஸ்.குலசிங்கம், சங்கத்தின் முன்னாள் தலைவர் இ.இரத்தினசிங்கம் ஆகியோர கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் அரச சேவையில் இதுவரை ஓய்வு பெற்ற அங்கத்தவர்களைக் கௌரவித்தல், புதிய நிர்வாகசபைத் தெரிவு என்பன இடம்பெறவுள்ளன.

# மாகாணசபை அதிகாரங்களை வெட்டிக்குறைக்க திட்டம்

## விழிப்புடன் இருக்க வேண்டும் என்கிறார் மனோ

(கொழும்பு)

மாகாணசபைகளுக்காக ஏற்கனவே பரவலாக்கப்பட்ட அதிகாரங்கள் சிலவற்றை மட்டுப்படுத்துவதற்கு அரசு திட்டமிட்டிருப்பதாகவும் இது விடயத்தில் குறிப்பாக கிழக்கில் அரசுடன் இணைந்து ஆட்சி நடத்தும் முஸ்லிம் காங்கிரஸ் மிகவும் விழிப்புடன் செயற்படவேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மேலும் கிழக்கில் தமிழ் - முஸ்லிம் கூட்டாட்சி ஏற்படவில்லை என்பது எமக்கு ஏமாற்றம் தான். ஆனால் அது நடந்து முடிந்து விட்டது. எனவே அதை வைத்துக்கொண்டு தொடர்ந்து தமிழர்களும், முஸ்லிம்களும் முரண்படக்கூடாது எனவும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்த முரண்பாடு முடிவுக்கு வரவேண்டும். இதன் அடையாளமாக, 13 ஆம் திருத்தத்தின்படி மாகாண சபைகளுக்கு பரவலாக்கப்பட்டுள்ள எந்த ஒரு அதிகாரத்தையும் வெட்டி குறைப்பதற்கும், மீளப்பெறுவதற்கும் மத்திய அரசு செய்யும் எந்த ஒரு கபட முயற்சிக்கும் கொள்கை அடிப்படையில் முஸ்லிம் காங்கிரஸ் உடன்படக்கூடாது.

தேசிய அரசியல் தீர்வில் முஸ்லிம் மக்களுக்கும் நியாயமான பங்கு இருக்கவேண்டும் என்பது மிகவும் நியாயமான நிலைப்பாடு ஆகும். அரசியல் தீர்வு என்பது அதிகார பரவலாக்கலை அடிப்படையாக கொண்டது.

எனவே முஸ்லிம் மக்களுக்கும் அரசியல் தீர்வைக் கோரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், திவிநெகும உட்பட, மாகாண சபைகளின் அதிகாரங்களை வெட்டி குறைக்கும் எந்த ஒரு சட்டமூலங்களுக்கும் உடன்படக்கூடாது என்றும் தெரிவித்தார்.

## மின்சார இணைப்பை வழங்கியமைக்கு நன்றி தெரிவிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு திருவிஸ்கபுரம் (தூண்காலை) புதிய குடியேற்றத் திட்டத்திற்கான மின்சார இணைப்பை இலவசமாக வழங்கியமைக்காக அப்பகுதி மக்கள் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவுக்கு தமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

கடந்த நான்கு வருடமாக மின்சாரமில்லாது இருளில் மூழ்கியிருந்த இப்பகுதிக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலமாக அமைச்சர் இலவச மின் இணைப்பைப் பெற்றுக்கொடுத்துள்ளார். இதனால் இக்கிராமத்தில் உள்ள மக்கள் சிரமமின்றி மின்சாரத்தைப் பெறக்கூடியதாக உள்ளதாக அவர்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

இதனையடுத்து இந்த மின் இணைப்பைப் பெற்றுக் கொடுப்பதில் உறுதுணையாக இருந்த ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சந்திரகுமார், சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலாளர் சிறி நெடுந்தீவு பிரதேச சபை தலைவரும் ஈ.பி.டி.பி.யின் நெடுந்தீவு பிரதேச அமைப்பாளருமாகிய தானியல் றெக்சியன் (ரஜீவ்) ஆகியோருக்கும் அப்பகுதி கிராம சேவையாளர் நடராசாவுக்கும் இப்பகுதி மக்கள் தமது நன்றியைத் தெரிவித்துள்ளனர்.

## அனல் மின் உற்பத்தி நாளாந்தம் 500 மில்லியன் செலவு

(கொழும்பு)

அனல் மின் உற்பத்திக்காக நாளாந்தம் 500 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான தொகை செலவிடப்படுவதாக இலங்கை மின்சார சபை தெரிவிக்கின்றது.

இதற்கமைய அனல் மின் மூலம் நாளாந்தம் 27 மில்லியன் அலகுகள் மின் உற்பத்தி செய்யப்படுவதாக சபையின் பிரதித் தலைவர் அநுர விஜேபால தெரிவித்துள்ளனர்.

நாட்டின் மொத்த மின் உற்பத்தியில் இது 85 சதவீத பங்களிப்பை வழங்குகின்றது. இதே வேளை நீர்மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த நீர்த் தேக்கங்களில் நீர்மட்டம் குறைவடைந்து காணப்படுவதாக சபையின் பிரதித் தலைவர் தெரிவித்துள்ளார். இதனால் நீர் மின் உற்பத்தி மூலம் 23 சதவீதமான மின்சாரமே உற்பத்தி செய்யப்படுகின்றது.

## காற்று வீசினாலும் இவர்கள் வாழ்வில் துயரம்

(புதுக்குடியிருப்பு)

தற்போது தொடர்ச்சியாகப் பெய்து கொண்டிருக்கும் மழையினால் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் மீள்குடியேறிய மக்கள் பெரும் துயர்நிலைக்கு ஆளாகியுள்ளார்கள் எனத் தெரியவருகிறது. தகரங்களினாலும், தரப்பாள்களினாலும் குடிசைகள் அமைத்து குடியிருக்கும் இம்மக்கள் மழை ஒழுக்கின் நிமித்தமும், வீசும் பலத்த காற்றின் தாக்கத்தாலும் அவதிப்படுவதோடு சில குடிசை வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதாகவும் அறிய முடிகிறது. இனிவரும் மாதங்களில் கனமழை பொழியும் நிலையில், வாழ்வாதாரம் சீரற்ற இம்மக்களின் வாழ்வு மேலும் மிகுந்த இடர்நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என்றும் கூறப்படுகிறது. (138)


ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்

Media Resources & Training Centre (MRTC)

இதழியல் டிப்ளோமா

முழுநேரம் - (இரண்டு ஆண்டுகள்)

கல்வியாண்டு - 2013 / 2014

Diploma in Journalism - 2013/2014

புதிய கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படுகின்ற இதழியல் டிப்ளோமா இரண்டாண்டு பயிற்சி நெறிக்கான, 2013 / 2014 ஆண்டுக்கான புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளார்கள். இதற்கான அனுமதிக்காக தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன. விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்: க.பொ.த. உயர்தர பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியும் பெற்றிருக்கவேண்டும்.

பயிற்சி வழங்கப்படும் துறைகள்

01. அச்சு ஊடகம் (Print Media)
02. இலத்திரனியல் ஊடகம் (Electronic Media)
03. இணைய ஊடகம் (New Media)

(C/2035)



பயிற்சிக் காலத்தில் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் பயிற்சிகள்

- செய்தித்தாள் மற்றும் சஞ்சிகை தயாரிப்பு
- றேடியோ மற்றும் ரி.வி. நிகழ்ச்சிகள் தயாரிப்பு
- ஊடக நிறுவனங்களில் செயன்முறைப் பயிற்சி
- சர்வதேச விரிவுரையாளர்களால் நடத்தப்படும் செயல்முறைப் பயிற்சிகள்
- ஆவணப்படத் தயாரிப்பு
- சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்ததான பயிற்சிகள்

அனுமதிக்கான தெரிவுமுறை

01. எழுத்துத் தேர்வு (எழுத்தாற்றல், அறிக்கையிடும் திறன், மொழியாற்றல், சமூக அறிவு)
02. நேர்முகத் தேர்வு

கற்கைக்காலம் - 2 ஆண்டுகள் (முழுநேரம்)

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதி - 30.10.2012

கட்டணங்கள்

கற்கைநெறிக் கட்டணம் ரூபா 20000.00
பதிவுக் கட்டணம் ரூபா 750.00
நூலக வைப்புப்பணம் (மீளளிக்கத்தக்கது) ரூபா 750.00
நூலக பயன்பாடு ரூபா 1000.00
மொத்தம் ரூபா 22500.00

விண்ணப்பப் படிவங்களை இல. 84 ஜும்மா பள்ளி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் ரூபா 100 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்திற்கு நேரடியாகவோ மற்றும் பதிவுத் தபாலிலோ அனுப்பிவைக்க வேண்டும்

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம் 0212229873

பதிவாளர்.





## இன்று சிறுவர் தினம்

உதயசங்கர்

# ஓடி விளையாடு பாப்பா!

**"ஓடி விளையாடு பாப்பா - நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா கூடி விளையாடு பாப்பா - ஒரு குழந்தையை வையாதே பாப்பா"**

மகாகவி பாரதியின் ஒவ்வொரு வரியிலும் ஓராயிரம் அர்த்தங்கள் துடிப்பது தெரிகிறது. ஓராயிரம் கட்டுரைகளில் விரித்து விரித்து சொல்வதை ஓரிரு வரிகளில் செறிவுடன் சொல்கிறவன் கவிஞன். அதிலும் பாரதி மகாகவி. அவன் கவிதைச் சொற்கள் ஒவ்வொன்றிலும் சமூக உணர்வு பொங்கித் திளைக்கும். எத்தனைமுறை படித்தாலும் அத்தனை ஆழம் இழுத்துச் செல்லும் மகாகவியின் கவிதைகள். மேலே கண்ட பாடலில் ஓடியாடி விளையாடுவது எத்தனை முக்கியம் என்பதை இரண்டாவது வரியில் ஓய்ந்து, சோம்பேறியாக இருக்கக் கூடாது என்று சொன்ன பாரதி அடுத்த வரியில் கூடி விளையாடச் சொல்கிறானே அதோடு யாரையும் நிந்திக்காமலிருக்கவும் கேட்கிறான். ஏன் கூடி விளையாட வேண்டும்?

இன்று பெரும்பாலான குழந்தைகள் பெரியவர்களின் கட்டுப்பாடுகளினால் வீட்டை விட்டு வெளியேறாமல் வீட்டுக்குள்ளேயே தனிமையில் தனக்குத் தானே பேசிக் கொண்டு தனக்குத் தானே விளையாடிக் கொண்டு பத்திரமாய் இருக்கிறார்கள். பள்ளிக்கூடத்தில் படிப்பதைத்தவிர வேறு எந்த சமூகச் செயற்பாடுகளுமின்றி தனிமை, வீட்டில் பெரியவர்களின் கட்டுப்பாடுகளினால் தனிமை. இப்படி உள்ளும் புறமும் தனிமையில் வளரும் குழந்தைகளின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

விலங்குகள், பறவைகள், பூச்சிகள் முதல் மானுட சமூகம் வரை கூடி வாழ்தல் என்பது இயற்கையின் உள்ளுணர்வினால் விளைந்த செயல்பாடு. அது தங்களை இந்தப் பூமியில் வாழத்தகுதியானவர்களாக்குகிற இயற்கை வாழ்முறை. கூடி வாழ்தலில் தான் ஒரு சமூகம் உயிர்த்திருக்கிறது. கூடி வாழ்வதற்கான கூட்டுச் செயல்பாட்டுக்கான சில அடிப்படை உளவியல் இயல்புகளை எல்லா உயிரினங்களுமே இயல்பாகக் கொண்டிருந்தாலும் மானுட இனம் அதை மிகச் சிறப்பாகவே தன் பகுத்தறிவின் துணைகொண்டு தன் சமூகத்துக்குப் பயிற்றுவிக்கிறது. அது மனதுக்கும், உடலுக்கும் உரமூட்டுவதாக மட்டுமல்லாமல் உளவியல் ரீதியாக சமூகத்தின் அங்கத்தினரான ஒவ்வொருவரையும் பண்படுத்துகிறது. அதற்கு குழந்தைப்பருவத்திலேயே சமூகம் கண்ட வழிமுறை தான் விளையாட்டு. கூடி விளையாடும் விளையாட்டுகளில் குழந்தையின் மனம் களிப்புறுகிறது. எந்தக்கட்டுப்பாடுமின்றி தன்னைத் தானாகவே உணர்ந்து, தன் முழுத் திறமையையும் வெளிப்படுத்தி, மொத்தத்தில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயல்படும் செயல்களில் விளையாட்டுக்கு முக்கிய பங்கு உண்டு.

அதுமட்டுமல்ல. புறஉலகின் எல்லா நெருக்கடிகளிலிருந்தும், பெற்றோர்களின், ஆசிரியர்களின், வீட்டுப்பாடச்சுமையின் மதிப்பெண் பூதங்களிலிருந்து விடுபட்டு தங்களுடைய இயல்பான படைப்பூக்க உணர்வை மீட்டெடுக்கவே குழந்தைகள் விளையாடுவதற்கு பேராவல் கொள்கின்றனர். படைப்பூக்க உணர்வை மீண்டும் மீண்டும் உருவாக்குவதின் மூலம் கிடைக்கும் பரவசத்தை அனுபவிக்கத் துடிக்கின்றனர்.

இதோடு சமூகத்தில் அவர்கள் இயைந்து வாழ விளையாட்டு அவர்களை பண்படுத்துகிறது. தன் வயதொத்த குழந்தைகளோடு கூடி விளையாடும்போது கூட்டுச்செயற்பாடுக்கான விவேகமும், கூட்டுணர்வும் ஏற்படுகிறது. கூடிச்சேர்ந்து செய்வதில் ஒரு தார்மீக நெருக்கமும், அழகியலும் தோன்றுகிறது. அதோடு கூட்டுச்செயற்பாட்டிலேயே தனித்துவம் காணும் தனிப்பாணியும் உருவாகிறது.

கூட்டுச் செயற்பாட்டை வழிநடத்திச் செல்லும் தலைமைப் பண்பும் இயல்பாகவே தோன்றுகிறது. இந்தத் தலைமைப்பண்பின் தனித்தகுதியாக எதிர்பாராத சூழ்நிலைகளை எதிர்கொள்கிற திறன் வளர்கிறது. பரஸ்பரம். விட்டுக்கொடுப்பதால், அன்பும், நட்பும் பெருகித் தழைக்கிறது. விளையாட்டுச் சண்டை என்பது விளையாட்டுச் சண்டையாகவே முடிந்து விடுகிறது. குழந்தைகளால் நீண்ட நேரத்திற்குக் கோபத்தையும், வெறுப்பையும், கசப்பையும் வளர்க்க முடியாது. சிறிது நேரத்திலேயே பழம்விட்டு சேர்ந்து கொள்வார்கள். யார் பக்கம் நியாயம் என்று தர்க்கரீதியாக யோசிக்காமல் யார் அதிகமாகப் புண்பட்டிருக்கிறார்களோ, யார் அதிகம் வருத்தமடைந்திருக்கிறார்களோ அவர்களுக்காக விட்டுக்கொடுப்பார்கள். இந்த விட்டுக்கொடுத்து இயைந்து வாழ்கிற பண்பு விளையாட்டின் மூலமே கிடைக்கிறது. இதற்கேற்ப இருவர் விளையாடும் விள்ளயாட்டுகளிலிருந்து பத்துபேர் விளையாடும் விளையாட்டுகள் வரை அந்தந்தக் கால சீதோஷ்ண நிலைமைகளுக்கேற்பவும், அந்தந்தப் பகுதி மண், வளம், வாய்ப்புகளுக்கேற்பவும் இருந்து வந்தன.

கிட்டிப்புள், பம்பரம், மாபிள் அடித்தல், மாங்கொட்டை கெந்துதல், கள்ளன் பொலீஸ், கிளித்தட்டு, தாச்சி, வாரோட்டம், எறி பந்து, நாயும் இறைச்சியும், கபடி, மரம் ஏறுதல் போன்ற ஓடி ஆடும் விளையாட்டுகளும், தாயம், பல்லாங்குழி, படவெட்டி, நாயும் புலியும், ஒற்றையா ரெட்டையா போன்ற இருந்து விளையாடும் விளையாட்டுகளுமாய் எத்தனை எத்தனை விளையாட்டுகள்! காலத்திற்கும், பருவத்திற்கும், நேரத்திற்கும் ஏற்ற மாதிரியான உள்விளையாட்டுகள் என்று விளையாட்டுகளை வகை வகையாய் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளை இப்போது காணவில்லை.

இந்த விளையாட்டுகளை யெல்லாம் விழுங்கி ஏப்பமிட்டது கிரிக்கெட் என்ற வெளிவிளையாட்டு மட்டுமல்ல. கம்பியூட்டர் கேம்ஸ், வீடியோ கேம்ஸ் என்று சொல்லப்படுகிற உள்விளையாட்டுகளும் தான்.

மேற்கத்தேய நாடுகளிலிருந்து, இறக்குமதி செய்யப்படுகிற அந்த வீடியோ கேம்ஸிலும், கம்பியூட்டர் கேம்ஸிலும் உள்ள பிரத்தியேகமான தன்மை குழந்தை தன்னைப்போன்ற இன்னொரு குழந்தையோடு விளையாடுவதைத் தடுக்கிறது. அது பிரதிமையோடு விளையாடத் தூண்டுகிறது. அந்தக் காட்சிப் பிரதிமைகள் எப்படி இருக்கின்றன? கார் ரேஸ், வேட்டையாடுதல், பைக் ஓட்டுதல் போன்ற குழந்தையின் வயதுக்கும், மனநிலைக்கும், யதார்த்தத்திற்கும் சற்றும் சம்பந்தமில்லாத விளையாட்டுகளே குழந்தைகளுக்கு கிடைக்கின்றன. வேறு வழியின்றி பெரியவர்களின் அடக்குமுறைக்கும் அதட்டலுக்கும் அஞ்சி குழந்தைகள் விளையாடுகின்றனர். அதில் எந்தக் கூட்டுச் செயற்பாடும் இல்லை. விட்டுக் கொடுத்தல் இல்லை. தலைமைப் பண்பு தேவையில்லை. அன்போ, நட்போ, பாசமோ, தேவையில்லை. அதிலே ஒரே குறிதான். வெற்றி பெற வேண்டும் நிறைய புள்ளிகள் எடுக்கவேண்டும். இதைத் தவிர வேறு எதுவும் வேண்டாம். தனிமையில் விளையாடும் இந்த விளையாட்டு குழந்தையிடம் பிடிவாதத்தை வளர்க்கிறது. தான் என்கிற வெறியை கிளப்புகிறது. வெற்றி பெறுவதற்காக எதையும் செய்யலாம் என்ற எண்ணத்தை வளர்க்கிறது.

கார் ரேஸ் விளையாடிக் கொண்டிருந்த ஒரு குழந்தை எதிர்ப்படும் தடைகளை முறியடிப்பதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யத் துணிகிறான். சாலையோரத் தடுப்பைத் தகர்க்கிறான். விளக்குக் கம்பங்களை வீழ்த்துகிறான். எந்த சிக்னலையும் மதிக்காமல் விரைகிறான். குறுக்கே எதிர்ப்படும் எவரையும் காரை ஏற்றிக் கொல்கிறான். சில நேரம் ஓரத்தில் நடந்து போய்க் கொண்டிருப்பவர்கள் மீதும் காரை ஏற்றுகிறான். அது பிரதிமையே என்றபோதிலும் குழந்தையின் முகத்தில் காணும் தீவிரத்தையும், வெற்றிபெற வேண்டும் என்கிற வெறியையும் பார்க்கும்போது உள்ளம் பதைபதைக்கிறது. அருகில் அவனுடைய பெற்றோர்கள் உட்கார்ந்து கொண்டு அவனை உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.


என்ன மாதிரியான எதிர்கால மானிட சமூகத்தை உருவாக்கப் போகிறோம் என்ற கவலை பீடிக்கிறது. மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டிய காலமாக நமது காலம் இருக்கிறது. குழந்தைகள் கூடி விளையாடுவதற்கான தருணங்களே இல்லாமல் ஆகிவிட்டது நம் காலம். வெறிச்சோடிக்கிடக்கின்றன தெருக்கள். குழந்தைகளின் குரலுக்காக ஏங்கித்தவிக்கின்றது நிலா சுட்டெரிக்கும் சூரியன் கூட இனி சுடமாட்டேன் வாருங்கள் குழந்தைகளே என்கிறது. ஆனால் குழந்தைகள் வீடுகளுக்குள் எப்போதும் அலறும் முட்டாள் பெட்டிகளின் முன்னேயோ, பள்ளிக்கூடப் பாடப்புத்தகங்களிலோ வதைபட்டுக் கொண்டிருக்கின்றனர். சமூகத்தின் கூட்டுச்செயற்பாட்டின் ஆதாரமான, தார்மீக நெறிகளைப் பயிலாமலே ஒரு எதிர்கால சமூகம் வளர்ந்தால் என்ன ஆகும்? யோசிக்க வேண்டும்.

குழந்தைகளைப் பற்றி நிறையப் பெற்றோர்களின் புகார் என்னவென்றால் சரியாகவே சாப்பிடுறானில்லை அல்லது சாப்பிடுறாளில்லை என்பது தான். குழந்தை தனக்குத் தேவையானதை தேவையான அளவு சாப்பிடவே செய்யும். ஆனால் பெற்றோர்களுக்கு தான் கொடுப்பதையெல்லாம் சாப்பிடவேண்டும் என்ற எண்ணம் மட்டுமல்ல குழந்தை தொலைக்காட்சி விளம்பரத்தில் வரும் குழந்தைகளைப் போல கொழு கொழுவென்று இருக்க வேண்டும் என்ற ஆசையும் கூட. குழந்தையின் ஆரோக்கியம் என்பது அதன் உற்சாகமான செயற்பாடுகளே. அதே போல அதற்கு ஒவ்வாததை எதிர்க்கிற ஆரோக்கியமான நோய் எதிர்ப்பு சக்தியே. அதை விடுத்து கொழு கொழுவென பார்ப்பதற்கு அழகாக ப்ரொய்லர் கோழிக் குழந்தைகள் வேண்டாமே!

# பல்கலை போராட்டங்களின் பின்னணி என்ன?

# குமார் குணரட்னம் இன்னும் ஓயவில்லை

## சிங்கள வார இதழ் அதிர்ச்சித் தகவல்



(கொழும்பு)

பல்கலைக்கழக பேராசிரியர்களின் போராட்டத்தின் பின்னணியில், முன்னணி சோசலிசக் கட்சியின் தலைவர் குமார் குணரட்னம் இயங்கி வருவதாக பிரபல சிங்கள வார இறுதிப் பத்திரிகையொன்று பிரதான செய்தியாக வெளியிட்டுள்ளது.

பல்கலைக்கழக பேராசிரியர்களின் தொழிற்சங்கப் போராட்டத்தைப் பயன்படுத்தி அரசாங்கத்தை நெருக்கடிக்குள் ஆழ்த்தும் நோக்கில் ஜே.வி.பி.யும் அதிலிருந்து பிளவடைந்த தரப்பினரும் முயற்சிக்கின்றனர்.

இந்தச் சூழ்ச்சித் திட்டத்தை 90 வீதமான பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. 11 பேரைக் கொண்ட பல்கலைக்கழக பேராசிரியர் குழுவொன்றே இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றது.

தொழிற்சங்கப் போராட்டம் தோல்வியடைந்தால் முக்கிய உறுப்பினர்களுக்கு அவுஸ்ரேலியாவில் குடியுரிமை பெற்றுக் கொடுப்பதாக குமார் குணரட்னம் உறுதியளித்துள்ளார்.

ஜே.வி.பி பிளவடைந்திருப்பதாக மேற்கொள்ளப்பட்டு வரும் பிரசாரங்களில் உண்மையில்லை. ஜே.வி.பி.யின் இனவாத கொள்கைகளினால் வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

இதன் காரணமாக ஜே.வி.பி.யிலிருந்து குழுவொன்று பிளவடைந்து முன்னணி சோசலிசக் கட்சியை அமைத்துள்ளதாக வெளிக்காட்டிக் கொள்ளப்படுகின்றது.

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் பல்கலைக்கழக பேராசிரியர் போராட்டம் குமார் குணரட்னமே வழிநடத்துகின்றார் என குறித்த சிங்கள பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

# இரண்டு அகதிகள் படகு ஆஸி. சென்றடைந்தது

(கொழும்பு)

இலங்கையர்கள் அடங்கிய மேலும் அகதிப் படகுகள் இரண்டு நேற்று முன்தினம் அவுஸ்ரேலிய கடற்படையினரால் பிடிககப்பட்டுள்ளதாக அவுஸ்ரேலிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

முதலாவது படகு 72 பேருடன அவுஸ்ரேலியாவின் ஹார்வி குடாவில் வைத்து பிடிக்கப்பட்டுள்ளது. மேலும் 63 பேரும் சென்ற மற்றுமொரு அகதிப் படகு கிறிஸ்மஸ் தீவின் கிழக்குப் பகுதி கடற்பரப்பில் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் அனைவரும் தற்போது கிறிஸ்மஸ் தீவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். தற்போது அவர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் அடையாளங்கள பரிசோதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர்களின் தேசியம் குறித்து சரியாக அறிவிக்கப்படாத போதும், பெரும்பாலானவர்கள் இலங்கையர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கட்டுமீறிச் செல்கிறது வாழ்க்கைச் செலவு

(கொழும்பு)

இலங்கையில் வாழ்க்கை செலவுப்புள்ளி 21 ஆயிரத்து 52 ரூபாவால் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டுக்கு பின்னர் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தொழிற்சங்க மத்திய நிலையத்தின் தலைவரும் ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

நாட்டின் 4 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கான வாழ்க்கைச் செலவு 21 ஆயிரத்தால் உயர்ந்துள்ளபோது 2006 ஆம் ஆண்டு முதல் இதுவரை அரச ஊழியர்களுக்கு 7,609 ரூபா 50 சத சம்பள அதிகரிப்பே வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதும் நான்கு பேரைக் கொண்ட குடும்பம் ஒன்று 13,444 ரூபா 50 சதம் என்ற பணத்தின் அடிபபடையிலேயே கஸ்டப்பட்டு வாழ்க்கையை நடத்தி செலகிறது.

இந்தநிலையில் அரச ஊழியர்களுக்கு உரிய சம்பளத்தை வழங்க அரசாங்கம் முன்வராவிட்டால் ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டங்களைத் தவிர்க்க முடியாது என்று லால்காந்த குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையின் பொருளாதாரப் போக்கு இப்போது எப்படி உள்ளது

## களநிலையில் ஆய்வு

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதாரப் போக்கு இப்போது எப்படி உள்ளது என்று சர்வதேச நாணய நிதியம் களநிலை ஆய்வை மேற்கொண்டு வருகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் சிலர் இலங்கையில் தங்கியிருந்து பொருளாதார நிலை குறித்து ஆராய்ந்து வருவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி, மார்ச் மாதங்களில் நாணய பெறுமதியில் ஏற்பட்ட மாற்றத்தைத் தொடர்ந்து, இலங்கையின் பொருளாதார நிலை குறித்து அவர்கள் ஆராய்ந்து வருவதாக கூறப்படுகிறது.

இதற்கிடையில் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து மேலும் 500 மில்லியன் டொலர்களை கடனாகப் பெறுவது தொடர்பில் பேச்சுவார்த்தை இடம்பெற்றிருந்தது. இது தொடர்பில் எதிர்காலத்திலும் ஆலோசிக்கப்படும் என்று மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு 50 பில்லியன் ரூபா இழப்பு

(கொழும்பு)

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், இந்த ஆண்டின் 7 மாத காலப்பகுதியில் 50 பில்லியன் ரூபாய் நட்டமடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் கடந்த ஆண்டில் கூட்டுத்தாபனத்துக்கு 90 பில்லியன் ரூபாய் நட்டமேற்பட்டதாக கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த நட்டங்கள், மின்சார உற்பத்தி, குறைந்த விலைக்கு எரிபொருளை விற்பனை செய்தல் போன்றவற்றால் ஏற்பட்டது என்று கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்தநிலை தொடருமானால் அரசாங்கம் பெற்றோலியத் துறையில் பாரிய நட்டங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

எண்ணெய் சுத்திகரிப்பில் ஏற்பட்டுள்ள சிரமங்களும் இந்த நட்டங்களுக்கு காரணம் என்று கூறப்பட்டுள்ளது.

இந்தநிலையில் நட்டங்களை சமாளிப்பதற்காக எதிர்வரும் காலங்களில் எரிபொருள் விலையேற்றத்தை தவிர்க்க முடியாதிருக்கும் என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத் தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

# கிழக்கில் கன்னி அமர்வு இன்று

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபையின் முதலாவது அமர்வு இன்று திங்கட்கிழமை நடைபெறவிருக்கின்ற போதிலும், தெரிவான மாகாண சபை உறுப்பினர்களுக்கு இதுவரை பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவில்லை.

இந்தநிலையில், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மாகாண சபை உறுப்பினர்கள் திருகோணமலை செல்லவுள்ளனர்.

இன்றைய அமர்வு தொடர்பாக பேரவைச் செயலாளரினால் சகல உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆளுநர் உரை, சபை தவிசாளர் உரை மற்றும் ஆகியனவே இன்றைய அமர்வின் போது இடம்பெறவுள்ளது.

இதேவேளை, சில மாகாண சபை உறுப்பினர்களுக்கு இதுவரை பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படாமை குறித்து



விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பொலிஸ் பாதுகாப்பு தேர்தல் முடிந்து மூன்று வாரங்கள் கடந்தும் வர்த்தமானியில் பெயர்கள் பிரகடனம் செய்யப்பட்டு ஒரு வாரம் கடந்தும் இதுவரை வழங்கப்படவில்லை என்று அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

# மாணவர்களின் மரணம் ; முடிவின்றித் தொடரும் சர்ச்சை

(கொழும்பு)

அனைத்து இலங்கை பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின் பேரணியின் போது கம்பஹா - இம்புல்கொடயில் மரணமடைந்த மாணவர்களின் மரணம் குறித்த பரிசோதனையில் திருப்தி இல்லை என்று, மாணவர்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது. ஒன்றியத்தின் இணைப்பாளர் சஞ்சீவ பண்டார இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் செய்தியாளர்கள் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹனவிடம் வினவியபோது பதில் வழங்கிய அவர், குறித்து இரண்டு மாணவர்களும் வாகன விபத்து ஒன்றிலேயே மரணமடைந்ததாக, பிரேதபரிசோதனையில் உறுதிப் படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

# விமுக்தியின் அரசியல் பிரவேசம்; கனவு நனவாகுவது சாத்தியமா?

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் மறைந்த நடிகரும், அரசியல்வாதியுமான விஜய குமாரதுங்கவின் புதல்வருமான விமுக்தி குமாரதுங்க அரசியலில் நுழையலாம் என நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து தகவல் கசிந்துள்ளது.

இதன் முதல்படியாகவே அவர் கடந்த 26 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்ட தனது பாட்டனாரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் 53 ஆவது சிரார்த்த தினத்தின் போது ஹொரகொல்லயில் அமைந்துள்ள அவரின் சமாதிக்கு மலர் அஞ்சலி செலுத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மிருக வைத்தியரான விமுக்தி இங்கிலாந்தில் வசித்து வருகின்றார். தற்போது விடுமுறையைக் கழிக்கும் பொருட்டு இங்கு வந்துள்ளார்.

அவரை அரசியலில் இறக்கும் நடவடிக்கைகள் தற்போது மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கூடிய விரையில் இது தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்புகள் வரலாம் என ஊடகங்கள் சில செய்திகள் வெளியிட்டுள்ளன.

பரம்பரையாக அரசியலில் ஈடுபட்டுவந்த குடும்பம் என்ற வகையில் குறித்த செய்திகள் நம்பக்கூடிய வகையிலேயே உள்ளன.

இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வர் நாமல் ராஜபக்ஷவும் தற்போது நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார்.

அதேவகையில் முன்னாள் ஜனாதிபதியின் மகனும் அரசியலில் நுழைய வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன.

# நில அதிர்வுக்குக் காரணம் என்ன?

## தொடர்கிறது புவியியல் ஆய்வு

Geological Survey and Mines Bureau
භූ විද්‍යා සමීක්ෂණ සහ පතල් කාර්යාංශය
புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம்

(கொழும்பு)

இலங்கையில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற சிறிய அளவிலான நிலஅதிர்வு சம்பங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக ஆராய்ந்து வருவதாக பூகோளவியல் மற்றும் சுரங்கத் தொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் பேராசிரியர் எச்.பி.விஜயநந்தன தெரிவித்துள்ளார்.

கடந்த நாட்களில் கம்பொல, மாதுஓய,. பதுளை உள்ளிட்ட பல பகுதிகளில் இவ்வாறான நில அதிர்வுகள் பதிவாகி இருந்தன.

நேற்று முன்தினம் மொனராகலையிலும் சியம்பலாண்டுவ பகுதியிலும் இவ்வாறான நில அதிர்வு உணரப்பட்டது.

இது தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

# ஜெபத்தின் வாயிலாகவே இறைபற்றுதலை அடையலாம்

## யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை

(யாழ்ப்பாணம்)

ஊனியல்பின் செயற்பாடுகள் எம் வாழ்வின் தடைக்கற்களாக இருக்கின்றன. அவை எம் வாழ்வை இறையாட்சியடைய விடுவதில்லை. மாறாக தூய ஆவியானவரின் கனிகளை நாம் பெற்று வாழ முயற்சிக்க வேண்டும் என வணக்கத்துக்குரிய யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்தார்.

அண்மையில் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் சுன்னாகம், மல்லாகம், குழமங்கால், சூராவத்தை, ஏழாலை மற்றும் ஆச்சிரமப் பங்குகளின் 120 பிள்ளைகளுக்கு உறுதிப் பூசுதல் எனும் திருவருட்சாதனம் வழங்கப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஆவிக்குரிய செயற்பாடுகள் தான் அமைதியும், வாழ்வுமாக இருக்கிறது. ஆனால் ஊனியல்பின் செயற்பாடுகளோ அழிவையே தருகின்றது. எனவே ஆவிக்குரிய செயற்பாடுகளில் உங்கள் வாழ்வைக் கடைப்பிடியுங்கள்.

நீங்கள் பெற்றுக் கொண்ட இந்த ஆவியானவர் அச்சத்துக்குரிய மனப்பான்மையை அகற்றி மாறாக இறைத் தந்தைக்குரிய மனப்பான்மையைப் பெற்றுத் தந்துள்ளார். அதனாலேயே நீங்கள் அப்பா தந்தாய்... என அழைக்கின்றீர்கள்.

நாம் கடவுளின் பிள்ளைகளாக்கப்படுகின்றோம். எனவே ஆண்டவருக்கு அஞ்சி நடந்து அமைதியில் திளைத்து தூய ஆவியானவரின் துணையுடன் எம் வாழ்வை மாற்றுவோம். எமது பலவீனங்களினின்று மனக்கசப்புக்களினின்று எங்களோடு இருந்து எம்மைத்தட்டி எழுப்பி செபத்தின் வாயிலாக தூய ஆவியானவர் எம்மை வழிநடத்த வேண்டு மென்று மன்றாடுவோம் என்றார்.

மறையுரையைத் தொடர்ந்து 120 பிள்ளைகளுக்கும் உறுதிப் பூசுதல் சடங்கும் வாக்குத் தத்தங்களும் நிறைவேற்றப்பட்டன. அருட்சகோதரிகள், மறைஆசிரியர்கள், இப்பிள்ளைகளைத் தயார்படுத்தி இத் திருவருட்சாதனத்தைப் பெற உதவினார்கள்.

திருப்பலிப்பூசை முடிவில் ஆயர் பிள்ளைகளுக்கு பரிசில்கள் வழங்கினார்.

## பரமர் சங்கமம்



'ஒருவர் மனதை ஒருவர் அறிய உதவும் பாலமிது' அஞ்சல் ஊழியர் ஒருவரின் இதயம் பேசுவதாக அமைந்த திரைப்படப் பாடல் வரிகளை மேலே கண்டீர்கள்.

அஞ்சல் விநியோகத்தொழில் புனிதமான பொறுப்புவாய்ந்த தொழிலெண்டதை இன்னொருவர் சொல்லித்தான் தெரிய வேண்டுமெண்டில்லையல்லவா?

இன்றைய தபால்காரர்கள் அவ்விதமா செயற்படுகிறார்கள்? கோழி மேச்சாலும் கோறணமேந்து வேலையெண்டு ஆலாப்பறந்து அந்த வேலையில் அவரை இவரைப் பிடிச்சுச் சேர்ந்து விடுவார்கள்.

அவர்களுக்கு வேலையை வழங்குகையில் மேலதிகாரிகள் வழங்கும் போதனைகளை அடுத்த கணமே மறந்து மாதம் முடிஞ்சாச் சம்பளம் எண்ட ஒரே நோக்கத்துக்காகவே அந்தத் தொழிலைப் பாக்கிறார்கள்.

இன்னொரு மொடுவான உத்தியோகம் கிடைக்கும் வரையில் போவறிபோக்கா இந்த வேலையில் ஒட்டிக் கொண்டிருப்பவர்கள் தான் அதிகம். கடிதங்களை முகவரிக்கு உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டுமெண்ட பொறுப்புணர்வும் கிடையாது.

அந்த நாளே தாபல்காரர்கள் இரண்டு வாரங்கள் கழிந்தாலும் சம்பந்தப்பட்டவர்களை நேரில் கண்டு அவர்களிடமே ஒப்படைப்பார்கள். என்ரை கடைக்குப் பின்னால உள்ள வீட்டுக்கு வந்த கடிதத்தை என்னிடம் தந்திட்டு போனால் அவர்களுடைய கடமை முடிஞ்சுது.

ஒழுங்கையால் உள்நுழைந்து உரியவரிடம் கடிதத்தை ஒப்படைக்கும் பொறுமையும், பொறுப்புணர்வும் தற்கால அஞ்சல் விநியோகத்தர்களிடம் மருந்துக்கும் கிடையாது.

ஒரு சமயம் எனக்கு கொழும்பில் இருந்து பத்திரிகை நிறுவனம் ஒன்றால் 500 ரூபாவுக்கு காசோலை அடங்கிய கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. அதனைப் பக்கத்து வீட்டுக்காரிடம் ஒப்படைத்து விட்டு போட்டார் அஞ்சல்காரர்.

அந்த வீட்டு முக்கியஸ்தர் கொழும்புக்கு சென்றிருந்தார். அவரது வயது முதிர் சகோதரி ஒருவர் வாங்கி அவருக்கு வந்திருந்த கடிதங்களுடன் இதனையும் சேர்த்து வைத்து விட்டார். இரண்டு மாதங்களுக்குப் பின்பாக வந்த வீட்டுக்காரர் எனக்கு வந்த கடிதத்தைக் கொணர்ந்து தந்தார்.

காசோலை மாத்த வேண்டிய காலம் கடந்ததால் திரும்பவும் அதனைக் குறிப்பிட்ட பத்திரிகை நிறுவனத்துக்கு அனுப்பி பெற எத்தனை மாதங்கள் ஓடிவிட்டன.

இது போல முக்கிய தஸ்தாவேசுகள் பல தறிவிடவும் வேறொ ருவர் கைகளில் அகப்பட்டு அதன் முக்கியத்தும் தெரியாமல் வீதிகளில் கிழித்து வீசிவிடவும் காரணமாக அஞ்சல்காரர்களின் நட வடிக்கைகள் அமைந்துள்ளன.

மேலும் இப்பொழுதெல்லாம் காலை 9.00 மணிக்கு முன்பாகவே விநியோக வேலைகளை முடித்துக் கொண்டு விடுகின்றார்கள். இது ஒருசில நிறுவனங்களுக்கு ஏதுவாக அமைகிறது. 9.00 மணிக்குப் பிற்பாடு வருகின்றவர்களின் கடிதங்கள் அங்கையிங்கை எறிஞ்சுவிடடோ போறது?

எல்லாத்துக்கும் பொதுவாகக் கடித விநியோகத்தை 10 மணியளவில் செய்தால் நல்லதல்லவா என்ன நான் சொல்லுறே...

## பரிபாலனசபை தெரிவு

(வேலணை)

வேலணை - பெருங்குளம் அருள்மிகு முத்துமாரி அம்மன் கோவிலின் 2013 ஆம் ஆண்டுக்கான பரிபாலன சபைக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதக்கான வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் 1 ஆம் வாரத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி ஆலயத்தின் பரிபாலன சபைக்கான உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண்கள் அதாவது வேலணையை வசிப்பிடமாகவோ அன்றி பிறப்பிடமாகவோ இருப்பவர்கள் இணைந்து கொள்ளலாமென செயலாளர் க.மு. வரதராசா தெரிவித்துள்ளார்.

(05)

## புதிய நிர்வாகத் தெரிவு


(வடமராட்சி)

தென்புலோலி புற்றளை பெரியவளவு அருள்மிகு வீர பத்திரர் ஆலய பரிபாலன சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் ஆலய முன்றலில் இளைப்பாறிய நில அளவையாளர் எஸ்.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக எஸ்.யோகலிங்கம், உபதலைவராக எம்.தனபாலன், செயலாளராக கே.பரமநாதன், உபசெயலாளராக எஸ்.செல்வராசா, பொருளாளராக எஸ்.இராமச்சந்திரன் ஆகியோருடன் செயற்குழு உறுப்பினர்கள் 3 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

(01)



நேற்றுப் பெய்த கடும் மழையால் நெல்லியடி மத்திய சந்தைப் பகுதி வெள்ளக்காடாகக் காட்சியளிப்பதைக் காணலாம். (18)

## கத்திக்குத்தில் உயிரிழப்பு

(மன்னார்)

மன்னார் வன இலாகா அலுவலகத்தில் சிரேஷ்ட வன அதிகாரியின் கத்திக் குத்துக்கு இலக்காகி சக வன இலாகா ஊழியர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இருவருக்கும் இடையில் ஏற்பட்ட தொழில் பிரச்சினை காரணமாக இக்கொலை இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் - திஸாவாவியைச் சேர்ந்த 51 வயதுடைய நபரே கொலை செய்யப்பட்டவர் ஆவார்.

சம்பவத்துடன் தொடர்புடைய வன இலாகா அதிகாரியை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

## முரசின் இன்றைய பலன்

(01.10.2012 – திங்கட்கிழமை)

நந்தன வருஷம் புரட்டாதி மாதம் 15 ஆம் திகதி.
நட்சத்திரம் ரேவதி பிற்பகல் 6.10 வரை. சித்தயோகம்.
திதி பிரதமை முற்பகல் 10.16 வரை. பின் துதியை.
இராகுகாலம் 7.32 - 9.02 வரை. சுபநேரம் 12.02 - 1.32 வரை.
எமகண்டம் 10.32 - 12.02 வரை, குளிகன் காலம் 1.32 - 3.02 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | புத்திசாலித்தனத்தால் நற்பலன். தொழில் வளர தேவையான பணிபுரிவீர்கள். லாபம் அதிகரிக்கும். சொத்து சேர்க்கை. வாகன கவனம். |
| ரிஷபம் | கூடுதல் வளம் பெற அனுகூலம். உறவினரிடம் நன்மதிப்பு. தொழில் இலக்கு நிறைவேறும். தேவையான பணவரவு. மங்கல நிகழ்ச்சி திட்டம். |
| மிதுனம் | சுயதிறமைகளை வளர்ப்பீர்கள். கடின பணியும் இனிதாக நிறைவேறும். தொழில் புதிய சாதனை. உபரி பணவருமானம். பாராட்டு, வெகுமதி. |
| கடகம் | வெற்றிக்கு ஆசிகள் கிடைக்கும். புதிய நம்பிக்கை வளரும். தொழிலில் கூடுதல் அக்கறை. பணவரவு திருப்தி. குடும்பத்தின் தேவை நிறைவேறும். |
| சிம்மம் | உங்கள் நற்செயல் அவமதிக்கப்பட்டாலும், நியாய தர்மம் பின்பற்றுவீர்கள். தொழில் வளர புதிய யுக்தி. அளவான பணவரவு. உடல்நலம் சீர்பெறும். |
| கன்னி | எதிர்கால அக்கறை. புதிய யுக்திகள் நன்மை தரும். தொழில் வளர்ச்சி. உபரி பணவருமானம். உறவினர் மனக்கிலேசம் சரியாகும். உடல் ஆரோக்கியம். |
| துலாம் | இலட்சியத்தில் கவனம். தொழிலில் மூலதனச் சிக்கல். கூடுதல் உழைப்புக்கு நன்மை. உணவுக் கட்டுப்பாடு நல்லது. மேலதிகாரியிடம் பாராட்டு. |
| விருச்சிகம் | பேச்சு, செயலில் நிதானம் அவசியம். பணிச்சுமை அதிகரிக்கும். பணவரவு தாமதம். வீண் கௌரவத்தினால்-இழப்பு. எதிர்பார்த்தது நடக்காதது ஏமாற்றம். |
| தனுசு | இளமைக்கால நினைவுகள். புதியவர்களின் நட்பு. நம்பிக்கை வளரும். தொழில் முன்னேற்றம். உபரி பணவருமானம். மங்கல நிகழ்ச்சி. சொத்து சேர்க்கை. |
| மகரம் | எண்ணத்திலும் செயலிலும் உறுதி. புதிய நடைமுறை பின்பற்றுவீர்கள். தொழில் தடை விலகும். உபரி பணவருமானம். வழக்கு சாதகம். குடும்ப அமைதி. |
| கும்பம் | உண்மை, நேர்மை செயல்கள். சமூகத்தில் வரவேற்பு. எதிர்பாராத உதவி. தொழில் தாமதம் விலகும். தாராள பணவரவு. இல்லறத்துணை அனுசரணை. |
| மீனம் | செயல்களில் தடுமாற்றம். தெய்வ நம்பிக்கை. தொழிலில் அனுகூலம் குறைவு. சராசரி பணவரவு. அறிமுகம் இல்லா இடத்தில் நுழைய வேண்டாம். |

## இன்றைய ஆட்டம்

ICC WORLD TWENTY20
SRI LANKA 2012

**நியூசிலாந்து - மேதீவுகள்**
பல்லேகல மாலை 3.30 மணி

**இலங்கை - இங்கிலாந்து**
பல்லேகல இரவு 7.30 மணி



# அரையிறுதி வாய்ப்பு எமக்குண்டு

(கொழும்பு)

அரையிறுதிப் போட்டிக்கான வாய்ப்பு எமக்கு அற்றுப்போய்விடவில்லை. இன்றைய போட்டியில் சிறப்பான ஆட்டத்திறனை வெளிப்படுத்தி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெறுவோம் என மேற்கிந்தியதீவு அணி கப்டன் டரன் சமி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை அணியுடனான போட்டியில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களின் எதிர்பாராத ஆட்டமிழப்பு எமக்குப் பெரும் பாதகமாக அமைந்துவிட்டது. இலங்கை அணி வீரர்கள் சிறப்பான முறையில் செயற்பட்டனர். குறிப்பாக அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன போட்டியின் போக்கை மாற்றியமைத்துவிட்டார்.

இன்றைய தினம் இடம்பெறும் நியூசிலாந்து அணியுடனான போட்டியில் நிச்சயம் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்தி அரையிறுதிப் போட்டிக்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்வோம். சிறந்த அணியாகத் திகழும் எமக்கு இன்றைய போட்டியில் வெற்றி கிடைக்கும் என்று நம்புகிறேன்.

போலாட் இது வரை சிறப்பாக விளையாடவில்லை. இருப்பினும் அடுத்து வரும் போட்டிகளில் அவர் தனது அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்துவார் என எதிர்பார்க்கின்றேன். பிராவோ பொறுப்புணர்ந்து ஆடி வருகின்றமை மகிழ்ச்சி எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# யுவராஜ் நீக்கப்படவேண்டும்

(கொழும்பு)

யுவராஜ்சிங் முழு உடற்தகுதியை அடையவில்லை. ருவெண்ரி-20 உலகக் கிண்ண போட்டித் தொடரின் இந்திய அணியில் அவரை இணைத்தது மிகப் பெரும் தவறு எனஇந்தியாவின் முன்னாள் வீரர்களும், தொலைக்காட்சி வர்ணனையாளர்களுமான ரவி சாஸ்திரி, சஞ்சய் மஞ்சரேக்கர் மற்றும் அருள்லால் ஆகியோர் தெரிவித்தனர்.

இந்திய அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான யுவராஜ். புற்றுநோயால் பாதிக்கப்பட்ட அவர் அதில் இருந்து மீண்டு 9 மாதங்களுக்கு பின்னர் அணியில் இடம் பெற்றார்.

தற்போது நடைபெற்று வரும் 20 ஓவர் உலக கோப்பையில் ஆடி வருகிறார். இந்நிலையிலேயே மேற்படி இருவரும் கருத்தை வெளியிட்டுள்ளனர்.

இது குறித்து மஞ்ச்ரேக்கர் தெரிவிக்கையில்,

யுவராஜ்சிங் முழு உடல் தகுதியுடன் இல்லை. 70 முதல் 80 சதவீதம் வரைதான் தகுதியுடன் உள்ளார். இனிவரும் போட்டிகளில்யுவராஜ்சிங்கை நீக்க வேண்டும். அவுஸ்ரேலியாவுக்கு எதிரான போட்டியிலேயே அவரை நீக்கி இருக்க வேண்டும். இந்திய அணிக்கு அவரை அவசரமாக இணைத்துக் கொண்டமை முட்டாள்தனமான விடயம் என்றார்.

இது குறித்து ரவி சாஸ்திரி தெரிவிக்கையில்,

யுவராஜ்சிங் முழு உடல் தகுதியுடன் இல்லை. எந்த அடிப்படையில் அவருக்குத் தேர்வாளர்கள் வாய்ப்பளித்தார்கள் என்று எனக்குப் புரியவில்லை. இந்த வகையில் உடனடியாக யுவராஜை அணியிலிருந்து நீக்க வேண்டும். யாரும் யாருக்கும் பரிதாபம் காட்டக்கூடாது. சிறந்த வீரர்களைத் தான் தேர்வு செய்ய வேண்டும். ருவெண்ரி-20 போட்டியில் 3 சுழற்பந்து வீரர்கள் தேவை இல்லை. சிறந்த அதிரடி துடுப்பாட்ட வீரர்களேபோதும் என்றார்.

இது குறித்து அருள்லால் தெரிவிக்கையில், சிறந்த இளம் வீரர்கள் உள்ள நிலையில் யுவராஜ்சிங்கை அணியில் இணைத்தது பெரும் தவறு. திவாரி போன்ற சிறந்த வீரர்கள் சிறந்த ஆட்டத்திறனுடன் உள்ளனர். இந்நிலையில், புற்றுநோயால் பாதிக்கப்பட்டு, அதிலிருந்து மீண்டு வந்ததை வைத்துக்கொண்டு அவருக்கு அணியில் வாய்ப்புக் கொடுக்கப்பட்டு விட்டதோ என்றே சந்தேகிக்கத் தோன்றுகின்றது.

புற்றுநோய் பாதிப்பிலிருந்து மீள்வதற்கு அவர் கடுமையாக கஷ்டப்பட்டிருப்பார் என்பதை நாம் மறுக்கவில்லை.

இதற்காக அவரை அவசரப்பட்டு அணியில்இணைத்துக் கொண்டமை என்பது தேர்வுக் குழுவினர் விட்ட பெரும் தவறு என்றார்.



## இறுதி ஆட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி சீரற்ற காலநிலை காரணமாக நேற்று இடம்பெறவில்லை.

டொனால்ட் வெற்றிக் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி நேற்றைய தினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கொக்குவில் கே.சி.சி.சி. அணி யும், யாழ். சென்றலைட்ஸ் அணியும் மோத விருந்தப் போட்டியில் நேற்றுக் காலை பெய்த மழை காரணமாக இறுதிப் போட்டி நடைபெறவில்லை.

சீரற்ற கால நிலை காரணமாக இறுதிப் போட்டியை நடத்த முடியா- மல் போய்விட்டது என்றும், இறுதிப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும், மைதானத்திற்கு வருகை தந்த இரசிகர்களுக்கு நன்றி என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இறுதிப் போட்டி நடைபெறாதமை குறித்து இரு அணி ஆதரவாளர்களும் பெரும் ஏமாற்றமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)


# இந்தாண்டுக்குள் முதலிடம் இலக்கு

இந்த ஆண்டு இறுதிக்குள் தரப்படுத்தலில் மீண்டும் நான் முதல் நிலை இடத்தைப் பிடிப்பேன் என சேர்பியாவின் ஜோகோவிச் தெரிவித்தார்.

உலக ரென்னிஸ் தரவரிசையில் முதல் இடம் வகித்த சேர்பியாவின் நோவக் ஜோகோவிச், கடந்த ஜுலை மாதம் சுவிஸ்லாந்தின் ரோஜர் பெடரரிடம் முதல் நிலை இடத்தைப் பறிகொடுத்தார்.

தற்போது 2ஆவது இடத்தில் உள்ள ஜோகோவிச் அளித்த பேட்டியில், மீண்டும் முதல் நிலை இடத்தைப் பிடிக்க விரும்புகிறேன். இது தான் எனது இலட்சியம்.

இந்த ஆண்டு இறுதிக்குள் எனது குறிக்கோள் நிறைவேற வாய்ப்புள்ளது. பொதுவாக சென்ற ஆண்டு எனக்கு அதிர்ஷ்டமில்லாத ஆட்டமாக அமைந்தது ஏமாற்றமே. இருப்பினும் எனது ஆட்டத்திறனில் சோர்வு ஏற்படவில்லை என்பதை நான் உணர்கின்றேன் என்றார்.





# மெஸ்ஸியே கப்டன்

(பியூனஸ் அயர்ஸ்)

உலகக் கிண்ணக் கால்பந்து போட்டியின் தகுதிச்சுற்றில் பங்கேற்கவுள்ள 18 பேர் கொண்ட ஆர்ஜென்ரீன அணிக்கு மெஸ்ஸி கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒக்ரோபர் 12, 16ஆம் திகதிகளில் நடைபெறும் தகுதிச்சுற்று ஆட்டங்களில் உருகுவேயுடன் மோதுகிறது ஆர்ஜென்ரீனா. முதல் ஆட்டம் உருகுவேயிலும், 2ஆவது ஆட்டம் சிலியிலும் நடைபெறுகிறது.

ஆர்ஜென்ரீனா அணி விவரம்:

கோல் கீப்பர்கள்: செர்ஜியோ ரொமெரோ, மரியானோ அன்டுஜார்.

தடுப்பாட்டக்காரர்கள்: பேப்லோ ஸபலெட்டா, ஹியூகோ கம்பேக்னாரோ, ஃபெடெரிகோ பெர்னாண்டஸ், இஸிகியோல் கேரேய், மார்கஸ் ரோஜோ.

நடுகளம்: ஜாவியர் மாஸ்கெரனோ, ஏஞ்ஜெல் டி மரியா, என்.ஸி பெரெஸ், பெர்னாண்டோ காகோ, ஜோஸ் சோசா, பேப்லோ குய்னாஸ.

முன்களம்: செர்ஜியோ அகியூரோ, லாவெஸ்ஸி, கொன்ஸிலோ ஹிக்வேய்ன், ஹெர்னான் பர்காஸ்,மெஸ்ஸி.



# கிண்ணம் வென்ற பெட்ரோவா

(ரோக்கியோ)

ஜப்பானில் நடந்த பான் பசிபிக் ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில், ரஷ்ய வீராங்கனை நடியா பெட்ரோவா சம்பியன் பட்டம் வென்றார்.

இறுதிப் போட்டியில் போலந்து வீராங்கனை ரட்வன்ஸ்காவுடன் நேற்று முன்தினம் மோதிய பெட்ரோவா 6-0 என்ற கணக்கில் முதல் செட்டைக் கைப்பற்றி முன்னிலை பெற்றார். இரண்டாவது செட்டில் சுதாரித்துக் கொண்டு விளையாடிய ரட்வன்ஸ்கா 6-1 என வென்று பதிலடி கொடுத்தார்.

இதையடுத்து, சம்பியன் யார் என்பதைத் தீர்மானிக்கும் 3ஆவது செட் ஆட்டத்தில் அனல் பறந்தது. இதில் ரட்வன்ஸ்காவின் சர்வீஸ்களை முறியடித்த பெட்ரோவா 6,0, 1-6, 6-3 என்ற செட் கணக்கில் சம்பியன் பட்டத்தைத் தட்டிச் சென்றார். இது அவர் பெறும் 12ஆவது பட்டம் ஆகும். கிண்ணம் வென்றது மகிழ்ச்சி. தொடர்ந்தும் சிறப்பான ஆட்டம் தொடரும் என நடியா பெட்ரோவா தெரிவித்தார்.இதேவேளை, இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில் காப்ஸ் ஜோன்ஸ், ஸ்பியர்ஸ் ஜோடி 6-1, 6-4 என்ற நேர் செட்களில் குரோயன்பெல்ட் பெஷிகே ஜோடியை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது.

# கொக்குவில் அரசடி வி.க.வின் மென்பந்து முதல் சுற்று ஆட்டங்கள் நிறைவு

(கொக்குவில்)

கொக்குவில் அரசடி விளையாட்டுக்கழகம் நடத்தும்மென் பந்து கிரிக்கெட் தொடரின் முதல் சுற்றில் காந்திஜி, ரொக் கெட்ஸ், பொற்பதி, ஞானகலா அணிகள் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

யாழ். மாவட்ட மென்பந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையில் கொக்குவில் அரசடி விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப் பட்டுவரும் அணிக்கு ஆறு பேர் கொண்ட ஐந்து ஓவர் மென்பந்து கிரிக்கெட் போட்டி இடம்பெற்று வருகின் றது.

முதல் சுற்று ஆட்டங்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அரசடி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முதலாவதாக நடைபெற்ற போட்டியில் காந்திஜி அணியும் முருகமூர்த்தி அணியும் மோதின. நாணயச் சுழற்சி யில் வெற்றிபெற்று முதலில் ஆடிய காந்திஜி அணி 5 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 48 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரசாந் 18, உதயன் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரகுகுட்டி இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 49 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய முருகமூர்த்தி அணி 3.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 20 ஓட்டங் களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் ரகுகுட்டி 9 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் உதயன், ஜோய் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் அரசடி 'பி' அணியும் ரொக்கெட்ஸ் அணியும் மோதின. முதலில் ஆடிய அரசடி 'பி' அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 40 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கஜிந்தன் 14, மிதிலன், சயந்தன் தலா 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பாரி ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்கு 41 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ரொக்கெட்ஸ் அணி மூன்று ஓவர் கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சுபந்தன் 25 ஓட்டங்களைப் பெற்றார்.

மூன்றாவதாக நடைபெற்ற போட்டியில் சுன்னாகம் ஸ்ரார் அணியும் பொற்பதி அணியும் மோதின. முதலில் ஆடிய சுன்னாகம் ஸ்ரார் அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 49 ஓட்டங்களைப் பெற்றது. இதில் துஸ்யந்தன் 25, கோபி 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லக்சன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 50 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பொற்பதி அணி ஒரு விக்கெட்டை இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிரோஜன் 23, கர்சன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் புருசோத் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

முதல் சுற்று ஆட்டத்தின் இறுதிப் போட்டியில் ஞான- கலா அணியும், நண்பர்கள் அணியும் மோதின. முதலில் ஆடிய ஞானகலா அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிருபன் தொடர்ச்சியாக ஐந்து சிக்ஸர்கள் அடித்ததுடன் 11 சிக்ஸர்களுடன் 73 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 84 ஓட்டங்களைப்பெற்றால் வெற்றி என்ற நிலை யில் களமிறங்கிய நண்பர்கள் அணி 4.4 ஓவர்கள் நிறை வில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் பிரதீபன், முகி லன் தலா 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் திவா- கர், சுதன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.(53)

## விளையாட்டுச் செய்திகள்

## ஆசிரியர்களுக்கான விளையாட்டு

ஆசிரியர்களின் விளையாட்டுத் திறனை அதிகரிகக்கும் நோக்கில் கல்விய மைச்சினால் நடத்தப்படும் வருடாந்த விளையாட்டுப்போட்டி இம்முறை திரு கோணமலையில் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

21ஆம் திகதி முதல்24ஆம்திகதி வரை தொடர்ந்து நான்கு தினங்கள் நடைபெற வுள்ள இப்போட்டியில், ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டி, பெண் களுக்காக வலைப்பந்தாட்டப் போட்டி மற்றும் மெய்வல்லுநர் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் 25 இற்கும் மேற்பட்ட அனைவரும் பங்குபெற முடி யும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் ஆசிரியர்கள் தமது விண்ணப் பங்களை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பதாக அதிபரின் சிபார்சுடன் கல்வி அமைச்சின் விளையாட்டுப் பிரிவுக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள் ளனர். 25-30, 30-35, 35-40, 40-45, 45-50, 50-55, 55 வயதுக்கு மேல் என் போட்டி கள் தனித்தனியாக நடத்தப்பட உள்ளன.

# கிளிநொச்சி ம.வியை தோற்கடித்த யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மகாவித்தியாலய அணிக்கெதிரான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணி அபார வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டமொன்று கடந்த 17ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கிளிநொச்சி மகாவித்தியாலய அணி கிசாந்துஜன், நிலோஜன் ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் ரஜீவன் சிறப்பான முறையில் ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்கப் போராடினார். இறுதி யில் கிளிநொச்சி மகாவித்தியாலய அணி 27 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரஜீவன் 51 பந்துகளை எதிர்கொண்டு 31 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் கிசாந்துஜன் ஏழு ஓவர்கள் பந்து வீசி, 25 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களையும், நிலோஜன் 10 ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 75 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி அணி நிலோஜன், லக்ஷி ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் இலகுவாக வெற்றிபெற்றது. இறுதியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 13.3 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஆட்டமிழக்காது நிலோஜன் 27ஓட்டங்களையும், லக்ஷி 24 ஓட்டங்களையும் பெற்று வெற்றிக்குத் துணைபுரிந்தனர். பந்து வீச்சில் ஜதுஷன் 18 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

# நிசாந்தன், கஜன் சிறப்பான செயற்பாடு
# மகாஜனா அபார வெற்றி



நிசாந்தன்



கஜன்

(தெல்லிப்பளை)

நிசாந்தன், கஜன் ஆகியோரின் சிறப்பான செயற்பாட் டின் மூலம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக் கெதிரான ஒரு நாள் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணி 17 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டாவது சுற்று ஆட்டமொன்று கடந்த வாரம் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப் பெடுத்தாடிய மகாஜனாக் கல்லூரி 45 ஓவர்கள் நிறை வில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 199 ஓட்டங் களைப்பெற்றது. இதில் நிசாந்தன் 54, ஜனந்தன் 35, ரசி- கரன் 31 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ரவிவர்மன் 49 ஓட்டங்களைக்கொடுத்து 3 விக்கெட்டையும் பிரவிந்த் 17 ஓட்டங்களைக்கொடுத்து 2 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 200 ஓட்டங்களை வெற்றியில்க்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல் லூரி 36 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 123 ஓட்டங்களைமாத்திரம் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் லிங்கராஜ் 17, கீர்த்தனன் 14, விபீஸ் 14 ஓட்டங்களைப்பெற்றனர். பந்துவீச்சில் கஜந்தன் 24 ஓட்டங்களை கொடுத்து 4 விக்கெட்டையும், பிரசாந்த் 13 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டையும் கைப்பற்றினர். யாழ்ப்பாணக் கல்லூரியை 73 ஓட்டங்களால் வெற்றி கொண்ட மகாஜனாக்கல்லூரி மூன்றாம் சுற்றுக்கு தகுதி பெற்றதோடு மூன்றாம் சுற்றில் கிண்ணியா மத்தியமகா வித்தியாலயத்துடன் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது(93)

# லசித் சம்பியன் வீரர்

(கொழும்பு)

லசித் மலிங்க சம்பியன் வீரர். அவ ரின் சிறப்பான பந்து வீச்சே நியூசிலாந்து அணிக்கெதிரான சூப்பர் ஓவரில் நாங்கள் வெல்ல முக்கிய காரணம் என இலங்கை அணியின் கப்டன் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்தார்.

நியூசிலாந்து அணிக்கெதிரான சூப்பர் -8 ஆட்டத்தில் கடைசி இரண்டு பந்துகள் இருக்கும் நிலையில் போட் டியை வென்றிருக்க வேண்டும். எதிர் பாராத விதமாக அப்போட்டியின்இறுதிப் பந்தில் ஒரு ஓட்டம் எடுக்க வேண்டிய நிலையில் ஒரு விக்கெட்டை இழக்க நேரிட்டது பெரும் தவறு. இருப்பினும் சூப்பர் ஓவரில் மலிங்கவின் பந்து வீச்சின் மூலம் வெற்றியைப் பதிவாக்கி யமை சிறப்பம்சம். மலிங்க ஒரு சம்பி யன் வீரர். நெருக்கடியான நேரத்தில் அவர் சிறப்பாக பந்து வீசியமை பாராட் டத்தக்கது எனத் தெரிவித்தார்.



உறவுப் பாலத்தை பலப்படுத்தும் வகையில், யாழ். மாவட்டத்திற்குட்பட்ட கடற்படை அணிக்கும், வேலணை ஐயனார் அணிக்குமிடையிலான சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டி ஒன்று அண்மையில் வேலணையில் நடைபெற்றது. இப்போட்டியில் ஆடிய இரு அணி வீரர்களையும் காணலாம். (85)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும்

– அபிமன்யு கட்டுரையிலிருந்து.

எப்பொழுதுமே நாம் மற்றவர்களையே குற்றம் கூறுவதோடு நின்று விடுவோம். எம்மை நாமே உள்நோக்கி, சீர்தூக்கி நமது குற்றங் குறைகளை அலசுவதில்லை, ஆராய்வதில்லை. அவற்றை நிவர்த்தி செய்ய முனைவதில்லை. இது தமிழர்களின் சாபக்கேடாகும். எமது இன்றைய இழி நிலைக்கு ஒரு முக்கிய காரணியுமாகும். இந்த மனப் பாங்கை நாம் களைந்தாக வேண்டும். இல்லாவிட்டால் எமக்கு என்றுமே விமோசனம் கிட்டாது.

ரி.என்.ஏ. தமிழ் மக்களின் பெரும்பான்மையினரால் தங்களைப் பிரதிநிதித்துவப் படுத்த தெரிவு செய்யப்பட்ட கட்சி என்பது இன்றைய நிலைமை. எனவே இக் காலகட்டத்தில் வெறுமனே மற்றவர்களையும் மற்றக் கட்சிகளையும் அரசாங்கத்தையும் குறை கூறிக்கொண்டிராமல் அடுத்த தேர்தலில் வெல்லுவதை மட்டும் குறிக்கோளாக வைத்து எதிர்மறை அரசியல் நடாத்தாமல் இனிமேலாவது தமிழ்மக்கள் அவர்கள் மேல் காட்டியிருக்கும் எதிர்பார்ப்புகளுக்குப் பங்கம் விளைவிக்காமல் நேர்மையானதும் காத்திரமானதுமான அரசியல் செயற்பாடுகளில் ரி.என்.ஏ.யினர் தீவிரமாகத் தங்களை ஈடுபடுத்துதல் வேண்டும்.

புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களைத் திருப்திப் படுத்துவதற்காக ரி.என்.ஏ.யின் அரசியல் இருக்கவேண்டும் என்பதல்ல அவசியம். ரி.என்.ஏ. ஐத் தெரிவு செய்த பெரும்பான்மை வடக்கு-கிழக்கு மாகாண மக்களின் மனநிலையும், அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதும், ஏக்கங்களைத் தீர்ப்பதுவுமே கட்சியினர் தம் தலையான கடமையாகக் கொண்டு செயற்பட வேண்டும்.



இதற்கு அவர்கள் முதலில் தங்களுக்குள் எதிர்காலத் தலைமைப் பதவிக்கான சண்டைகளையோ, மலிவான காய்நகர்த்தல்களையோ விட்டொழிக்க வேண்டும். இப்பொழுது அதன் தலைவராக அங்கீகரிக்கப்பட்டவர் சம்பந்தன். பல ஆண்டுகள் அரசியல் அனுபவம் வாய்த்தவர். அவர் தன் செயற்பாடுகளை சரியாகவும் நேர்மையாகவும் முன்னெடுக்கவில்லை என மக்கள் அவரை மறுதலிக்கும்வரை, அவரைத்தான் தலைவராக ஏற்றுக் கொள்ள வேண்டும். அவரும் ஒரு நேர்மையான, வல்லமை மிக்க, தன்னை நம்பும் மக்களின் நலனுக்காக இதயசுத்தியுடனான செயற்பாடுகளில் தன்னை அர்ப்பணிக்கும் தலைவராகச் செயற்பட வேண்டும்.

இரண்டாவதாக ரி.என்.ஏ.யினரும் அதன் தலைவர் சம்பந்தனும், பொத்தாம் பொதுவாக தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமை என்று சொல்லிக் கொண்டிருக்காது, தமிழ் மக்களின் நலனுக்காக அரசியல் அபிலாஷைகளுக்காக இன்றைய யதார்த்தத்தில் எப்படியான அரசியல் நிர்மாணங்களையும் நிர்வாகங்களையும் கோருகிறார்கள் என்பதைத் தீர்மானமாகத் தெளிவுபடுத்த வேண்டும்.

மூன்றாவதாக, இந்தியா உட்பட சர்வதேச நாடுகளின் ஆதரவு நிச்சயமாக வேண்டியதுதான். ஆனால், எமது நோக்கங்களைத் தெளிவு படுத்தாது, அவற்றை அடைவதற்கான வழிமுறைமைகளை வரையறுக்காது, சர்வதேச நாடுகள், இந்தியாவின் உந்துதல் என்றெல்லாம் பேசிக்கொண்டிருந்தால் மட்டும் ஒன்றையுமே அடைய முடியாது என்பதைப் புரிந்து கொண்டு ஒப்புக்கொண்டு, செயலாற்ற வேண்டும்.

நான்காவதாக, மகிந்த ராஜபக்ஷ அரசாங்க அதிகாரிகளுடன் நடைபெற்ற பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளின்போது என்னென்ன விடயங்களில் ஒற்றுமை எய்தப்பட்டன, வேற்றுமைகள் இருந்தன, எதுவித முடிவுக்கும் வரவில்லை என்பது பற்றி ஒளிவுமறைவின்றி பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும்.

ஐந்தாவதாக, பேச்சுவார்த்தைகள் மூலந்தான் ஒரு நியாயமானதும், நிரந்தரமானதுமான தீர்வை எய்தப்படல் வேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டு விட்டமையால், மகிந்த ராஜபக்ஷவின் பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்ற விடுத்திருக்கும் அழைப்பை நிராகரிப்பதானால், அதற்கான காரணங்களை விளக்க வேண்டும். அந் நிலைமையில், கட்சியின் அடுத்தகட்ட நடவடிக்கைகளையும் காலவரம்புகளையும் தெளிவாகவும் தீர்மானமாகவும் தெரிவிக்க வேண்டும். அவற்றை நடைமுறைப்படுத்தும் செயல்களில் இதயசுத்தியுடனும், எதுவித காலதாமதமின்றியும் இறங்க வேண்டும்.

இவற்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும், அக்கட்சியின் பெயரில் தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற மகாணசபை அங்கத்தினர்களும் விரைவில் செய்வார்களா? அல்லது அவர்களைத் தெரிவுசெய்த தமிழ்மக்களின் எதிர்பார்ப்புகளையும், எண்ணங்களையும், நம்பிக்கைகளையும் பொசுக்கப் போகிறார்களா???

---




**1888** ஆம் ஆண்டு, "பட்டனை அழுத்துங்கள். மற்றவைகளை நாங்கள் செய்கிறோம்" - என்ற வாக்கியத்துடன் 100 எக்ஸ்போஷர் புகைப்படச்சுருளுடன் கூடிய கமரா ஒன்றை 34 வயது வாலிபர் ஒருவர் விளம்பரப்படுத்தினார். பிலிம்கள் அனைத்தும் எடுக்கப்பட்டவுடன் கமராவை உரிமையாளர் தொழிற்சாலைக்கு அனுப்பி டெவலப்பிங் செய்து படங்களைத் தருவார். பின்னர் மீண்டும் புதிய ரோல் லோட் செய்யப்படும். இதை வடிவமைத்து விற்பனை செய்தவர் தான் ஜோர்ஜ் ஈஸ்ட்மன்.

இந்த கமராவின் விலை 25 அமெரிக்க டொலர். மிகவும் மலிவாகக் கருதப்பட்டாலும் இன்னும் சிறிய அளவில் கையடக்க அமைப்பில் தயாரிக்க வேண்டுமென்ற ஆர்வத்தில் தீவிர முயற்சிக்குப் பின்னர் கமரா விலை ஒரு டொலர். பிலிம் விலை ஒரு ரோல் 15 சென்ட் என்று அறிமுகப்படுத்தினார். சிறியதாகவும் எங்கு வேண்டுமானாலும் கையில் கொண்டு செல்லும் அமைப்பில் இருந்ததாலும் சுற்றுலா செல்பவர்கள் மட்டுமன்றி அன்றாட வாழ்க்கையிலும் புகைப்படமெடுப்பது இன்றியமையாததாகக் கருதப்பட்டது.


தன்னுடைய கண்டுபிடிப்பினால் ஒரே ஆண்டில் கோடீஸ்வரரான ஜோர்ஜ் ஈஸ்ட்மனது வருமானம் ஆண்டொன்றுக்கு ஒரு மில்லியன் டொலராக உயர்ந்தது. அன்றைய ஒருநாள் வாழ்க்கைக்கு ஐந்து டொலர் போதுமானதாக இருந்தது. 50 அறைகள் கொண்ட பிரம்மாண்டமான மாளிகையை கட்டி இருபதாண்டுகள் தனிமையில் வாழ்ந்த அவரது நியூயோர்க் மாளிகை தற்போது கட்டட அமைப்பில் எவ்வித மாற்றமுமின்றி அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் புகைப்படக் கலையின் வளர்ச்சியை விளக்கும் வகையில் சர்வதேச புகைப்பட அருங்காட்சியகமாக விளங்குகிறது. அவருக்குப் பின்னரும் தொடர்ந்து செயற்பட்டு வந்த "கொடாக்" நிறுவனம்தான் 1975 ஆம் ஆண்டில் முதன்முதலாக டிஜிட்டல் கமராவை அறிமுகப்படுத்தியது.

நியூயோர்க்கில் 1854 இல் பிறந்த ஜோர்ஜ் ஈஸ்ட்மன், 1878 ஆம் ஆண்டு தன் தாயாருடன் சான்டா டோமின்கோவுக்கு சுற்றுலா சென்றிருந்தபோது நினைவுக்காக கமரா ஒன்றை வாங்கி வந்தார். அந்த கமரா பெரியதாகவும் மைக்ரோ ஓவன் போன்று கனமானதாகவும் இருந்தது. மேலும் அதை வைப்பதற்கு தனியிடம் தேவைப்பட்டது. கமராவின் உள்ளேயிருந்த கண்ணாடி பிளேட்களில் எக்ஸ்போஸ் செய்து பின்னர் வேறோரு பிளேட்டில் அதை பதிவு செய்ய வேண்டும். அதன் பளுவை பார்க்கும்போது புகைப்படமெடுக்க இத்தனை சிரமம் தேவையா என்ற எண்ணம் ஜோர்ஜ் மனதில் தோன்றியது. சாதாரண மக்கள் பயன்படுத்தும் வகையில் இலகுவாக மாற்றலாமே என்று தோன்றியது.

அடுத்து மூன்றாண்டுகள் வேலையிலிருந்து திரும்பியவுடன் அம்மாவின் சமையலறையே சோதனைக் கூடமாகப் பயன்படுத்தி பரிசோதனைகளைச் செய்தார். சில சமயங்களில் வேலையிலிருந்து திரும்பியவர் உடைகளை மாற்றக்கூட நேரமின்றி சமையலறையிலேயே உறங்கியதும் உண்டு.

1881 ஆம் ஆண்டு கண்ணாடி பிளேட்களுக்குப் பதிலாக பேப்பர் மீது உருவம் பதியும்படி புதிய முறையைக் கண்டுபிடித்தார். அதற்குத் தகுந்த செல்லுலஸ் சொல்யுஷனுடன் கூடிய பிலிமையும் கண்டுபிடித்தார்.

தொடர்ந்து 1888 ஆம் ஆண்டு கையில் கொண்டு செல்லும் வகையில் பிளெக்ஸிபிள் பிலிமுடன் கூடிய கமரா உருவாயிற்று. "கொடாக்" என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டபோது ஜோர்ஜ் ஈஸ்ட்மன் கூறினார். '**k**' என்ற எழுத்து எனக்கு மிகவும் பிடிக்கும். அனைத்து எழுத்துக்களிலும் இது வலிமையாகவும் மனதில் பதியும் படியும் தோன்றியது. இந்த எழுத்தையே பயன்படுத்தி ஏன் புதிய வாழ்க்கையை தொடங்கக்கூடாது என்று மனதில் எழுந்த கேள்விக்குப் பதிலே "கோடாக்" என்ற வார்த்தை."



1924 ஆம் ஆண்டு ரோச்செஸ்டர் பல்கலைக்கழகம், மாசாசூசெட் இன்ஸ்டிடியூட், ஹம்ப்டன் இன்ஸ்டிடியூட் ஆகிய கல்வி நிறுவனங்களுக்கு ஒரே நாளில் 30 மில்லியன் டொலரை நன்கொடையாக எழுதிக் கொடுத்தார்.

கையெழுத்திட்டுக் கொடுத்தவுடன், "இப்போதுதான் நான் சுதந்திர மனிதனாக இருக்கிறேன்" என்று கூறினாராம். உடல் நலக்குறைவால் இயல்பு வாழ்க்கையை நடத்த முடியாமல் நடக்கவும் மிகவும் சிரமப்பட்டார். இந்த வலிகளிலிருந்து விடுதலை பெற தன் 77 ஆம் வயதில் 1932 ஆம் ஆண்டு துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

கடைசியாக அவர் தன் நண்பர்களுக்கு தெரிவித்திருந்த குறிப்பில், "என்னுடைய வேலைகளை முடித்துவிட்டேன். எதற்காக காத்திருக்க வேண்டும்" என்று எழுதியிருந்தார்.

---

# நோய் தீர்க்கும் இசை



தீராத நோய்களையும் குணப் படுத்தும் ஆற்றல் இசைக்கு உண்டு. அந்தந்த நோய்க்கான மருந்துகள் இருப்பது போல, நோயின் தன்மைக் கான இசை வடிவங்களும் உண்டு.

சூலை நோயால் துடித்த நாவுக் கரசர் "கொல்லிப்பண்" பாடியும் (கூற்றாயினவாறு எனும் பதிகம்) வெப்பு நோயால் துன்புற்ற பாண்டியனை திருஞானசம்பந்தர் "காந்தாரப் பண்" (மந்திரமாவது நீறு என்ற பதிகம்) நோய் தீர்த்ததை பற்றிய செய்திகளை பெரிய புராணத்தால் அறிகிறோம்.

ஆனால் "கொல்லி" "க்ாந்தாரம்" ஆகிய பண்களின் உண்மையான இசை வடிவங்கள் இன்று அறியப் படாத நிலையில், இரு பண்களும் "நவரோசு" என்னும் ஓர் இசையில் பாடப்பெறுகின்றன. "கொல்லி", "காந்தாரம்" ஆகிய பண்களின் தனித்தனி இசை வடிவங்களைக் கண்டறிதல், நோய்களுக்கான உரிய மாத்திரைகளைக் கண்டறிதல் போன்றதாகும்.

**(தமிழ் பல்கலைக்கழக செய்தி மடலிலிருந்து.)**

# தினமுரசின் 2 ஆம் ஆண்டு சிறப்புமலர் - 2012

## நேரிடை ஆற்றும் செயல்

புலரும் பொழுதினில் பல்சுவை அம்சம் ; நிதம்
புன்னகை தாங்கி எழுந்திடும் முரசம் ; முற்றம்
மலரும் பூவாய் மனமதில் உவகை ; நாளும்
மறையா யொளியாய் திசையது பரவும் ; பொய்மை
விலகும் செயலை எழுத்தால் நகர்த்தி ; உண்மை
விளங்கிட வைக்கும் தினஇதழ் முரசே ; வாழ்
நிலமதில் என்றும் நிமிர்ந்திடும் நடையாய் ; பணி
நேரிடை ஆற்றும் செயலது வளர்க!

- பிரியா பரந்தாமன்
கைவேலி.


தினமுரசின் அகவை என்றும்
சிறப்புடன் அதிகரிக்க வாழ்த்துகிறோம்

அனைத்துவகையான பாடசாலை உபகரணங்கள், எழுது பொருட்கள்
மற்றும் சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பவற்றினை
ஒரே கூரையின்கீழ் பெற்றுக்கொள்ளலாம்

KPK Center

தொ.பே : 024 222 2504

24, பஸ் நிலையம்,
வவுனியா.

(C/2033)


பல்சுவை அம்சமாய் பாமரருக்கேற்றதாய்
என்றும் நீ வருக! வருக!




(C/2024)


ஆண்டுகள் பல இதேபோல் என்றும் எழுந்து வர வாழ்த்துகிறோம்

ஆனந் மணப்பந்தல்
சேவை

மேல்மாடி, சொக்கட்டான் பந்தல்கள், ஒலி, ஒளி அமைப்புக்கள்,
பொக்ஸ் செற்கள் போன்றவற்றினைப் பெற்றுக் கொள்ளலாம்.
உங்கள் வீடுகளில் மங்கள நிகழ்வுகளிற்கு
அழகான முறையில் அமைத்துப்
பெற்றிட நாடவேண்டிய ஒரே இடம்.

ஆனந் மணப்பந்தல் சேவை

முருகமூர்த்தி வீதி,
நெல்லியடி.
தொ.பே: 077 729 0536

(C/2023)



தேமதுர தமிழ் இதழாய் என்றும் நீ வருக

புகழ்பெற்ற புத்தக வியாபாரிகளும் புதினப்
பத்திரிகைகளின் பிரதம முகவரும்

துர்க்கா பொத்தகச் சோலை





தொ.பே :021 224 0267

பஸ்நிலையம் முன்பாக,
சுன்னாகம்.

(C/2030)



சுவை பலவாய் செய்தி தரும்
தினமுரசின் பணி சிறக்க
வாழ்த்துகிறோம்.

Hotel Swarkka
Food &
Accommodation

A/C non A/C Rooms with T.V
A/C non A/C Restaurant
Jaffna Style foods

Tel: 021 222 0109
H.P: 0772489418

Acc Credit Cards
Accepted





No.06: Temple Road,
Sattanathar Kovil Road Junction,
Jaffna.

(C/2029)

# தினமுரசின் 2 ஆம் ஆண்டு சிறப்புமலர் - 2012




# தினமுரசின் 2 ஆம் ஆண்டு சிறப்புமலர் - 2012

## தினமுரசு தினப்பதிப்பிற்கு எமது நல் வாழ்த்துக்கள்

எமது யாழ். மண்ணில் தினமுரசு நாளிதழாய்
அவதரித்து, இன்றுடன் மூன்றாவது வயதில்
காலடிபதிக்கின்றது. யாவரும் போற்றும் அளவுக்கு
உண்மை, நேர்மை, விசுவாசத்தோடு
ஓடி விளையாடி அனேகமான மக்களை தன் வசமாக்கிவிட்டான்.
தினமுரசு பத்திரிகை பெரியோர்களின்
ஆசீர்வாதத்தோடு நீடுழி வாழ்ந்து
தனது சேவையைச் செய்வான் என மனமுவர்ந்து
இதய சுத்தியுடன் பாராட்டிக் கொள்ளும்

லாலா சோப் உரிமையாளர்
அச்சுவேலி.

(C/2013)

தினமுரசின் பணி தடையின்றித் தொடர வாழ்த்தும்

## மதிகலர்ஸ்

### திருமண அழைப்பிதழ் காட்சியறை

உங்கள் இல்லங்களில் நடைபெற இருக்கின்ற மங்களகரமான நிகழ்வுகளிற்கு / பலவர்ண புத்தம் புதிய டிசைன்களுடன் மலிந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

MATHI COLOURS WEDDING CARD SHOW ROOM

15/2, முருகேசர் லேன்
நல்லூர்
T.P.021 222 9285
077 722 2524
web: www.mathi colours.com

கிளை நிறுவனம்:
61, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆசீர்வாதம் ஸ்ரோர்ஸ்)

(C/2012)

தினமுரசு நாளிதழினை மனதார வாழ்த்துகிறோம்

## தர்சினி

### மரத்தளபாட இயந்திரத் தொழிற்சாலை



சகல விதமான
நுட்ப வேலைகளிற்கும்
சிறந்த இடம்

காளி கோயிலடி,
சங்கானை.

021 321 9433
077 957 6705

(C/2017)

தடைகள் யாவும் கடந்து பல்லாண்டு வளர வாழ்த்தும்

## கோசலா லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

- குறிப்பிட்ட காலப் பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.
- விரும்பிய நேர வாகனப் பயிற்சி.
- விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள்.



சாரதிப் பத்திரம் பெறுபவர்களுக்கு
வேலை வாய்ப்பு
பெற்றுக் கொடுக்க ஏற்பாடுகள்
செய்து கொடுக்கப்படும்.

Managing S.Ravichandran
T.P: 077 535 6979

- யாழ்ப்பாணம்,
- சாவகச்சேரி,
- பருத்தித்துறை.

(C/2011)

மெய் பொருளாய் நீ மலர்ந்து இன்று
மூன்றாண்டு மேலும் உன் வளர்ச்சிக்காய் வாழ்த்தும்

## V.S.P

### SPECIAL LUNCH OIL



சுகாதார முறைப்படி
உணவிற்கும்
வைத்தியத்திற்கும்
விசேடமாக தயாரிக்கப்பட்டது.

பரிமாளா ஸ்ரோர்ஸ்,
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/2015)

மூன்றாவது ஆண்டில் தடம்பதிக்கும்
தினமுரசு தினப்பதிப்பை வாழ்த்துகிறோம்

## சீலன் அலுமினியம் பிற்றிங்

டோகா, டுபாயில்
10 வருட அனுபவம் உள்ளவர்கள்

021 4902561
077 805 0918

54, கே.கே.எஸ். வீதி,
கொக்குவில் சந்தி.

(C/2016)

சுவைமிகு செய்திகள் தரும் தினமுரசு தினப்பதிப்பிற்கு
எமது நல்வாழ்த்துக்கள்

## ESTY LEARNERS

அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

- விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- செயன்முறை விசேட பயிற்சி
- மாருதி சுசுக்கு கார் விசேட பயிற்சி.
- 25 வருட அனுபவம் வாய்ந்த பயிற்றுவிப்பாளர்கள்.

103, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்:
சொக்கலிங்கம் பாஸ்கரன்
077 174 9387

(C/2019)

புலரும் பொழுதில் புதியன தாங்கி நாளும் வலம் வரும்
தினமுரசு தினப்பதிப்பின் வளர்ச்சி நன்கு மேலும் தழைப்பதாக

## கிருபா லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற A தர கனரக சாரதிப் பயிற்சிப் பாடசாலை

- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.
- வான், முச்சக்கரவண்டி, உழவு இயந்திரம் (டிரைக்டர்) அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் இரண்டு வருடம் பூர்த்தி. ஆனால் கனரக வாகன (AD) சாரதி அனுமதிப்பத்திரம் பெறமுடியும்.
- கனரக வாகன (AD) சாரதி அனுமதிப்பத்திரம் பெற அசோக் லேடன் பஸ் மூலம் பயிற்சி பெறலாம்.
- தவணைமுறைக் கட்டணம்.
- எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்பு நடைமுறை.

**தலைமைக்காரியாலயம்**
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 4353, 021 492 3200, 071 454 6952, 077 722 5292.

| சுன்னாகம் | கிளிநொச்சி | சாவகச்சேரி | நெல்லியடி | விசுவமடு | பருத்தித்துறை |
|---|---|---|---|---|---|
| 021 224 2022 | 021 228 5505 | 021 492 3202 | 021 300 6550 | 021 320 1515 | 021 492 3201 |
| 071 454 6956 | 071 454 6955 | 021 227 0700 | 021 492 3201 | 071 454 6955 | 071 454 6958 |


(C/2018)

# தினமுரசின் 2 ஆம் ஆண்டு சிறப்புமலர் - 2012

என்றும் இதே போல் முரசே நீ எழுந்து வருக!

## வெங்கடேஸ்வரா

உங்களுக்குத் தேவையான லுமாலா சைக்கிள்
மற்றும் அதன் உதிரிப்பாகங்களினையும் பெற்றுக்கொள்ளலாம்




வெங்கடேஸ்வரா ரான்ஸ்போட் சேவிஸ்
ஏ-9 வீதியூடாகப் பொதிகளை ஏற்றி இறக்கும் பணியில்
நாணயத்துடன் ஈடுபடும் ஒரே ஒரு ஸ்தாபனம்

இல: 125, 127
கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 8306

(C/2027)

---

Cargills KIST

Kist பிஸ்கட் வகை, Kist குடிதண்ணீர்,
கொத்மலை பால், யோக்கட் போன்றவற்றின்
யாழ். மாவட்ட விநியோகஸ்தர்.

**மகிழ்ச்சியைப் பகிருங்கள்**
**சுவையை அனுபவியுங்கள்.**



நடராசா B.S
41, 49, மருதடி லேன்
நல்லூர்.
தொ.பே: 021 490 0624
077 222 9354

(C/2026)


---

வாழ்க உன்சேவை என வாழ்த்துகின்றோம்

## R.V.G.MEDICALS



ஆங்கில மருந்துவகைகள், ஊட்டச்சத்துகள் மற்றும்
பால்மா வகைகள் அனைத்தையும் நியாயமான
விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்



504, ஆஸ்பத்திரி வீதி,
(OPD முன்பாக)
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2129

(C/2025)

R.V.G.ஸ்தாபனம்
58, நல்லூர் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்.
தொ.பே . 021 222 6806



வெற்றியின் ரகசியம் உழைப்பில்தான் உள்ளது. உழைப்பு என்பது ஆன்மாவின் ஆனந்த ராகம்.

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஆபிரகாம் லிங்கன் உழைப்பால் உயர்ந்தவர். அவர் ஒருமுறை ஒரு

# வெற்றியின் இரகசியம்




பொதுக்கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்த போது அவரை அவமானப்படுத்த எண்ணிய ஒருவர், "திரு.லிங்கன் அவர்களே...உங்களைப் பற்றி மிகவும் பெருமையாக நினைத்துக் கொள்ள வேண்டாம். உங்கள் அப்பா தைத்த செருப்பைத்தான் நான் அணிந்து கொண்டிருக்கிறேன்" என்று உரத்த குரலில் கூறினார்.

அதாவது லிங்களை அவர் ஒரு செருப்பு தைக்கும் தொழிலா-ளியின் மகன்தானே என்று அவமானப்படுத்த எண்ணினார்.

ஆபிரகாம் லிங்கன் [illegible]து கூடக் [illegible]மில்லாமல், [illegible]பரே! உங்களுக்கு நன்றி. இன்னும் நீங்கள் என் தந்தை தைத்த செருப்பை அணிந்து கொண்டு இருக்கிறீர்கள் என்றால் என் தந்தையின் தொழில் நேர்த்தி எவ்வளவு என்பது எனக்குப் புரிகிறது. ஒரு வேளை அந்தச் செருப்புப் பழுதாகிப் போனால் ஜனாதிபதி மாளிகைக்கு தயங்காமல் கொண்டு வாருங்கள். நான் சரியாகத் தைத்துக் தருகிறேன்" என்று கூறினாராம்!

அந்த அளவு உழைப்பின் பெருமையை அவர் உணர்ந்திருந்த காரணத்தினால் தான் மிக மிகப் பின்தங்கிய ஏழைக் குடும்பத்தில் பிறந்து 11 மாதமே பள்ளிக்கூடக் கல்வியைப் பெற்ற லிங்கன் அமெரிக்க நாட்டு ஜனாதிபதி ஆனார்.

('பாதை பழசு, பயணம் புதுசு' என்ற நூலிலிருந்து)




# 351 அவனா? அவளா?


க.நவம்

தலையங்கமே தலைச் சுற்றை ஏற்படுத்துகிறதா? உங்கள் தொலைபேசி இலக்கத்திலும் சரி, நீங்கள் வாங்கும் ஒரு பொருளின் விலையிலும் சரி, ஆண் எது? பெண் எது? என அடையாளம் காணும் காலம் விரைவில் வரலாம். கலிகாலம்தானே என்று தலையில் அடித்துக் கொள்ளாதீர்கள்! இது அமெரிக்காவில் உள்ள நோர்த் வெஸ்ரேர்ன் பல்கலைக்கழக ஆய்வாளரான ஜேம்ஸ் வில்கி என்பவரது கண்டுபிடிப்பு. என்ன செய்யலாம், நம்பித்தானே ஆகவேண்டியிருக்கிறது!

நாங்கள் இந்த உலகில் காலடி எடுத்து வைத்த நாள் முதலாக, ஆடைகள் முதற்கொண்டு அத்தனை பொருட்களிலும் அவற்றின் நிறங்கள், வடிவங்கள் என்பவற்றின் அடிப்படையில், எது ஆணுக்குரியது? எது பெண்ணுக்குரியது? எனக் கற்பிக்கப்படுகிறோம். பொதுவாக மனிதரிலும், விலங்குகளிலும், ஏன் சில தாவரங்களிலும்கூட, ஆண் - பெண் வேறுபாட்டை இலகுவில் இனங்காணப் பழக்கப்பட்டுவிடுகிறோம். இந்தப் பயிற்சி காரணமாக, எம்மை அறியாமலே, நாம் காணும் அனைத்திலும் ஆண், பெண் பண்புகளைப் பார்க்கத் தொடங் கிவிடுகிறோம், ஆதவனை ஆணென்றும், ஆழ்கடலைப் பெண்ணென்றும் சொல்லுமாப்போல. இதன் தொடர்ச்சியாக, ஒரு இலக்கத்திலும் ஆண்மையா, பெண்மையா ஒளிந்திருக்கிறது எனக் கண்டறியலாம் என்ற தவல் ஒரு புதினம்தானே?

இலக்கம் ஒன்று அதிகாரத்தையும் தன்னுரிமையையும் வலியுறுத்தும் ஓர் இலக்கம் என்பதால், இது ஆண் தன்மை கொண்ட இலக்கமாகக் கருதப்படுகிறது. ஆனால் இலக்கம் இரண்டு நட்பையும், நல்லுறவையும், கூடுதலான சமூக ஊடாட்டத்தையும், கரிசனையையும் வலியுறுத்தும் ஓர் இலக்கமாகும். இது பெண்மையைப் பிரதிபலிக்கும் இலக்கம் எனக் கூறப்படுகிறது. இப்பண்புகள் முறையே சகல ஒற்றை எண்களுக்கும், இரட்டை எண்களுக்கும் பொருந்தும் என்பது அன்றைய எண்சாஸ்த்திரம் முதற்கொண்டு இன்றைய ஆய்வுகள் வரை கண்ட முடிவு.

பொதுவாகவே, சிந்திப்பதற்கு இலகுவாயிருப்பவை எவையும் அதிக சௌகரியமும், நட்பும் கொண்டவை என்பது அனுபவ வாயிலாகக் கண்ட உண்மை. இது பொது வாகப் பெண்களுக்கும் பொருந்தும். இதன் உண்மை, பொய் அறிய ஆர்வமாய் இருந்தால், நீங்களே இதைச் செய்து பாருங்கள்.




100 வரை உள்ள இரட்டை இலக்கங்களை இடைவிடாமல் தொடர்ந்து சொல்லிப் பாருங்கள். அது முடிந்ததும் 99 வரையிலான ஒற்றை எண்களை இடைவிடாமல் தொடர்ந்து சொல்லிப் பாருங்கள். இரட்டை எண்களைச் சொல்வதில் பொதுவாகச் சிரமம் இருக்காது. மிக இலகுவாக இரண்டிலிருந்து நூறு வரை சொல்லி முடிப்பீர்கள். ஆனால் ஒன்று முதல் தொண்ணூற்றொன்பது வரையிலான ஒற்றை எண்களைச் சொல்லும்போது இதே இலகு தன்மை எல்லோருக்கும் இருக்காது. உங்களில் அநேகமானோர் நிச்சயம் இடையிடையே சிரமப்படுவீர்கள். இதிலிருந்து இலக்கங்களிலும் பாலின வேறுபாடு உண்டென்பது உறுதியாகின்றதல்லவா?

இனி உங்கள் வீட்டு இலக்கத்தில் ஆண்மை தெரிகிறது என ஆரும் சொன்னால், தயவுசெய்து ஆத்திரப்படாதீர்கள்.

# சரோஜா தேவி!

The most poetic Actress!



R.P ராஜநாயஹம்

எஸ்.எஸ்.ஆர். சமீப குமுதம் ஒன்றில் சரோஜா தேவி அவருடைய திருமணப் பத்திரிகை கொடுக்க வந்த போது "என்ன சரோஜா? நான் உன்னை கல்யாணம் பண்ணிக்கலாம் என்று இருந்தேன். இப்படி செஞ்சிட்டியே!" என்று ஜோக் அடித்ததாக குறிப்பிட்டிருந்தார்.

இது பரவாயில்லை. சிவாஜி கணேசன் சரோஜா தேவியின் மாப்பிள்ளையிடமே "நான் சரோஜாவை கல்யாணம் செய்யலாம் என்று நினைச்சிகிட்டு இருந்தேன். நீங்க முந்திட்டீங்க" என்று விவஸ்தையில்லாமல் ஜோக் அடித்து இருக்கிறார். இதை சரோஜதேவியே ஒரு பேட்டியில் முன்னர் குறிப்பிட்டிருந்தார்.

இயக்குநர் டி.ஆர்.ராமண்ணா கூண்டுக்கிளி, புதுமைப்பித்தன் படங்களில் தான் நடிக்க வைத்த பி.எஸ். சரோஜாவை இரண்டாவது திருமணம் செய்தார். பின்னர் தன் படத்தில் நடித்த இ.வி.சரோஜாவை மூன்றாவது மனைவியாக்கி கொண்டார்.

அடுத்து ராமண்ணா "மணப்பந்தல்" படத்தில் சரோஜா தேவியை கதாநாய கியாக புக் செய்தவுடன் அவருடைய அக்கா டி.ஆர்.ராஜகுமாரி பதறிப் போய் "டே உனக்கும் சரோஜா என்ற பேருக்கும் ரொம்ப வில்லங்கம் உண்டு. இவளையும் கல்யாணம் பண்ணிடாதே. சத்தியம் செய்" என்று சொன்னதாக சொல்வார்கள்.

சரோஜா தேவி என்ற புனை பெயரில் யாரோ ஒரு ஆள் ஆபாசக் கதைகள் எழுதி அந்தக் காலத்தில் "சரோஜா தேவி புத்தகம்" ரொம்ப பிரபலம். சிறுவனாய் இருக்கும்போது நீதி போதனை வகுப்பில் "வாடாமல்லி" என்ற சரோஜாதேவி புத்தகம் படிக்கும் போது நீதி போதனை ஆசிரியரிடம் மாட்டிகொண்டேன்.

பின்னர் அதே ஆண்டு பள்ளியிறுதி ஆண்டு மாணவர்களுக்கு பிரிவு உபசார விழாவில் நான் "நல்ல பேரை வாங்க வேண்டும் பிள்ளைகளே! நம் நாடு என்னும் தோட்டத்திலே நாளை மலரும் முல்லைகளே!" பாடலை இசைக்குழுவில் பாடினேன்.

அந்த நீதி போதனை ஆசிரியர் "டே, நல்ல பேரை வாங்கவேண்டும் பிள்ளைகளே" பாட்டைப் பாட நம்ம ஸ்கூல்லே வேற பயலே இல்லையாடா? என்னடா இவன் பாடுறான். devil quoting the bible! என்று விழா முடிந்தவுடன் கிண்டல் பண்ணினார்.

சரோஜா தேவி கொஞ்ச நாள் முன், முன்னாள் கர்நாடக முதல்வர் கிருஷ்ணா விஷயத்தில் ஏன் பயங்கரமாக மூட் அவுட் ஆகி அழுது அழுது கண்ணீர் வற்றி சிரமப்பட வேண்டியிருந்தது.

கிருஷ்ணாவின் இதயம் நிறைந்த இங்கித நினைவுகளில் சரோஜாதேவி!

எவ்வளவோ வதந்திகள் நடிகைகள் பற்றி வரத்தான் செய்யும். இவர் அதைப்பற்றி ரொம்ப வேதனை பட்டிருக்க தேவையில்லை.

சாவித்திரியை மயிரிழையில் மிஞ்சி விட்டவர் சரோஜாதேவி.

இவருக்கு கிடைத்த சான்ஸ் அப்படி.

எம்.ஜி.ஆர். கூட நடித்தவர்களில் எல்லோரையும் விட பொருத்தமாய் அமைந்த நடிகை சரோஜா தேவி மட்டுமே. நாடோடி மன்னன் துவங்கி அரசகட்டளை வரை.



சிவாஜியின் மணியான அத்தனை படங்களிலும் "பாகப், பிரிவினை" தொடங்கி ஆலயமணி, புதிய பறவை என்று எத்தனை படங்கள்.

ஜெமினி கணேசன் படங்கள் "கல்யாணப் பரிசு" முதல் "பணமா பாசமா" வரை. ஜெமினியை "அண்ணா" என அழைப்பார் சரோஜா தேவி.

இப்படி Platform சரோஜா தேவி தவிர பிற நடிகைகளுக்கு கிடைக்கவில்லை. அதனால் ஏனைய நடிகைகளின் பொறாமைக்கும் உள்ளானவர்.

சாவித்திரி பல சிக்கல்களை தன் வாழ்வில் சந்தித்து சிரமத்திற்கு உள்ளாகி தன் முடிவு-கள் பல்வற்றினால் தொழிலில் பிரச்சினைகளை ஏற்படுத்தி கொண்டதால் அவரை சரோஜா தேவி ஓவர் டேக் செய்தார்.

சாவித்திரி, சரோஜாதேவி, தேவிகா மூவரும் தமிழ் திரையின் குறிப்பிடத்தக்க சாதனையாளர்கள். நடனம் அவ்வளவாக தெரியாவிட்டாலும் தங்கள் நளினமான பாவனைகளால், நடிப்பால் பத்மினியையே மிரட்டியவர்கள். பத்மினியின் நடிப்பில் மிகை, செயற்கைத் தனம் இருந்தது.

அறுபதுகளை தமிழ் திரையுலகில் முழுமையாக ஆக்கிரமித்தவர் சரோஜா தேவி. அதற்குப் பின்னர் இவர் அளவுக்கு வேறு யாருக்கும், எந்த நடிகைக்கும் மேடை கிடைத்ததில்லை.

அபிநய சரஸ்வதி, கன்னடத்து கிளி.

இவருக்காக ஐம்பதுகளில் திரைப்பட சான்ஸ் தேடிய பத்மா சுப்ரமணியத்துக்கு ஒரு சபாஷ் சொல்லலாம். சில முயற்சிகள் சீரிய முயற்சிகள் எனக் காலம் காட்டுகிறது!

# புதுக்குடியிருப்பு - 1ஆம் வட்டாரத்தில் உலகை அளந்த விநாயகனின் உன்னத வரலாறு

வன்னி வளநாட்டில் வரலாற்றுப் பெருமைகளைக் கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் நீர்வளமும் நிலவளமும், காட்டுவளமும் கொண்ட முல்லை - பரந்தன் வீதியும், ஒட்டுசுட்டான் - மாத்தளன் வீதியும் ஒருங்கே இணைக்கும் மத்தியில் புதுக்குடியிருப்புக் கிராமம் அமைந்துள்ளது.

இக்கிராமத்தில் மக்கள் முதன்முதலாக எப்போது குடியேறினார்களோ அப்போதிருந்தே உலகளந்த பிள்ளையார் ஆலயமும் அமைக்கப்பட்டு, வழிபாடு செய்யப்பட்டது. "கோயில்கள் இல்லாத இடத்தில் குடியிருத்தல் ஆகாது" எனும் மூத்தோரின் சொல்



வாக்கிற் கிணங்க, அதன் யதார்த்தத்தைப் புரிந்து கொண்ட இக்கிராம மக்கள், உலகளந்த பிள்ளையார் ஆலயத்தை உருவாக்கினார்கள் என்றும், இவ் ஆலயம் ஏறத்தாள ஐநூறு ஆண்டு கால தொன்மையுடையது என்றும், வன்னி வளநாட்டில் வற்றாப்பளை கண்ணகி அம்பாள் ஆலயம், ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயம் என்ற வரலாற்றுப் பெருமைமிக்க ஆலயங்களோடு இந்த உலகளந்த பிள்ளையார் ஆலயமும் ஒன்றெனக் கருதப்படுவதாகக் கூறப்படுகிறது.

வரலாற்றுச் சான்றுகளின்படி ஆரியர் என்பவாகள் இந்நாட்டிற்கு வருவதற்கு முன்னரே பூர்வீகக் குடிகளாக தமிழர்கள் இப்பகுதிகளில் வாழ்ந்தார்கள் எனவும், இதுபோன்றே புதுக்குடியிருப்பில் மக்கள் குடியேறிய காலத்தில் இக்கோயில் அமைக்கப்பட்ட இடத்தில், இடிந்து அழிந்துபோன நிலையில் கோவில் ஒன்றின் எச்சசொச்சங்கள் காணப்பட்டதாகவும், ஆகையால் மக்கள் இவ்விடத்தைத் துப்புரவு செய்து, கொட்டில் ஒன்றை அமைத்து பிள்ளையாரை வழிபாடு செய்ததாகவும் கூறப்படுகிறது. இதற்கு அத்தாட்சியாக கோவிலைச்சுற்றி ஆலமரங்கள், பனிச்சை மரங்கள் மற்றும் மாமரங்கள் வளர்ந்து சோலையாகக் காட்சியளித்ததோடு, இன்றும் கூட அம்மரங்கள் பிள்ளையாரின் அடியவர்களுக்கு நிழல் கொடுக்கும் பெருவிருட்சமாக வளர்ந்து நிற்கின்றமை குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும்.

இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் கொட்டிலாகக் காட்சியளித்த இக்கோயில், ஒட்டுக் கட்டமாக நிர்மாணிக்கப்பட்டதோடு, படிப்படியாக வளர்ச்சியடைந்து, மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற ஆலயத்துக்குரிய சகல அம்சங்களையும் உள்ளடக்கியதோடு, மூலஸ்தானம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஞானமண்டபம், தம்ப மண்டபம், வசந்த மண்டபம், மணி மண்டபம் உட்பட பரிவார



அகழ்வின்போது கண்டெடுக்கப்பட்ட ஆதிவிநாயகரும், அதனோடு தோன்றிய மூசிகமும்

மூர்த்திகளுக்கான ஆலயங்களும் அமைக்கப்பட்டு பூசைகள் நடைபெற்று வந்தபோதும், கடந்த கால போர்ச்சூழல் காரணமாக இன்று இவ்வாலயத்தில் பாலஸ்தானம் செய்யப்பட்ட நிலையில் பூசைகள் நடைபெற்று வருகின்றன.

ஏற்கனவே முன்பு கூறப்பட்டது போன்று விநாயகர் ஆலயம் அமைக்கும் நோக்கத்துடன் அதற்குரிய இடத்தில் துப்புரவு செய்தபோது முன்பே ஆலயம் அமைந்திருந்த கட்டட இடிபாடுகள் அவ்விடத்தில் மேடாகக் காணப்பட்டதாகவும், அந்தப பழைய கோவிலானது செங்கற்களால் கட்டப்பட்ட தென்பதை, சிதைந்து குவியலாகக் கிடந்த செங்கல் மேட்டிலிருந்து அறியக் கூடியதாக இருந்ததாகவும் வரலாறு கூறுகின்றது.

இவ்வாறு தோண்டி எடுக்கப்பட்ட செங்கற்களுக்குள் விநாயகர் விக்கிரகம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு, அவ்விக்கிரகம் இன்றும் கூட கோவிலின் மகா மண்டபத்தின் தென்புறமாக வைத்து பூசை வழிபாடுகள் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இவைதவிர, இந்த உலகளந்த பிள்ளையாரின் மிகப் பழமையான வரலாற்றை எடுத்துக் கூறும் செவி வழிக்கதையும் ஒன்று உண்டு.

நாவற்பறங்கியென்று அழைக்கப்படும் ஒல்லாந்தன் ஒருவன் மாத்தளனில் வந்திறங்கியபோது, புதுக்குடியிருப்பு உலகளந்த பிள்ளையார் ஆலயத்தையும் அருகில் உள்ள கிறிஸ்தவ தேவாலயமான சூசையப்பர் ஆலயத்தையும் இடித்தழிப்பதாக உறுதிகொண்டவேளை, அக்கணமே அந்த ஒல்லாந்தன் தன் இரண்டு கண்களும் பார்வை இழந்தவனாய் செய்வதறியாது திகைத்து நின்றபோது, அவ்வழியால் வந்த ஊர்வழிப்போக்கன் ஒருவன் நடந்ததைக் கேள்விப்பட்டு, "உனக்கு மீளக் கண்பார்வை கிடைக்கவேண்டுமானால் எந்தக் கோவில்களை நீ இடித்தழிப்பதாக உறுதி கொண்டாயோ, அந்த இருகோவில்களுக்கும் காணிக்கை செலுத்து. அப்போது நீ திரும்பக் கண்பார்வை பெறுவாய்" எனக் கூறியுள்ளான்.

வழிப்போக்கனுடைய வார்த்தையை ஏற்றுக் கொண்ட அந்த ஒல்லாந்தனும், உலகளந்த

அலெக்ஸ் பரந்தாமன்
புதுக்குடியிருப்பு

பிள்ளையார் ஆலயத்துக்கு வெள்ளியிலான முக படாகமும் மற்றும் திருவாசியும் சூசையப்பர் ஆலயத்துக்கு காற்பாதமும் காணிக்கையாகச் செலுத்தி, வழிபட்டு, திரும்பவும் கண்பார்வை அடைந்ததாகவும் கூறப்படுகிறது.

இதுதவிர, ஐயோப்பியரான போத்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்துக்கு முன்பு இலங்கையின் கரையோரப் பகுதியைக் கைப்பற்றி ஆட்சி புரிந்தபோது, வன்னிஇராச்சியம் வன்னியர் என்னும் குறுநில மன்னாகளால் தொடர்ந்தும் ஆளப்பட்டு வந்தகாலத்தில், பெரியவன்னியன், சின்னவன்னியன் என்ற இரு குறுநிலமன்னர்கள் இப்பகுதியை ஆண்டுவந்ததாகவும், இவர்களில் ஒரு குறுநிலமன்னன் பிள்ளையார் ஆலயத்தில் இருந்த கருங்காலிக் கதிரை ஒன்றை அபகரித்துக் கொண்டவேளை, பிள்ளையார் அவ்வன்னியனின் கனவில்தோன்றி "நான் மட்டும் கீழே இருக்க, நீ மட்டும் கதிரையில் இருக்கலாமா?" எனக் கேட்டதும், உடனே அக்குறு நிலமன்னன் பிள்ளையாருக்கு கருங்காலிக் கதிரை ஒன்றைச் செய்வித்து இவ்வாலயத்துக்கு வழங்கியதாகவும் அறிய முடிகிறது.


அத்தோடு, இவ்வாலயத்தின் வரலாற்றுத் தொன்மையை எடுத்துக் கூறும் சான்றாக காதொடிந்த நிலையில் ஒரு மூசிக வாகனம் (கருங்கல்லினாலான எலியின் வடிவம்) இன்றும் உள்ளது.

இந்த மூசிக வாகனமானது பிள்ளையாரின் அற்புதத்திருவிளையாடலை பறைசாற்றி நிற்கும் இன்னொரு வரலாறாகும்.

முன்னொருகாலத்தில் இக்கிராமத்தில் மழை பெய்யாது கடும் வறட்சி ஏற்பட்டபோது, ஊரில் உள்ள கிணறுகள் அனைத்தும் வற்றி விட்டன. ஆனால், ஊரின் நடுவே வாழ்ந்து வந்தவர்களான தம்பையா, நாகமணி, வைராத்தை, சின்னர் ஆகியோரது கிணறுகளில் மட்டும் நீர் வற்றாதிருந்த நிலையில், ஊர்மக்களுக்கு அக்கிணறுகளில் இருந்து ஒரு குடம நீர் பகிர்ந்தளிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

இந்நிலையில், உலகளந்த பிள்ளையார் ஆலயததுக்கும் ஒரு குடம் நீர் பூசைக்காக வழங்கப்பட்டுக்கொண்டிருந்த நிலையில், இவ்வாலயத்தின் பூசகர் ஒருநாளைக்கு ஒரு குடம் நீர் பூசைக்குப் போதாமல் இருப்பதால், ஊர்மக்கள் அனைவரையும் அழைத்து பிள்ளையார் ஆலய வளவினுள் கிணறு ஒன்றை வெட்டுவதற்கு கூறியுள்ளார். ஊர்மக்களும் பூசகரின் வார்த்தைக்கு இணங்கி கிணறு ஒன்றை வெட்டிக்கொண்டிருக்கும் போது கிணற்றினுள் பெரிய சத்தமாக கருங்கல்லில் மண்வெட்டி பட்ட சத்தம் கேட்டுள்ளது. இதனால் ஆச்சரியமடைந்த அவர்கள் இன்னும் சிறிது வெட்டியபோது காது வெட்டப்பட்ட இடத்தில் இருந்து பால் ஒழுகிய நிலையில் ஒரு மூசிக வாகனம் வெளிக்கிளம்பியதைக் கண்டு கிணறு வெட்டியவர்கள் ஆனந்தக் கூத்தாடியுள்ளார்கள். உலகந்த பிள்ளையாரின் அருளினால்தான் மூசிகம் கிடைத்ததென்ற பயபக்தியோடு கிணற்றை இன்னும் ஆழமாக வெட்டியபோது கிணற்றில் நீர் ஊற்றெடுக்கவில்லை. தொடர்ந்து கற்பாறைகள் அதிகமான்தால் மேற்கொண்டு வெட்டமுடியாதென்ற நிலையில் மனம்சோர்ந்து போனார்கள்.

இந்நிலையில், ஆலயத்தின் பூசகர் "பிள்ளையாரே! உனக்கு தூரத்தில் இருந்து ஒரு குடம் தண்ணீர் கொண்டுவந்து பூசைசெய்கிறேன். தண்ணீர் உனக்குப் போதாது. வெட்டின கிணற்றில் தண்ணீர் சொரிந்தாலொழிய, இனி உனக்குப்



மூல கணபதியின் தோற்றம்

பூசையுமில்லை; ஒன்றுமேயில்லை..." என மனக் குமுறலுடன் கண்களில் நீர் வழிந்த நிலையில், ஆலயவாசலில் வடதிசை நோக்கி தலையையும் தென்திசைநோக்கி கால்களையும் வைத்துக்கொண்டு உறங்கிவிட்டார்.

மறுநாள் காலை சூரியஉதயத்தின்போது கிற்றிலிருந்து இடிமுழக்கம் போன்ற பேரொலி கேட்கிறது. திடுக்குற்றுப்போன பூசகர் கிணற்றடிக்குச் சென்று கிணற்றை எட்டிப் பார்த்தபோது, கிணற்றில் இருந்து நீர் குபுகுபுவெனச் சுரந்து கிணற்றின் மிதிவரை வந்திருப்பதோடு, நீரில் கொம்பு பொருத்தப்பட்ட நிலையில் கிடாரம் ஒன்று மிதந்து வந்திருப்பதையும் கண்டுள்ளார்.

ஆச்சரியமும், ஆனந்தமும் அடைந்த ஆலயபூசகர், உடனே ஊர்மக்களுக்கு அறிவித்து அவர்களைக் கூட்டி வரும் முன்பே அக்கிடாரம் மூர்க்கத்துடன் கிணற்றினுள் மறைந்து விட்டது. அதன் பின் நீர் ஓரளவு குறைந்து அளவான ஆழத்தில் இருக்கக் காணப்பட்டதைக் கண்ட பூசகரும், ஊர்மக்களும் அலவிலா ஆனந்தம் அடைந்ததாக இவ் ஆலயத்தின் வரலாறானது உலகளந்த பிள்ளையாரின் ஆதிகால அற்புதங்களையும், இன்றைய அருள் பாலிக்கும் செயற்பாடுகளையும் சான்று பகருகின்றது.

# திவிநெகும தேசிய திட்டத்தின் கீழ் காய்கறி விதைப்பொருட்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

திவிநெகும தேசிய இயக்கம் நான்காம் கட்டமாக பெரும் போகத்திற்காக விதைப்பொதிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் யாழ். மாவட்ட செயலகத்திற்கு ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு வழங்குவதற்கென 1இலட்சத்து 87 666 காய்கறி விதைப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார்.

இவ்விதைப் பொதிகளை கிராம உத்தியோகத்தர்கள் சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் வழங்கி (50வீதமான குடும்பங்கள் கிராம உத்தியோகத்தர் மூலமும்,50 வீதமான குடும்பங்கள் சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலமும்) இத்திட்டம் தொடர்பாக ஏலவே அனுப்பிவைக்கப்பட்ட திவிநெகும சுற்றுநிருபம் 2/2012க்கு அமைவாக சமூர்த்தி உத்தியோகத்தர்கள் செயற்படுத்தவேண்டும்.

விதைப்பொதிகள் திவிநெகும பயனாளிகளுக்கு வழங்கப்படும் போது குடும்பத் தலைவரின் பெயர்,விலாசம், குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை, கையொப்பம் ஆகியவற்றை உள்ளடக்கிய வகையில் பட்டியலைத் தயாரித்து அதில் ஒப்பம் பெற்று விதைப் பொதிகளைக் கையளிக்க வேண்டும்.

திவிநெகும தேசிய இயக்கத்தின் கீழ் வழங்கப்படும் விதைப்பொதிகள் மற்றும் நடுகைப் பொருட்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கும் பொது மக்களுக்கும் போதிய விழிப்புணர்வையும், விழிகாட்டல்களையும் வழங்குமாறும் இத்திட்டத்தினை வெற்றிகரமாக செயற்படுத்தி ஒவ்வொரு பிரிவிலுள்ள மக்களின் போஷாக்கு, வருமானம் மற்றும் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்தி சௌபாக்கியமான இல்லம்சுபீட்சமான தாயகத்தினைக் கட்டியெழுப்ப பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என அவர்கேட்டுக் கொண்டார்.

# தென்மராட்சி வலய மட்ட வணிக பாட போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயபாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட வணிகபாட போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்று மாகாணமட்ட போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களது பெயர்விபரம் வலயக் கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. விபரம் வருமாறு.

**குறு வினாவிடை தரம் 10**

ஜெ.கஜவதனா (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), பா. சர்மிளா (கொடிமாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்), செ. சாரங்கன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**தரம் 11**

கி.தனுசன் (வரணி ம.வித்தியாலயம்), க. சண்பிகா (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), ச. லக்சிகன் (கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம்)

தரம் 12 - 13

பு.நிடோஜினி (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), .கஜந்திகா (சாவகச்சேரி றிபேக கல்லூரி), செ.ஆண்டானியா (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.)

பேச்சு தரம் 10

வி.கார்த்திகாயினி (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.) அ.தேனுகா (சாவகச்சேரி றிபேக் கல்லூரி), கு.மகிழினி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி),

தரம் 11

உ.குணசுகி (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா.வித்தியாலயம்), தே. எய்மிகிரேனா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), வி.மதுமதி (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி)

தரம் 12 -13

செ. ஆண்டானியா (கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்), கி.யசோதா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), இ.சுதர்சினி (சாவகச்சேரி றிபேக் கல்லூரி),

கட்டுரை தரம் 10

இ.அர்ச்சனா (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), ஜெ.வினுஜா (சாவகச்செரி இந்துக் கல்லூரி), ஸ்ரீ தனுஷா (உசன், இராமநாதன் மகாவித்தியாலயம்),

தரம் 11

சு.சிலோதயன் (சாவகச்சேரி றிபோக்கல்லூரி), உ.குணசுகி (கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்), ஆ. டக்சாயினி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி)

தரம் 12 - 13

த.தக்ஷனா (சாவகச்சேரி றிபேக் கல்லூரி), சி. சஞ்சயா (கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்),த.துஜீவா (சாவகச்சேரி இந்துக்கல்லூரி).

(11)

# ஆதவன் முன்பள்ளியின் சிறுவர் தின நிகழ்வு


(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஆதவன் முன்பள்ளியின் சிறுவர் தின விழா இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு முள்பள்ளி அதிபர் சி.மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முன்பள்ளி மாணவர்கள் கலாசார உடையணிந்து மங்கள வாத்தியம் சகிதம் பிள்ளையார் ஆலயத்தில் இடம் பெறும் பூசைகளில் கலந்து கொண்டு பின்னர் அங்கிருந்து ஊர்வலமாக முன்பள்ளிக்கு அழைத்து வரப்படவுள்ளனர்.

தொடர்ந்து முன்பள்ளி சிறார்களுக்கு பரிசுப் பொருட்கள் வழங்குவதுடன் சிற்றுண்டிகளும் வழங்கி மகிழ்விக்கும் நிகழ்வும் இடம் பெறும். இந்நிகழ்வுகளில் ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

# டயலொக் தொலைத் தொடர்பு நிறுவனத்தின் பத்தாம் ஆண்டு நிறைவு விழா



டயலொக் தொலைத் தொடர்புச் சேவையானது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான தனது சேவையை ஆரம்பித்து பத்து வருடங்கள் பூர்த்தியானதை முன்னிட்டு நேற்று முன்தினம் மாலை மானிப்பாய் செல்லமுத்து மைதானத்தில் விஷேட நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டார்.

டயலொக் நிறுவனம் தனது பத்தாண்டு காலப் பூர்த்தியை முன்னிட்டு ஏற்கனவே துவிச்சக்கர வண்டி ஓட்டம், சித்திரம் மற்றும் கோலப் போட்டிகளை நடாத்தியிருந்த நிலையில் அன்றைய தினம் துவிச்சக்கர வண்டி ஓட்டப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

இதில் முதலிடத்தைப் பெற்றவருக்கான பரிசு அமைச்சரால் வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் அதிகளவு டயலொக் தொலைத் தொடர்பினை பிற நாடுகளுக்கான தொலைத் தொடர்புகளுக்காக பயன்படுத்தியவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. இப் பரிசில்களை யாழ் மாவட்டத்தின் டயலொக் விற்பனை முகவர்கள் வழங்கி வைத்தனர்.



# வேலை வாய்ப்புச் செய்திகள்

இல.105, இராஜவீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள லக்ஷ்மி என்ஜினியறிங் நிறுவனத்திற்கு பாரஊர்த்தி சாரதிகள் தேவைப் படுகிள்றனர். சிங்களம் பேசத்தெரிந்த 25-45 வயதிற்குட்பட்டவர்கள் செல்லுபடியான பாரஊர்த்தி சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் கொழும்பு, அனுராதபுரம் பிரதான பாதைகளில் வாகனம் செலுத்திய அனுபவத்துடன் மூன்று வருடங்களுக்கு குறையாத சாரதிய அனுபவத்தோடு தொடர்பு கொள்ளவும். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். இன்றும், நாளையும் காலை 9.00 மணிதொடக்கம் மதியம் 12.00 மணிவரை நடைபெறும் நேர்முகப்பரீட்சைக்கு சமுகம் தரவும் தொடர்புகளுக்கு முகாமையாளர், லக்ஷ்மி என்ஜினியறிங், இல. 105, இராஜவீதி, திருநெல்வேலி கிழக்கு யாழ்ப்பாணம்.

---

எமது நிறுவனத்திற்கு ஆங்கிலம், சிங்களம், மற்றும் கணினி தெரிந்த முகாமையாளர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு 338, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். தொ.பே. 077 987 7309, 021 222 0855.

---

யாழ். நகரில் இயங்கி வரும் பிரபல தனியார் நிறுவனமான சன்பூட் நிறுவனத்துக்கு விற்பனைப் பிரதிநிதி மற்றும் களஞ்சியக் காப்பாளர் தேவைப் படுகின்றனர். உடன். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி 077 356 5607.

---

பிரபல K.V.Printers புத்தக விற்பனை நிலையத்துக்கு ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை. A/L சித்தியடைந்தவர்கள் யாழ். மாநகரபை எல்லைக் குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. ஆரம்ப சம்பளமாக ரூபா 8000 வழங்கப்படும் அதன் பின்பு அதிகரிக்கப்படும். தொடர்புகளுக்கு இல 386, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொ. பே. இல: 077 156 1677.

---

சுரேஸ் மோட்டார்ஸ் அன் என்ஜினியர்ஸ் நிறுவனத்துக்கு மெக்கானிக் (மோட்டார்சைக்கிள், ஓட்டோ) பெயின்ரிங் மற்றும் சேவிஸ் (சுத்திகரிப்பாளர்கள்) தேவை அனுவபம் உள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: சுரேஸ் மோட்டோர்ஸ் அன் கொம்பனி, கண்டி வீதி, சாவகச்சேரி, தொ. பே. 077 706 4110, 077 763 2454.

---

யாழ். நகரில் இயங்கும் பிரபல இலத்திரனியல் பொருட்கள் விற்பனை நிலையத்திற்கு முன் அனுபவமுள்ள காசாளர், கணக்காளர் மற்றும் Computer Hardware Technician தேவை. ஆண், பெண் இருபாலாரும் சுயவிபரக் கோவையுடன் MediElectro mart, no.1-I, 1H, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். தொ. பே. இல 021 222 4566.

---

இரண்டுபேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பொறுப்புள்ள ஓரளவு படித்த பெண் தேவை. ஆதரவு அற்றவர்கள் விரும்பத்தக்கது. உணவு, தங்குமிடவசதி உண்டு. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும் தொடர்பு: 077 765 6918, 021 492 3338.

---

சர்வதேச அனுசரணையில் முகாமைத்துவத்தில் வளமான தொழிற்பயிற்சியினை வழங்கிக் கொண்டிருக்கும் DMI நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளில் 6 மாதகால பயிற்சியுடன் தொழில வாய்ப்பு வழங்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் 6000-12000மும் பயிற்சியின் பின் 35,000 ரூபாவும் வருமானம் பெறமுடியும். O\L,A\L தகைமையுடைய ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும். முதல் விண்ணப்பிக்கும் 20 விண்ணப்பதாரிகளுக்கு தங்குமிடம் இலவசம் தொடர்புகளுக்கு 077 621 9536, 077 557 4795.

---

வெள்ளவத்தையில் இயங்கிக்கொண்டிருக்கும் Restaunant ஒன்றிற்கு Store Keeper ஒருவர் உடனடியாகத் தேவை. தொடர்புகளுக்கு 077 283 0999, 011 259 3819.

---

வெள்ளவத்தையில் இருவருக்கு வீட்டில் தங்கி நின்று வேலைகள் செய்வதற்கு பணிப்பெண்கள் தேவை. தொடர்புகளுக்கு 0112502505

---

எமது நிறுவனத்திற்கு விற்பனையாளர் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. உயர்ந்த சம்பளம் வழங்கப்படும் தொடர்பு 125A, காலி வீதி, தெகிவளை தொ. பே.இல. 077 793 9455.

---

Seelan Food and Beverage (pvt) Ltd நிறுவனத்திற்கு வடக்கு கிழக்கில் விநியோகஸ்தர்கள் தேவை. மேலதிக விபரங்களுக்கு 077 286 3251.

---

மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவு, அநுராதபுரம், யாழ்ப்பாணம், அம்பாறை, திருகோணமலை, அக்கரைப்பற்று, வடக்கு, கிழக்கு, தமிழ், முஸ்லிம் இனத்தவருக்கு முதலிடம் ஜேம், கோடியல், பிஸ்கட், SIM Card, போசிலன் போன்ற பிரதான தொழிற்சாலைகளான உற்பத்தி, லேபல், களஞ்சியம், டிலிவரி, OIC, LSO, JSO, SSO போன்ற வெற்றிடங்களும் உண்டு. கனரக, மென்ரக வாகன சாரதி வெற்றிடம் உண்டு. 18-55 வயது. சம்பளம் 15,000 - 40,000. உணவு, தங்குமிடம் குறைந்த விலையில், அன்றையதினமே வேலைவாய்ப்பு. 0778175595, 077 4430 166.

# அரச வேலைவாய்ப்பை பெறுவதற்கு சிறந்த கல்வித்தரத்தைப் பெறவேண்டும்



(யாழ்ப்பாணம்)

அரச மற்றும் தனியார்துறைகளில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு இன்றைய இளைய தலைமுறையினர் ஏற்ற கல்வித் தரத்தையும் துறைசார் தொழிற் பயிற்சிகளையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என ஈ.பி.டி.பி.யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை அந்திரான் கிராம மக்களின் தேவைகள் குறித்து மேற்கொள்ளப் பட்ட கலந்துரையாடலின்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில், இன்று எமது பிரதேசங்களில் வேலையில்லாப் பிரச்சினை பாரிய விடயமாக உருப்பெற்றுள்ளது. அது இன்றைய இளைய தலைமுறையினரின் வாழ்வியலில் பெரும் பாதிப்புக்களையும் ஏற்படுத்தி வருகின்றது.

இதேவேளை அவ்வப்போது அரசாங்கத்தால் வழங்கப்படும் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதில் போட்டி நிலைமையும் காணப்படுகின்றது. இதனால் அரச பணிகளுக்கு உள்வாங்கப்படும் போது துறை சார்ந்த போட்டிப்பரீட்சைகளும் நடாத்தப்படுகின்றன. காலப் போக்கில் தனியார் துறைகளும் இவ்வாறான வழிமுறைகளைக் கையாள வாய்ப்புண்டு.

நகர்ப்புற இளையோர் மத்தியில் இதற்கான ஆர்வம் காணப்படுகின்ற போதும் கிராமப்புறங்களில் இது தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டியுள்ளது. கிராமப்புறங்களிலிருந்து அரசபணிகளில் இணைவோரின் தொகையும் அதிகரிக்கப்பட வேண்டும். அப்போது தான் பின்தங்கிய கிராமங்களின் அபிவிருத்திக்கான வழிகள் இயல்பாக உருப்பெறும் என அவர் மேலும் தெரிவித்ததோடு,

அக்கிராம மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் குறித்து விரிவாக ஆராய்ந்தா.

பொதுப் பாவனையில் உள்ள மூன்று விவசாயக்கிணறுகளைப் புனரமைப்பதற்கும் அப்பகுதியில் அமைந்துள்ள கேணிகளைப் புனரமைப்பதற்கும் குறித்த செயற்திட்டங்களினூடாக நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு பிரதேச செயலக அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

இக்கலந்துரையாடலின்போது ஈ.பி.டி.பியின் வலிகாமம் அமைப்பாளர் சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்), வலிகாமம் மேற்கு பிரதேசசெயலக பிரதித்திட்டப் பணிப்பாளர் சிவகுமார், அந்திரான் கிராமசேவகர் சிறீகாந்த் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



அச்சுவேலி புனித தெரேசா மகளிர் கல்லூரியில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் பாடசாலை அதிபர் மற்றும் கற்பித்த ஆசிரியர்களுடன் காணப்படுகின்றனர். (03)

# சுடுகாட்டில் கொல்களம் துன்னாலை மக்கள் கொதிப்பு

(வடமாராட்சி)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட கரவெட்டி பிரதேச சபையின் துன்னாலை வேரூண்டி இந்து மயானத்தில் அமைக்கப்பட்டிருந்த கால்நடைகளின் கொல் களம் தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவசிறி உறுதியளித்துள்ளார்.

இந்த மயானத்திலே அமைந்துள்ள கால்நடைகள் வெட்டப்படும் கொல்களத்தினால் இறந்தவர்களின் உடல்களை தகனம் செய்ய வருபவர்களும் பிற கிரியைகளை செய்ய வருபவர்களும் சில அசௌகரியங்களை எதிர்நோக்குவதனாலேயே இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இந்தக்கொல்களத்தில் கால்நடைகள் இறைச்சிக்காக வெட்டப்பட்டதன் பின்னர் அதன் எச்சங்கள் துப்பரவு செய்யப்படாத நிலையில் கண்டபடி வீசப்படுவதுடன் அதனை வளர்ப்பு மிருகங்கள் வீதிகளுக்கும் வீடுகளுக்கும் காவிச்செல்கின்றன. இந்நிலையில் பல அசௌகரியங்களை எதிர் கொண்ட மக்கள் கடந்த வாரம் பிரதேச செயலருக்கு 482 பேர் கையொப்பமிட்ட மகஜர் ஒன்றைக் கையளித்திருந்தனர். இதன் பிரகாரமே பிரதேச செயலர் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை குறித்த விடயம் தொடர்பில் பல தடவைகள் கரவெட்டி பிரதேச சபைக்கும் பிரதேச செயலகத்துக்கும் அறிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டியே மேற்படி மகஜர் கையளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(116)

# குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த மக்களின் உதவியைக் கோருகிறது பொலிஸ்

(வடமராட்சி)

அண்மைக் காலமாக தொடர்ந்து வருகின்ற குற்றச் செயல்களைக் குறைப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியமென நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கங்கார கூறியுள்ளார்.

துன்னாலை கோவில் கடவை பகுதி மக்களுடனான மாதாந்த சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறிப்பாக கரவெட்டிப்பிரதேசத்தில் அண்மைக் காலமாக பல்வேறுபட்ட குற்றச் செயல்கள் இடம்பெற்று வந்த நிலையில் அதனைக் கட்டுப் படுத் துவதற்குரிய பொலிஸார் பற்றாக்குறையாகவுள்ளதாக கூறிய அவர் கிராம மட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள சிவில் பாதுகாப்பு குழுக்கள் தம்முடன் நல்லுறவைப் பேணி தமக்கு பூரணமான ஒத்துழைப்பை வழங்க வேண்டுமெனவும் கூறிய துடன் திருட்டுச் சம்பவங்களைக் குறைக்க மக் கள் பெறுமதியான பொருட்களை நம்பகத்தன் மையான வங்கிகளில் வைக்கவெண்டுமென்ற ஆலோசனையையும் பொறுப்பதிகாரி கூறி யிருந்தார்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துக் களை வெளியிட்ட பொதுமக்கள் யுத்தம் முடிவுற்று மூன்று வருடங்கள் சென்றவேளையில் பொலிஸாரின் பணி முக்கியமானதென்பதை நிரூபித்துக் காட்டியுள்ளீர்கள் எனக் கூறியதுடன் கிராமத்தில் O/L மற்றும் A/L படித்துவிட்டு வேலையற்றவர்களாக உள்ள இளைஞர் யுவதிகளைப் பொலிஸில் இணைத்து பயிற்சிகளை வழங்கிப் பணிக்கமர்த்துவதால் வேலையற்றவர்களின் வேலை வாய்பை நிவர்த்தி செய்வதுடன் குற்றச் செயல்களையும் குறைக்க முடியுமென்ற ஆலோசனைகளையும் வழங்கினர்.

(116)



வல்லிபுர ஆழ்வார் ஆலய தீர்த்த உற்சவம் இடம்பெற்ற போது கற்கோவளம் வாழ். இளைஞர்கள் கடற்கரையில் சக்கரம் வரைவதைக் காணலாம். (116)

# “சிறுவர் உலகம் சிறுவர்களுக்கே” பாடசாலைகள் தோறும் சிறப்பு நிகழ்வு

(அச்சுவேலி)

உலக சிறுவர் தினத்தை யொட்டி அதனை சிறப்பாக கொண்டாடும் வகையில் உலக சிறுவர் தினமாகிய ஒக்டோபர் முதலாந்திகதி ஆகிய இன்று அனைத்துப் பாடசாலைகளிலும் “சிறுவர் உலகம் சிறுவர்களுக்கே” என்னும் தொனிப்பொருளில் விசேட நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு கல்வி அமைச்சினால் ஏற்பாடுசெய்யப் பட்டிருக்கிறது.

நாட்டின் எதிர்காலமான பிள்ளைச் சந்ததியை கல்வி, அறிவு, மற்றும் சிறந்த ஒழுக்க விழுமியங்களுடன் கூடிய சந்ததியாக உருவாக்கும் உன்னத பணி கல்வி முறைக்கே உரித்தானது என்பதால் அதனை முன்னிட்டு உலக சிறுவர் தினமாகிய இன்று ஒக்டோபர் முதலாம் திகதி அனைத்துப் பாடசாலைகளிலும் மாணவர்களை ஒருங்கிணைத்து விசேட நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துமாறு கல்வி அமைச்சினால் பாடசாலை அதிபர்களுக்குச் சுற்றுநிருபம் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இன்றைய தினம் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் மேற்குறிப்பிட்ட கருப்பொருளை மையமாகக் கொண்டு உலக சிறுவர் தினத்தின் முக்கியத்துவம் தொடர்பாக சிறுவர்களையும் ஆசிரியர்களையும் அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டமொன்றை பாடசாலையில் நடைமுறைப் படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் மேலும் இன்றைய தினத்தில் மாணவர்களின் உறுதி மொழியைப் பெற்றுக் கொள்வதற்காக அவ் உறுதி மொழியின் ஒரு பிரதியும் கல்வி அமைச்சினால் அனைத்துப் பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(03)

# வடக்கு நோக்கிப் படையெடுக்கும் தென்னிந்திய சோதிடர்கள்

## குறிப்பறிந்து “குறி” சொல்லும் உபாயம்

(புதுக்குடியிருப்பு)

நாட்டில் ஏற்பட்ட சாதாரண நிலைமைகளைப் பயன்படுத்தி தென் இந்தியாவிலிருந்து சோதிடர்கள் வருகை அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக இவர்கள் போரினால் பாதிக்கப்பட்ட வன்னிப் பிரதேசத்தில் நடமாடுவதாகவும், உயிர், உடமை இழப்புக்களால் அதிகம் பாதிக்கப்பட்ட இம்மக்களின் வாழ்வாதாரத்தைப் பின்னணியாகக் கொண்டு குறி சொல்வதோடு, காணாமல் போனவர்களை மீட்டுத்தருவதற்கு அதிகப்படியான பணம் கேட்பதாகவும் நம்பகமான தகவல்கள் மூலம் அறியமுடிகிறது.

வன்னிப்பிரதேசத்திலும் வேறு இடங்களிலும் சோதிடம் கூறுபவர்கள் அதிகரித்துள்ள நிலையில் இவர்கள் குறித்து பொதுமக்களை விழிப்பாக இருக்கும்படியும், போலிச் சோதிடர்களிடம் உங்கள் பணத்தைக் கொடுத்து ஏமாற வேண்டாம் எனவும் சமூக நலன் சார்ந்தவர்கள் கேட்டுக்கொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

அண்மையில் புதுக்குடியிருப்பு - கேப்பாபிலவில் ஒரு சோதிடரிடம் பெண்ணொருவர் சென்று தனது குடும்பப்பிரச்சினை குறித்துக் கேட்டபோது அதற்கு அவர் அப்பெண்ணிடம் பெருந்தொகைப்பணம் கேட்டுள்ளார் என பொதுமக்கள் மத்தியில் பலவிதமான கருத்துக்கள், விமர்சனங்கள் நிலவுவதாகவும் கூறப்படுகிறது.

(138)

44) சித்திரங்களுக்குப் பெயர் பெற்ற புராதன நகரம்.
1. அனுராதபுரம் 2. பொலநறுவை 3. கோட்டை 4. சிகிரியா

45) விரைவாகச் செய்திகளைத் திரட்டுவதற்கு அதிக பயனுடையது.
1. செய்மதி 2. ரொக்கட்டுக்கள் 3. சிற்றலை 4. மீடிறன் அலை


46) கைத்தொழிலுக்கு ஆரம்ப காலத்தில் எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்டது.
1. நீராவி 2. நிலக்கரி 3. நீர்மின் 4. பெற்றோல்

47) நூல்களைப் பெற்றுப்படிக்கலாம். ஆனால் விற்பனை நிலையமல்ல. உறுப்பினராவதற்கும், நூல்களை எடுத்துச் செல்லவும் முற்பணம் தேவை. நூல்கள் அந்தந்தத் தேவையின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும்.
1. சனசமூக நிலையம் 2. நூலகம் 3. அச்சகம் 4. புத்தகக்கடை

**சரியான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

48) பேருந்து வண்டி ஒன்று மு.ப.6.15 இற்குப் புறப்பட்டு பி.ப.1.45 இற்குத் தனது பிரயாணத்தை முடித்துக் கொண்டது. பேருந்து வண்டி பிரயாணத்திற்காகச் செலவழித்த மொத்த நேரம் யாது?
.................................................................................................

49) சம நிறையுள்ள 6 புத்தகப் பொதிகளைத் தபாலில் அனுப்ப ரூபா 654 கட்டணம் அறிவிடப்பட்டது எனின், ஒரு பொதிக்கு அறிவிடப்பட்ட பணம் எவ்வளவு?
.................................................................................................

50) 
இந்த உருவில் ஒவ்வொரு சதுரத்தினதும் ஒரு பக்க நீளம் 1 cm ஆகும். இவ்வுருவில் நிறந் தீட்டப்பட்டிருக்கும் பகுதியின் பரப்பளவு யாது?
.................................................................................................

51) ஒரு கேக்கில் இருந்து 3/5 பங்கை கமலும் 1/5 பங்கை நிமலும் பங்கிட்டுக் கொண்டனர். எஞ்சிய கேக் முழுவதின் என்ன பின்னமாகும்?
.................................................................................................

52) 5 L நீர் நிரப்பப்பட்ட பாத்திரம் ஒன்றிலிருந்து 1L 350 ml நீர் வெளியே எடுக்கப்பட்டால் எஞ்சியுள்ள நீரின் அளவு யாது?
.................................................................................................

53) 5 m 40 cm நீளமான ஒரு நாடாவில் இருந்து 2 m 60 cm நீளமான ஒரு துண்டு வெட்டி எடுக்கப்பட்டதெனில் எஞ்சியுள்ள நாடாவின் நீளம் யாது?
.................................................................................................

54) 1 கிலோகிராம் மிளகாய் ரூபா 80 எனின், 150 கிராம் மிளகாயின் விலை யாது?
.................................................................................................

55) மு.ப. 12.40 ஐ நியம நேரத்தில் எழுதுக.
.................................................................................................

56) ஒன்று ரூபா 12.50 படி 2 கொப்பிகளையும், 1 kg ரூபா 36 படி 1 kg 500 g சீனியையும், 1 L ரூபா 80 படி 750 ml தேங்காயெண்ணையும் வாங்கிய ஒருவர் கடைக்காரரிடம் கொடுக்க வேண்டிய பணம் எவ்வளவு?
.................................................................................................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - I
1 மணி

# கல்வி முரசு



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அது தொடர்பாக கேட்கப்பட்டுள்ள 1-10 வரையுள்ள வினாக்களுக்கு விடைதருக.**

துளசியின் பால்போன்ற வெண்ணிற மேனியிலே கரிய மறைகள் உள்ளன. அது "மொழு மொழு" என்று உருண்டு திரண்டு கொழுத்திருந்தது. கரியமணி போன்ற கண்கள், சிவந்த சின்னஞ்சிறிய வாய், நிமிர்ந்து நின்று அசையும் சின்னக் காதுகள், பட்டுப் போன்ற மிக மிருதுவான உடல் ஆகியவை என்னைக் கவர்ந்தன. நான் "துளசி" என்று கூப்பிட்டால் அது உடனே ஓடிவரும். சில சமயம் என் மடியிலேறிச் சுருண்டு படுத்துவிடும். நாயைக் கண்டவுடன் அது பாய்ந்தோடி வந்து என்னிடம் தஞ்சம் புகும். உடனே அதனைத் தூக்கி அணைத்துக் கொள்ளல் வேண்டும். அன்றேல் அது என்னை அசையவிடாது. இரவில் எனது அருகில் அது படுத்து உறங்கும். அன்போடு துளசியை அணைத்துக் கொண்டு துயில்வேன்.

01) பந்தியில் துளசி என்று குறிக்கப்படுவது எதுவாக இருக்கலாம்?
.................................................................................................

02) தஞ்சம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.
.................................................................................................

03) சின்னஞ்சிறிய - எதிர்கருத்துச் சொல்லை எழுதுக.
.................................................................................................

04) பந்தியில் இடம்பெற்றுள்ள இணைமொழி ஒன்றை எழுதுக.
.................................................................................................

05) பந்தியில் வந்துள்ள இரட்டைச் சொற்றொடர் (இரட்டைக்கிளவி) ஒன்றை எழுதுக.
.................................................................................................

06) பந்தியில் இடம்பெற்றுள்ள உவமைத் தொடர் ஒன்றைத் தருக.
.................................................................................................

07) பந்தியில் இடம்பெற்றுள்ள அஃறிணை ஒருமை, இறந்தகால வினைச்சொல் ஒன்றை எழுதுக.
.................................................................................................

08) பின்வரும் வாக்கியத்தில் இடம்பெறும் பெயர் அடைமொழிச் சொல்லின் கீழ்க் கோடிடுக. நிமிர்ந்து நின்று அசையும் சின்னக் காதுகள்.
.................................................................................................

09) மிருதுவான என்பதன் கருத்து யாது?
.................................................................................................

10) "எனது அருகில் அது படுத்து உறங்கும்" இவ்வாக்கியத்தின் எழுவாய்ச் சொல் யாது?
.................................................................................................

**கீழ்வரும் மரபுத் தொடர்களின் உட்கருத்தை எழுதுக.**

11) தட்டிக் கொடுத்தல் :.................................................................

12) கண்திறத்தல் :.................................................................

**பின்வரும் தனி வாக்கியங்களைத் தொடர்வாக்கியமாக மாற்றி எழுதுக.**

13) காஞ்சனா நன்றாக நடனம் ஆடுவாள். :.................................................

**வெற்றிடத்துக்குப் பொருத்தமான எழுத்துப் பிழையற்ற சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

14) பாமதி.................................................பட்டப்படிப்பைத் தொடர்ந்தாள்.
(பல்களைக்கழகத்தில், பல்கலைக்களகத்தில், பல்கலைக்கழகத்தில், பழ்கலைக்கழகத்தில்)

15) முயற்சி உடையார்.................................................அடையார்.
(இகழ்ச்சி, இகழ்ட்சி, இகள்ச்சி, இகல்ச்சி)

**ஒவ்வொரு தமிழ்ச் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்துக்களில்) எழுதுக.**

16) வீடு :..................................... 17) சகோதரன் :.....................................

17) புதன்கிழமை :.....................................


**பின்வரும் வசனங்களுக்குரிய கருத்தினைத் தமிழில் எழுதுக.**

18) From where are you? :.................................................

19) Please give me a pencil? :.................................................

20) May I read this book? :.................................................


**பின்வரும் ஒவ்வொரு சிங்களச் சொல்லினதும் தமிழ்க் கருத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**




**பொருத்தமான சிங்களச் சொல்லைத் தமிழில் எழுதுக.**

23) பால் வெள்ளை நிறம் :..................................... 24) ஏழு :.....................................

**பின்வரும் பெரியார்களின் பெயர்களை எழுதுக.**




25..................... 26..................... 27..................... 28.....................

| பாரதியார், சித்திலெப்பை, மகாத்மாகாந்தி, சேர்.பொன்.இராமநாதன், டி.பி.ஜயதிலக்க |
|---|



**பின்வரும் இடங்களின் பெயர்களை எழுதுக.**



29..................... 30..................... 31..................... 32.....................

| சந்திரவட்டக்கல், சிகிரியா ஓவியம், மோனாலிசா, இசுறுமுனி, தலதாமாளிகை |
|---|

**பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

33) பின்வரும் தாவரங்களில் விதை மூலம் மட்டுமே விளைவது எது?
1. கொத்தமல்லி 2. அலரி 3. நொச்சி 4. பூவரசு

34) மீன்பிடித்துறையில் ஒரே முறையில் அதிக மீன்களைப் பிடிக்கக் கடினமான முறை.
1. டைனமற் மூலம் பிடித்தல் 2. வலை வீசுதல்
3. பொறிக்கூட்டில் பிடித்தல் 4. தூண்டில் போடுதல்

35) இலங்கையில் மிக நீண்ட நதி.
1. களனி 2. மகாவலி 3. வளவை 4. மல்வத்து ஓயா

36) இலங்கையில் இரு மதத்தவர் கொண்டாடும் ஒரு தினம்.
1. நத்தார் 2. எசலபெரஹரா 3. ரம்ழான் 4.சித்திரை வருடப் பிறப்பு

37) மின்சாரத்தினால் பாதிக்கப்பட்டவரை என்ன செய்யக் கூடாது?
1. நாம் அவரைக் கையால் பிடித்து இழுத்தல்
2. காய்ந்த மரத்துண்டுகளைப் பயன்படுத்தல்
3. பிரதான ஆளியை நிறுத்துதல்
4. இறப்பர் உறைகளை அணிந்து உதவுதல்

38) புரதான வரலாற்று எச்சங்களை ஆராய்ந்தும், பாதுகாத்தும் வருகின்ற திணைக்களம்.
1. சுற்றுலா கைத்தொழில் 2. தொல்பொருளியல்
3. கல்வித்திணைக்களம் 4. சுகாதாரத் திணைக்களம்

39) பின்வரும் உணவு வகைகளில் போசனை கூடியது.
1. பால் 2. சர்க்கரை 3. மீன் 4. கோதுமை மா

40) சந்தையில் பொருட்களை வாங்கும்போது கவனிக்க அவசியமற்றது ஒன்று.
1. விலை 2. நிறை 3. முடிவுத்திகதி 4. விளம்பர அலங்காரம்

41) சூரியனுக்கு மிக அண்மையிலிருப்பதால் மிக வெப்பமாயிருக்கும் கோள்.
1. வெள்ளி 2. புவி 3. செவ்வாய் 4. புதன்

42) தீ விபத்துக்குட்பட்டவர் செய்யக் கூடாதது.
1. மண்ணில் புரளுவது 2. ஓடுவது
3. சாக்கால் மூடுவது 4. நீரில் நனைத்த சேலையால் மூடுவது

43) வாகனங்கள் வீதியில் செல்லுமிடத்து அவற்றையும் பாதசாரிகளையும் குறிப்பிட்ட விதிப்படி நடத்துவது.
1. சாரணர் 2. தடுப்பு
3. சிவப்புமுன் விளக்கு 4. சமிக்ஞை விளக்கு


# பொருளாதார சீர்திருத்தங்கள் நாட்டுக்கு நல்லதாகவே அமையும்

நாட்டுக்கு எது நல்லதோ, அதைத் தான் செய்து வருகிறோம் பொருளாதார சீர்திருத்தங்கள் இனியும் தொடரும். லோக்சபா தேர்தலுக்கு இன்னும் நிறைய காலம் உள்ளதால், எல்லாமே நல்லபடியாக நடக்கும், என பிரதமர் மன்மோகன் சிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

உயர்நீதிமன்றின் புதிய தலைமை நீதிபதியாக, அல்தமஸ் கபீர் நேற்று முன்தினம் பதவியேற்றார்.

இந்தப் பதவியேற்பு நிகழ்ச்சிக்குப் பின், நிருபர்களைச் சந்தித்த, பிரதமர் மன்மோகன் சிங் டீசல் விலை உயர்வு, மானிய விலையில் வழங்கப்படும், சமையல் எரிவாயு சிலிண்டர்கள் எண்ணிக்கை குறைப்பு மற்றும் சில்லரை வர்த்தகத்தில், நேரடி அன்னிய முதலீடு போன்ற முடிவுகளை, மத்திய அரசு எடுத்துள்ளது.

இந்த முடிவுகளால், எதிர்காலத்தில் நடைபெறவுள்ள தேர்தல்களில், வெற்றி வாய்ப்பு பாதிக்கப்படும். அரசின் மீது, மக்களுக்கு அதிருப்தி ஏற்படும். எனவே, இம்முடிவுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என, கூட்டணி கட்சிகள் சொல்கின்றன. ஆனால், இந்தக் கருத்தில் இருந்து, நான் மாறு படுகிறேன். மத்திய அரசின் முடிவுகள், தேர்தல் வெற்றியைப் பாதிக்கும் எனக் கூறப்படுவதை நான் ஏற்க முடியாது. காரணம், அரசு எடுத்துள்ள முடிவுகள் அனைத்தும், நாட்டிற்கு நன்மை தரக்கூடியவை. நாட்டுக்கு எது நல்லதோ, அதைத் தான் நாங்கள் செய்து வருகிறோம் என்றார்.



# மூன்றாவது அணி நிச்சயம்

(ஐதராபாத்)

அடுத்த லோக்சபா தேர்தலுக்கு முன்னதாகவோ, தேர்தலுக்குப் பின்போ, மூன்றாவது அணி உருவாவதற்கான வாய்ப்பு உள்ளது, என, தெலுங்கு தேசம் தலைவர் சந்திரபாபு நாயுடு கூறினார்.

ஆந்திராவில், தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு, நான் உங்களுக்காக வருகிறேன் என்ற கோஷத்துடன், மாநிலம் தழுவிய, பாத யாத்திரை தொடக்கவுள்ளார். இதுகுறித்து, நேற்று அவர் அளித்த பேட்டி இந்திய அரசியல் களம், மிகவும் விசித்திரமானது. ஐ.மு. கூட்டணி அல்லது தே.ஜ. கூட்டணி ஆகியவை, மத்தியில் ஆதிக்கம் செலுத்துகின்றன. இதுதவிர, இந்த இரண்டு கூட்டணிகளிலும் இடம் பெறாத, கட்சிகளும் உள்ளன. தற்போதுள்ள நிலையில், ஐ.மு. கூட்டணி, ஊழலில் சிக்கித் தவிக்கிறது.

தே.ஜ., கூட்டணி, மக்களிடையே, பெரிய அளவில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தவில்லை. இதன் பலன், இந்த இரண்டு கூட்டணிகளிலும் இடம் பெறாத கட்சிகளுக்குக் கிடைக்கும். மூன்றாவது அணி, அடுத்த லோக்சபா தேர்தலுக்கு முன்னதாகவோ, தேர்தலுக்குப் பின்போ, உருவாகும் வாய்ப்பு உள்ளது. எங்கள் கட்சியை பொறுத்தவரை, இந்த விஷயத்தில், நாட்டு நலன் கருதி முடிவு எடுப்போம் என்றார்.

# முதல்வர் மீது செருப்பு வீச்சு



பீகார் முதலமைச்சர் நிதீஷ் குமார் மீது செருப்புகளை வீசி ஆசிரியர்கள் சிலர் தாக்குதல் செய்ய முயற்சித்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

பீகாரில் பாடசாலை மற்றும் கல்லூரிகளில் பணிசெய்யும் ஆசிரியர்களின் பணிநிரந்தரம், ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைளை வலியுறுத்திப் போராட்டம் நடைபெற்று வருகின்றது.


ஆசிரியர்கள் தங்கள் போராட்டத்திற்கு உரிமை யாத்திரை என பெயரிட்டுள்ளனர்.இந்நிலையில் பீகாரில் மாதேபுராவில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் நிதிஷ்குமார் கலந்து கொண்டார்.

அப்போது, கூட்டத்தில் இருந்த ஒப்பந்த ஆசிரியர்கள் 5 பேர் திடீரென நிதீஷ்குமார் மீது செருப்புகளை வீசினர்.

எனினும் நிதிஷ்குமார் மீது செருப்புக்கள் விழவில்லை. மாறாக மேடைக்கு முன்பே விழுந்தன. இதையடுத்து செருப்பு வீசிய ஆசிரியர்களில் சிலரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# கூடங்குளம் அணுமின் நிலையம் மிகவும் பாதுகாப்பாக உள்ளது

(புதுடில்லி)



கூடங்குளம் அணுமின் நிலையம் உட்பட, நாட்டில் உள்ள, அனைத்து அணுமின் நிலையங்களும் பாதுகாப்பு மிக்கவை என தேசிய பேரிடர் மேலாண்மைக் கழகம் கூறியுள்ளது.

அணுமின் நிலையங்களின் பாதுகாப்பு குறித்து, தேசிய பேரிடர் மேலாண்மைக் கழகத் துணைத் தலைவர் சசிதர் ரெட்டி, டில்லியில் நேற்று முன்தினம் நாட்டில் அமைக்கப்பட்டு உள்ள எந்த அணுமின் நிலையத்தின் பாதுகாப்புப் பற்றியும், மக்கள் கவலைப்படத் தேவையில்லை. கூடங்குளம் அணுமின் நிலையம் மட்டுமல்ல் தமிழகம் கல்பாக்கத்தில் அமைந்துள்ள அணுமின் நிலையம் கூட பாதுகாப்பு மிக்கது. அணுமின் நிலையங்கள் அமைந்துள்ள பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு, வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிக்க வேண்டும் என, சம்பந்தப்பட்ட மாநில அரசுகளை வலியுறுத்தி உள்ளோம். கர்நாடகாவில் அணுமின் நிலையம் அருகே உள்ள, பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கான திட்டங்களை, அம்மாநில அரசு தயாரித்து வருகிறது. மற்ற மாநிலங்களும் அதைப் பின்பற்றும் என நம்புகிறோம் என்றார்.

## இனி உண்ணாவிரதம் இல்லை

(புனே)

கோரிக்கைகளை வலியுறுத்தி, இனிமேல், உண்ணாவிரதம் இருக்கப் போவதில்லை. போராட்டங்கள் மட்டுமே நடத்துவேன், என, சமூக சேவகர் அன்னா ஹசாரே கூறினார்.

மகாராஷ்டிரா மாநிலம், புனேயில் நடந்த விழாவில், பங்கேற்க வந்திருந்த, சமூக சேவகர் அன்னா ஹசாரே கூறியதாவது ஊழலை ஒழிப்பதற்காக, ஏராளமான உண்ணாவிரத போராட்டங்களை நடத்தி விட்டேன். சமீப காலமாக, உண்ணாவிரத போராட்டங்களை மத்திய அரசு, அலட்சியப்படுத்துகிறது. எனவே, இனிமேல், கோரிக்கைகளை வலியுறுத்தி, உண்ணா விரதம் இருக்கப் போவது இல்லை அந்த முடிவைக் கை விட்டு விட்டேன். அதேநேரத்தில், ஊழலை ஒழிப்பதற்காகத் தொடர்ந்து போராட்டங்களை நடத்துவேன் என்றார்.


பல்லாண்டு காலம் உன் பணி
தொடர வாழ்த்தும்
TE
TATA ENTERPRISES
டாடா என்ட்ரபிரைஸஸ்
வீடு, தளபாடங்களிற்கான
அனைத்து விதமான மரங்களினையும்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
503.Manipay Road.
Jaffna
Tel. 077 787 0418
(C/2031)



தினமுரசாய் திசை எங்கினும்
உன்பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

மொறாயஸ் ஒப்டிகல்ஸ்
பல் முக்குக்கண்ணாடியகம்

546. ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 7893
(c/2022)



சகோதரத்துவம் உதித்து மெய்ப்பொருளாய் சமத்துவம் உரைக்கும்
தினமுரசை வாழ்த்துகிறோம்.
அம்பாள் மரக்காலை
உங்கள் வீட்டிற்குத் தேவையான நிலைகள், யன்னல்கள் என்பவற்றைத்
தரமாக மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
தளபாடங்களும் ஓடருக்குச் செய்து தரப்படும்.


வீரமாகாளியம்மன் கோவிலடி,
பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
C/2032



தங்கச் சூரியனாய் தரணியில் என்றும் வாழ வாழ்த்தும்
ஆப்தீன் தையலகம்
நவநாகரீக முறையில்
ஆடவர்களுக்கான சேட்,
ரவுசர், திருமண உடை-
கள் குறித்த நேரத்தில்
ஓடருக்கு தைத்துப்
பெற்றுக் கொள்ளலாம்.

இல: 54, பெரியகடை வீதி,
உட்புறம்,
யாழ்ப்பாணம் (C/2028)
தொ.பே:
0774945423

மக்கள் மனங்களில் என்றும் முரசாய் ஓங்கி ஒலிக்க வாழ்த்துகிறோம்

NSL

# நோத்சீ லிமிடெட்
# (வடகடல் நிறுவனம்)

நாட்டின் கடற்தொழில் துறையின் வளர்ச்சிக்கு மகத்தான
சேவையினை வழங்குதல்

செயற்பாடு:

கடற்தொழில் முன்னேற்றத்திற்கு தேவையான வலை
மற்றும் இதர உபகரணங்களை உற்பத்தி செய்து வழங்குவதனூடாக
கடற்தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த
அமைக்கப்பட்ட அரச நிறுவனம்.

## அரச பொதுக்கம்பனி

எமது தொழிற்சாலைகள் அமைந்துள்ள இடங்கள்

| | |
|---|---|
| குருநகர் – யாழ்ப்பாணம். | 021 222 2733 |
| லுனுவில – புத்தளம் . | 031 225 5272 |
| வீரவல – அம்பாந்தோட்டை. | 047 223 9180 |
| தொடர்பாடல் காரியாலயம் – கொழும்பு. | 011 434 3345 |



தலைவர்
பணிப்பாளர்கள்
பொது முகாமையாளர்
நிர்வாகத்தினர்
ஊழியர்கள்

(C/2033)

# பல்கலையில் ஒன்றியம் அமைக்க மாணவர்கள் சிந்திக்க வேண்டாம்

## உயர்கல்வி அமைச்சர் வேண்டுகோள்

(கிரு, சிகரம்)

பல்கலைக் கழகத்தில் மாணவர் ஒன்றியம் அமைக்க சிந்திக்க வேண்டாம் என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கா மாணவர்களிடம் கேட்டுக் கொண்டார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மூன்று மாடிக்கட்டடத்தை கடந்த வெள்ளிக்கிழமை திறந்துவைத்த பின்னர், திறப்பு விழாவிற்கு வருகை தந்திருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பல்கலைக்கழக பீடாதிபதிகள், துணைவேந்தர் மற்றும் மாணவ முதல்வர்களுடன் உயர் கல்வி அமைச்சர் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டார்.

இதன்போது, பல்கலைக் கழகங்களில் ஒன்றியம் அமைத்துச் செயற்படுவதன் மூலம் தமக்குத் தலைமைத்துவப் பண்பு உருவாகும் எனவும், இதற்கு உயர கல்வி அமைச்சு அனுமதி வழங்கவேண்டும் எனவும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் உயர் கல்வி அமைச்சரிடம் கேட்டுக்கொண்டனர்.

இதற்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் அவ்வாறு கேட்டுக் கொண்டார்.

பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் ஒன்றியம் அமைத்து செயற்படுவதனால் மாணவர்கள் மத்தியில் இரண்டு குழுக்கள் பிரிக்கப்படும் நிலை உருவாகும் எனவும், பின்னர் இரு குழுக்களுக்கும் இடையில் எதிர்காலத்தில் பிரச்சினைகள் தோன்றக்கூடிய சாத்தியம் உள்ளதெனவும் கூறிய உயர்கல்வி அமைச்சர், மாணவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலமே கல்வியைச் சிறப்பாகக் கொண்டுசெல்ல முடியும் எனவே, கல்வியில் நாட்டங்காட்டுங்கள் எனக் கூறினார்.

தலைமைத்துவ பண்புகளை வளர்த்துகொள்ள தலைமைத்துவப் பயிற்சி தேவைப்பட்டால் அதற்காக குறிப்பிட்ட நாட்களை ஒன்றிணைத்து ஒரு தலைமைத்துவ பயிற்சி மையங்களை அமைத்து செயற்படமுடியும் எனவும், அதற்கான ஏற்பாடுகளை பல்கலைகழக துணைவேந்தர் ஊடாக ஏற்படுத்திச் செயற்பட முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# கழிவுப் பொருட்களை அகற்ற புதிய தொழில்நுட்பம் அறிமுகம்

(கொழும்பு)

கழிவு பொருட்களை கொட்டுவதற்கு புதிய தொழில்நுட்பத்துடனான நான்கு இடங்களை புதிதாக நிர்மாணிப்பதற்கு சுற்றாடல் அமைச்சு தீர்மானித்துள்ளது. இத்திட்டத்திற்கு கொரியா நிதியுதவி வழங்கவுள்ளது.

இதன்படி பாணந்துறை, ஹிக்கடுவை, அநுராதபுரம் மற்றும் உடுதும்பர ஆகிய பகுதிகளில் கழிவு பொருட்களை கொட்டும் இடங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் டி.எம். யூ.டி.பஸ்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த கழிவு பொருட்களை கொட்டும் இடங்கள் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் நாட்டின் பல பகுதிகளில் காணப்படும் கழிவுகளை அகற்றுவது தொடர்பான பிரச்சினைக்கு தீர்வொன்று ஏற்ட்டப்படும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கழிவு பொருட்களை சேமிக்கப்படுவதன் காரணமாக வாயு மற்றும் நீர் ஆகியன அசுத்தமடையாது பாதுகாக்க முடியும். இத்திட்டத்திற்கென அநுராதபுரத்தில்ல 15 ஏக்கர் நிலப்பரப்பும் உடுதும்புர பகுதியில் 22 ஏக்கர் நிலப்பரப்பும் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் தேசிய மகாநாடு இன்று யாழில்

(யாழ்ப்பாணம்)

மத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கம் நடத்தும் 12 ஆவது தேசிய மகாநாடும், பிரதிநிதிகள் சபைக் கூட்டமும் இன்று காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் மகாநாட்டு மண்டபத்தில் தா.தர்மரட்ணம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இ.இளங்கோவன், செயலாளர் ஆளுநர் செயலகம் வடமாகாணம், கலந்துகொள்வார். சங்கத்தின் வருடாந்த அறிக்கை, கணக்காய்வுகள், கௌரவிப்பு, புதிய நிர்வாகத் தெரிவுகளும் இடம்பெறும்.

சிறப்பு விருந்தினர்களாக மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம், யாழ். மாநகர முதல்வர் யோ.பற்குணராசா மற்றும் அரச அதிகாரிகளும் கலந்துகொள்வர். சங்கத்தின் பொதுச்செயலாளர் இ.ஜெயசங்கர் சமாதன நீதிவான் நன்றியுரையாற்றுவார். அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்ற அங்கத்தவர்களைக் கௌரவித்தல் நிகழ்வும் இடம்பெறும். (105)

---

## அரசு - கூட்டமைப்பு...

கூட்டமைப்பு இந்தியாவிற்கு விஜயம் செய்ய உள்ளதாகவும் இதன்போது அரசியல் தீர்வுத்திட்டம் குறித்து கவனம் செலுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, எதிர்வரும் நவம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அகில கால மீளாய்வு அமர்வுகளின் போது இலங்கைக்கு ஆதரவளிப்பதாக இந்தியா உறுதியளித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

---

## நல்லிணக்க...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார். ஜனாதிபதியின் முயற்சியை கடந்த கால முயற்சிகளுடன் ஒப்பீடு செய்வது தவறானது. 80 களில் தமிழ் ஆயுதக் குழுக்களுக்கு இந்தியாவே பயிற்சி அளித்தது.

2009 ஆம் ஆண்டு வன்னி யுத்த முன்நகர்வுகளை தடுத்து நிறுத்த இந்தியா, பிரான்ஸ் மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகள் முயற்சி செய்தன.

பிரபாகரனோ, பொட்டு அம்மானோ அல்லது சூசையோ உயிருடன் இருந்திருந்தால் சர்வதேச சமூகம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குறித்து கவனம் செலுத்தியிருக்காது. வடக்கில் எப்போது தேர்தல் நடத்த வேண்டும் என்பது பற்றி இந்திய ஊடகங்களின் ஆலோசனை அவசியமற்றது எனவும் அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

---

## ஷப்றா...

பெற்றோர்கள் வைப்பிலிட்டிருந்த ஏறத்தாழ 46 மில்லியன் ரூபாவுடன் அக்காலகட்டத்தில் அதன் உரிமையாளர் தலைமறைவாகியிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த மோசடியால் பாதிக்கப்பட்ட பலர் தற்கொலை செய்துகொண்டதாகவும் அப்போது செய்திகள் வெளியாகியிருந்தன.

யாழ்ப்பாண வரலாற்றில் முதல் பெரும் பண மோசடி இந்த நிதி நிறுவன மோசடியே என கூறப்படுகிறது. இந்தப் பண மோசடிப் பிரச்சினைகள் பல தற்போது நீதிமன்றின் முன்கொண்டுவரப்படுகின்றன எனினும் இதுவரையில் எவரும் குற்றவாளியாகக் காணப்பட்டு தண்டிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலையில் இதன் உரிமையாளர்களைச் சட்டத்தின் முன் கொண்டுவருதல் மூலம் யாழில் அதிகரித்துவரும் பணமோசடிப் பிரச்சினைகளுக்கு முற்றுப் புள்ளிவைக்க முடியும் என சமூக அக்கறையுள்ள பல தமிழ் புத்திஜீவிகள் செயற்படத் தொடங்கியுள்ளனர் என அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

# கர்ப்பப்பை புற்றுநோயால் ஆண்டுக்கு 1000 பெண்கள் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் வருடமொன்றுக்கு சுமார் ஆயிரம் பெண்கள் கர்ப்பப்பை புற்று நோய்க்கு உளளாவதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

இவர்களில் 70 வீதமானோர் நோய்க்கு உள்ளாகி இறுதி கட்டத்திலேயே அடையாளம் காணப்படுவதாக அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கர்ப்பப்பை புற்றுநோய் ஏற்படும் பெண்கள் குறுகிய காலத்திலேயே உயிரிழப்பதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த நோயினால் பாதிக்கப்பட்ட பெண்களில், இரண்டு நாட்களுக்கு மூவர் வீதம் உயிரிழப்பதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இந்த நோயினால் பாதிக்கப்பட்ட பெண்கள் குறுகிய காலத்திற்குள் அடையாளம் காணப்படும் பட்சத்தில் உயிரிழப்புக்களை தவிர்த்துக் கொள்ள முடியுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கர்ப்பப்பை புற்று ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதா என்பது குறித்து 20 நிமிடங்களில் அறிந்து கொள்வதற்கான இரு தொழில்நுட்ப பிரிவுகள் நாரஹேன்பிட்டி மற்றும் யாழ்ப்பாணம் போதான வைத்தியசாலைகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு அறிவித்துள்ளது.

# 32 முன்னாள் போராளிகள் விடுதலை செய்ய நடவடிக்கை!



(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் 33 பேரை சமூகமயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவின் பேரில் இவர்களுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தர்ஷன ஹெட்டி ஆரச்சி தெரிவித்துள்ளார்.

வவுனியா மற்றும் வெலிக்கந்த ஆகிய புனர்வாழ்வு மத்திய நிலையங்களில் இவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டுள்ளன. இவர்களை தவிர மேலும் 775 பேர் சமூகமயப்படுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இரண்டாவது குடிமக்களாக தமிழரைக் கருத முடியாது

## றொகான் குணரத்ன

(கொழும்பு)

இலங்கையில் வாழும் தமிழர்கள், இரண்டாம் குடிமக்கள் என்ற பிரசாரத்தை முன்வைத்தே விடுதலைப் புலிகள் தமது இயக்கத்தை வளர்த்துக் கொண்டனர். எனவே தமிழர்களை இலங்கையில் இரண்டாம் குடிமக்கள் எனக் கருத முடியாதென சிங்கப்பூரிலுள்ள சர்வதேச பயங்கரவாத ஆராய்ச்சி மையத்தின் தலைவர் பேராசிரியர் றொஹான் குணரத்தன தெரிவித்துள்ளார்.

ஏசியன் ரிபியூன் இணையத்தளத்திற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அந்தச் செவ்வியில் அவர் மேலும் 'தெரிவித்ததாவது,

இலங்கையில் தமிழ் மக்கள் பல்வேறு துறைகளில் முக்கிய வகிபாகத்தைக் கொண்டுள்ளனர். கொழும்பில் 80 சதவீதமான தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களே வர்த்தக செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர்.

இவ்வாறான நிலையில் தமிழ் மக்களை இரண்டாம் குடிமக்கள் என்று கூற முடியாது. இதேவேளை, 13 ஆவது திருத்தச் சட்டம் என்பது இந்தியாவின் திணிப்பு என்றும், இந்திய இராணுவம் இலங்கையில் இருந்த போது சந்தித்த தோல்வியை சரி செய்வதற்காகவே இந்த திருத்தம் முன்வைக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

---

## தினமுரசுக்கு...

சரியானதை சரி எனவும் பிழையானதை பிழை எனவும் சுட்டிக்காட்டி மக்களைச் சரியான அரசியல் திசைநோக்கிக் கொண்டு செல்லும் பணியைத் தினமுரசு சரிவரச் செய்துவருகின்றது.

ஊடக தர்மத்தின் வழிநின்று என்றும் தரம் குன்றாத பத்திரிகையாக மக்களுக்குச் சரியான பாதையைக் காட்டவேண்டும். இன்று தொடக்கம் தினமுரசு நாளிதழ் இணைய வலையமைப்பிலும் இணைந்து உலகம் முழுவதும் தன் பணி ஆற்ற திடசங்கற்பம் பூண்டிருப்பதையிட்டு பெருமகிழ்வடைவதுடன் பல்லாண்டு காலம் இதன்பணி தொடர மனமார வாழ்த்துகின்றேன்.

## தினமுரசு வாழி!

வாரமலராய் நீ உதித்து
நாளிதழாய் மலர்ந்து - இன்று
கால் பதிக்கும் 3 ஆம் ஆண்டில்
கடந்து செல்லும் மேகமாய்
சோதனைகள் ஆகிடவும்
பரந்து நிற்கும். வானமாய் - உனை
வெற்றிகள் சூழ்ந்திடவும்,
என்றும் உன் பக்கம் நின்று வாழ்த்திடுவோம்.

**பணியாளர்கள், விநியோகப் பகுதி.**

# தெரிவுக்குழுவில் இடம்பெற பிரேரணை அவசியமாகும்

## கூறுகிறது கூட்டமைப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செல்வதானால் சரியானதொரு பிரேரணையைக் கொண்டுபோக வேண்டும். இதற்கு அரசு - கூட்டமைப்பு இருதரப்புப் பேச்சுவார்த்தை இடம்பெற்று அதில் தீர்வு ஒன்று எட்டப்பட வேண்டும். இதனை இந்தியாவிடம் வலியுறுத்தவுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவின் அழைப்பை ஏற்று சந்திப்புக்காகச் செல்லவுள்ளது. ஆனால் இதுவரை எம்மை எதற்காக அழைத்திருக்கிறார்களென்பது தெரியாது.

ஆனாலும் ஜனாதிபதி அங்கு போய் வந்த அடிப்படையில் இந்திய அரசு மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டுமென ஜனாதிபதியிடம் வலியுறுத்தியிருக்கிறது. எனவே பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கின்றோம். ஆனாலும் ஜனாதிபதியைப் பொறுத்தவரை கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு வரவேண்டுமென்பது தான் அவரது நிலைப்பாடாகும். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்குள் சும்மா போய் எதுவும் நடக்காது. அப்படிப் போவதனால் சரியானதொரு பிரேரணையைக் கொண்டு போக வேண்டும்.

ஆகவே இருதரப்புப் பேச்சுவார்த்தை இடம்பெற்று அதில் தீர்வு ஒன்று எட்டப்பட்டு அதனை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குக் கொண்டு செல்வது தான் நல்லது. இதனை நாம் இந்திய தரப்பு சந்திப்பு இடம்பெறும் போது விளக்கவுள்ளோம்.

மக்களின் ஆதரவோடு பேச்சுவார்த்தை நடைபெற வழிவகை செய்ய வேண்டும் என்பதையும் நாம் இந்திய அரசுக்கு வலியுறுத்திச் சொல்லவுள்ளோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு-இந்திய சந்திப்பு தொடர்பாகக் கூடிப்பேசி ஒரு முடிவுக்கு வரவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டமைப்பிலுள்ள கட்சித் தலைவர்கள்கூடிப் பேசியே இது தொடர்பான முடிவை எடுப்போம். ஆனாலும் நான் மேலே கூறிய விடயங்களை இந்திய சந்திப்பின் போது முக்கிய விடயங்களாகக் கொள்வோம் என்றார்.

## இலங்கையிலிருந்து மலேரியா 2015 இல் விடைபெறுகிறது

நாட்டில் இதுவரையில் மலேரியா நோய்த் தாக்கம் நூற்றுக்கு 95 வீதமாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டளவில் முற்று முழுதாக இலங்கையிலிருந்து மலேரியா நோயினை விரட்டி அடிக்க முடியும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எப்படியிருப்பினும் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு பயணிப்பவர்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படுவதாகவும் அவ் அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் நாடு முழுவதும் மலேரியா நோய்த் தாக்கத்திற்கு உள்ளான 20 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பொருளாதார நிலை ஐ.எம்.எவ். ஆராய்வு

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலை தொடர்பாகச் சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எவ்) அதிகாரி கள் ஆராய்ந்து வருவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி, மார்ச் மாதங்களில் நாணயப் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றத்தை தொடர்ந்து, இலங்கையின் பொருளாதார நிலை குறித்து அவர்கள் ஆராய்ந்து வருவதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து மேலும் 500 மில்லியன் டொலர்களை கடனாக பெறுவது தொடரபில் பேச்சுவார்த்தை இடமபெற்றிருந்தது.

இது தொடர்பில் எதிர்காலத்திலும் ஆலோசிக்கப்படும் என்று மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

# இலங்கை அகதிகளுக்கு குடியுரிமை வலியுறுத்துகிறார் ரவிசங்கர்

இந்தியாவின் தமிழ்நாட்டிலுள்ள அகதி முகாம்களில் வாழ்ந்துவரும் இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மத்திய மற்றும் மாநில அரசாங்கம் எடுக்க வேண்டுமென வாழும் கலையமைப்பின் ஸ்தாபகரும் ஆன்மீகத் தலைவருமான ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் சுமார் 25 - 30 வருடங்களாக இலங்கைத் தமிழர்கள் வாழ்ந்துவருகின்ற நிலையில், இதனையிட்டு தமிழ்நாடு பெருமையடைவதற்கு ஒன்றுமில்லையெனவும் அவர் கூறினார்.

பெருமளவான பங்களாதேஷ் மற்றும் நேபாள பிரஜைகளுக்கு குடியுரிமை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். இலங்கையைச் சேர்ந்த தமிழர்களுக்கு எங்களால் ஏன் குடியுரிமை வழங்க முடியாது எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.


## தேவை

### வன்னிப் பிரதேச செய்தியாளர்கள்

**1. கிளிநொச்சி 2. அக்கராயன் 3. பூநகரி 4. முள்ளியவளை 5. முல்லைத்தீவு 6. மல்லாவி 7. துனுக்காய் 8. விசுவமடு 9. மாங்குளம், 10. கனகராயன்குளம், 11. புளியங்குளம் 12. நெடுங்கேணி, 13. வவுனியா 14. மன்னார், 15. மடு**

ஆகிய பிரதேசங்களிலிருந்து தினமுரசு பத்திரிகைக்குச் செய்தியாளர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

தெரிவுசெய்யப்படுவோருக்கு சிகரம் ஊடக இல்லத்தின் ஊடாக,

1. செய்தி சேகரிப்பு மற்றும் அறிக்கையிடல்
2. விற்பனை ஊக்குவிப்பு
3. விளம்பர சேகரிப்பு

ஆகிய துறைகளில் விசேட பயிற்சி வழங்கப்பட்டு, அதிகளவு வருமானம் பெற வழிகாட்டப்படுவதுடன், தேர்ச்சி பெறுபவர்கள் நிரந்தரப் பணியாளர்களாகவும் இணைத்துக்கொள்ளப்படுவர்.

- ⇨ முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
- ⇨ க.பொ.த. சாதாரணதரம் வரையில் படித்த ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ளவர்கள், சுருக்கமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையுடன், ஊடகத்துறையில் பணியாற்ற ஆர்வம் கொண்டமைக்கான காரணத்தை விளக்கும் சிறு ஆக்கத்தையும் இணைத்து பின்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

**வன்னிப் பிரதேச செய்தியாளர்,**
**தினமுரசு,**
**373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**


# வட்சனின் அதிரடியால் வீழ்ந்தது தென்னாபிரிக்கா

(கொழும்பு)


வட்சனின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் அவுஸ்ரேலிய அணி இலகுவான வெற்றிபெற்றது.

உலகக் கிண்ண ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் 'ஏ' பிரிவுக்கான சூப்பர் 8 ஆட்டமொன்று நேற்றுக் கொழும்பு பிரேமதாச விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் தென்னாபிரிக்க அணியும், அவுஸ்ரேலிய அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி முன்னணித் துடுப்பாட்ட வீரர்களை விரைவாக இழந்து தடுமாறியது. இருப்பினும் பின்னர் இணைந்த டுமினி, பீற்றர்சன் ஆகியோரின் துடுப்பாட்டம் அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தியது. இறுதியில் தென்னாபிரிக்க அணி 20 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டுமினி 30, ரொபின் பீற்றர்சன் ஆட்டமிழக்காது 32 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டொஹெரி மூன்று, வட்சன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 147 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி 17.4 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திய வட்சன் 47 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், எட்டு பவுண்டரிகள் அடங்கலாக 70 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றியை இலகுபடுத்தினார். மற்றும் மைக் ஹசி ஆட்டமிழக்காது 45 ஓட்டங்களைப் பெற்றார். இப்போட்டியின் ஆட்டநாயகனாக வட்சன் தெரிவானார்.

## பாகிஸ்தானை தோற்கடித்தது இந்தியா



ருவென்ரி- 20 உலக கிண்ண தொடரின் சூப்பர்-8 பிரிவில் நேற்றைய இரண்டாவது போட்டியில், இந்திய அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வெற்றி கொண்டது

கொழும்பு பிரேமதாசா மைதானத்தில் நடந்த இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது.

இதன்படி களமிறங்கிய பாகிஸ்தான் 19.4 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 128 ஓட்டங்கள் எடுத்தது.

அவ்வணி சார்பாக மலிக்28,அக்மல்21 ஓட்டங்களை கூடுதலாகப் பெற்றனர்

இந்திய தரப்பில் பாலாஜி 3, யுவராஜ், அஷ்வின் ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

இதனையடுத்து 129 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணியின் தொடக்க வீரர் கம்பீர் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.

ஷேவாக் 29 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். இதன் பின் இணைந்த ஹேர்லி (78 ஓட்டங்கள்), யுவராஜ் (19 ஓட்டங்கள்) ஜோடி அதிரடியாக விளையாடினர்.

முடிவில் இந்திய அணி 17 ஓவரில் 129 ஓட்டங்கள் எடுத்தது. இதனையடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெ[illegible]

ஆட்டநாயகன் விருது விராட் கோலிக்கு வழங்கப்பட்ட[illegible]

# அவுஸ்ரேலியா செல்ல முயற்சி நேற்றும் 36 பேர் கைது

சட்டவிரோதமான முறையில் படகு மூலம் அவுஸ்ரேலியா செல்ல முயன்ற 36பேரை கொடுவாகட்டு கடற்கரையிலிருந்து சுமார் 20 கடல் மைல் தொலைவில் வைத்து நேற்று அதிகாலை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

ஏ.பி.ஜ என்ற படகு மூலம் அவுஸ்ரேலியா பயணிக்க முயன்ற இவர்களில், 28 தமிழர்கள், 7 சிங்களவர்களுடன் முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த ஒருவரும் அடங்குவதாகக் கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

இவர்களில், 3 பெண்களும் 8 சிறுவர்களும் அடங்குகின்றனர். கைது செய்யப்பட்ட அனைவரும், யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, வாழைச்சேனை மற்றும் கற்பிட்டி போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இவர்கள், திருகோணமலை துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக இரகசிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் கடற்படையின் பேச்சாளர் மேலும் கூறினார்.

## கைதடி சாந்தி நிலையத்தில் முதியோர் தின நிகழ்வு ஆரம்பம்

(கைதடி)

முதியோர் வாரத்தினை முன்னிட்டு கைதடி அரச முதியோர் இல்லமும், வடக்கு மாகாண சமூக சேவை திணைக்களமும் இணைந்து கண்காட்சி மற்றும் வழிப்புணர்வு நிகழ்வுகளையும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

'முதியோரைச் சமூகத்தில் வைத்துப் பராமரித்தல்' என்னும் தொனிப்பொருளில் இடம்பெறும் இந்த நிகழ்வுகளானது கைதடி சாந்தி நிலையத்தில் இன்று முதல் எதிர்வரும் 7ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதுடன், இந்நிகழ்வுகள் யாவும் இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படும்.

வடமாகாண முதியோர் இல்லங்களை ஒருங்கிணைத்து மேற்கொள்ளப்படும் இந்நிகழ்வில், முதியோரைக் கௌரவப்படுத்தும் முகமாக அவர்களால் உற்பத்தி செய்த பொருட்களைக் காட்சிப்படுத்துவதுடன், விற்பனையும் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், முதியோர் வாரத்தை முன்னிட்டு விசேட நிகழ்வுகள் மற்றும் முதியோருக்கான விளையாட்டுக்கள் என்பனவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுகளை பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பார்வையிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (80)

## நன்கொடை வழங்கல்

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு கொழும்பு லயன்ஸ் கழகத்தின் பிராந்தியப் பிரிவின் நன்கொடை வழங்கும் நிக்ழ்வு இன்று இடம்பெறவுள்ளது.

சிறுவர் தின நிகழ்வில், புற்றுநோயால் பாதிப்புற்றிருக்கும் சிறுவர்களின் நலனுக்காக கொழும்பு லயன்ஸ் கழகத்தினர் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். தாதியர் பயிற்சி நிலையத் தில் ஒரு இலட்சம் ரூபா நிதியினை நன்கொடையாக வழங்கவுள்ளனர் என லயன்ஸ் கழக திட்டமிடல் இணைப்பாளர் ரமேஸ் தெரிவித்தார். (இ)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஒக்ரோபர் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.